விலை: ரூபா 20

பக்கங்கள் 28

தொடர்ந்தும் தத்தளிக்கும் சென்னை



பக்கம் 15

உதயன்

சுடர் 31 கதிர் 008 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 18, வெள்ளிக்கிழமை 04.12.2015

04 DEC 2015

29°c - 29°c

மழைக்கான சாத்தியம் உண்டு

# கைதிகளின் பிரச்சினை நீடிக்க அனுமதியோம்



## நாடாளுமன்றத்தில் நேற்று அரசுக்கு சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 4

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதில் சட்டப் பிரச்சினை இல்லை. அரசியல் பிரச்சினையே உள்ளது. எனவே, இதை நீடித்துக் கொண்டுசெல்ல இடமளிக்கமாட்டோம் என்று நேற்றுச் சபையில் உறுதியாகத் தெரிவித்த எதிர்க் கட்சித்தலைவர் இரா.சம்பந்தன், கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்ய ஜனாதிபதியும், பிரதமரும் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதேவேளை, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜே.வி.பியினரும், பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவும் இருக்கின்றனர் என்பதை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்த அவர், கைதிகளின் விடுதலையைத் தேசிய பாதுகாப்புடன் தொடர்புபடுத்தி வெளியிடப்படும் யதார்த்தமற்ற கருத்துக்களைக் கவனத்தில் எடுக்கக்கூடாது என்றும் ஆலோசனை வழங்கினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக தாமாகவே முன்வந்த அரசு ஐ.நாவில் உறுதி வழங்கியதற்கமைய அதை நீக்கவேண்டும் என வலியுறுத்திய அவர், கைதிகளின் விடுதலை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதில் அரசின் தாமதம் ஆகியவை குறித்துக் கவலையும் வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் பிரதமருக் கான ஒதுக்கீடுகள் பக். 26

“தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் மீது வழக்குத் தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தால் அவர்கள் எப்போதோ விடுதலை செய்யப்பட்டிருப் பார்கள். ஆனால், இவர்கள் 15, 20 வருடங்களாகச் சிறையில் இருக்கின்றனர். இவர்களின் விடுதலை தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் எனக் குறிப்பிடுகின்றனர். இது யதார்த்தமற்றது; மிகைப்படுத்தப்பட்டது.”

## புதிய வதை முகாம்கள் இல்லை என்கிறது அரசு

### இருந்தால் முறையிடுமாறு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.4

இலங்கையில் புதிய இரகசிய சித்திரவதை முகாம்கள் எவையும் இயங்கவில்லை என அரசு அறிவித்துள்ளது.



எந்தப் பகுதியிலும் அவ்வாறு இரகசிய சித்திரவதை முகாம்கள் காணப்பட்டால், அது குறித்து முறைப்பாடு செய்ய முடியும் என வெளிவிவ கார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது வெளிவிவகார அமைச் பக். 26

## வெட்டிப் பேச்சால் வேலைகளை கோட்டை விடும் அரச அதிகாரிகள்

### வடக்கு முதலமைச்சர் சாடல்

யாழ்ப்பாணம், டிசெ 4.

ஓடி உழைத்தும் எமக்கு வருமானங்கள் போதவில்லை. வீண்விரயங்கள்- ஆடம்பரங்களினால் அநாவசியச் செலவுகள் செய்து கொண்டிருக்கின்றோம். ஒருவர் ஒன்றைச்செய்தால் இரண்டு மடங்காகச் செய்ய வேண்டும் என்ற சில்லறைத் தனங்கள் எம்முள் குடிகொண்டிருக்கின்றன. இவற்றிலிருந்து விடுபடவேண்டும் என்று



சுட்டிக்காட்டிய முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அரச அலுவலகங்களில் அதிகாரிகள் வெட்டிப் பேச்சுகளில் ஈடுபட்டு வேலைகளைக் கோட்டை விடுகின்றனர் என்றும் கடுமையாகச் சாடியுள்ளார். கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் செய்வோம் பக். 26

## காய்ச்சலால் நேற்றும் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 4

காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காது யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்தார். காய்ச்சலால் முன்னரும் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் நேற்று மற்றொருவர் உயிரிழந்துள்ளார்.

இதற்கான காரணம் தெரிய பக். 26

## சென்னை மக்களுக்கு மைத்திரி அனுதாபம்

கொழும்பு, டிசெ.4

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சென்னை மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, இந்தக் கடினமான சந்தர்ப்பத்தில் நாமும் இணைகின்றோம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது டுவிட்டர் வலைத்தளத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தமிழகத்தில் தொடர்ந்த கனமழையினால், சென்னை மா நகரம் வெள்ளத்தில் முழுமையாக மூழ்கியுள்ளது. இதனால் 15 ஆயிரம் பக். 26




அதுதான் அவையளுக்கு அன்றாட வேலை பாருங்கோ.

## சுன்னாகம் விபத்தில் முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 4

சுன்னாகத்தில் நேற்று இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காது சில மணிநேரங்களின் பின் உயிரிழந்தார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த மரியான் பிரான்ஸிஸ் சேவியர் (வயது -79) என்பவரே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மல்லாகத்துக்கு மோட் டார் சைக்கிளில் பக். 24

## திருமண சாட்சியாக சென்றமையால் வாக்கெடுப்புக்கு செல்லாத மகிந்த

கொழும்பு, டிசெ. 4

திருமண வீட்டுக்குச் சாட்சிக் கையெழுத்து வைக்கச் சென்றமை காரணமாகவே, நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பில் மகிந்த ராஜபக்ச பங்கெடுக்கவில்லை என்று அவரது பேச்சாளர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தின் பக். 25

## பிரமாணக் கோவைக்கு முரணாக நிதி கையாள்கிறது மாகாண சபை

### எதிர்க்கட்சித் தலைவர் தவராசா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 4

நிதிப் பிரமாணக் கோவைகளுக்கு முரணாக வடக்கு மாகாண சபை நிதியைக் கையாள்வதாக, கணக்காய்வாளர் நாயகத்துக்கு வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கடிதம் அனுப்பியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், பீட்டா பவர், ஜூல் பவர் ஆகிய நிறுவனங்களுக்கு மாகாண பக். 24

## 13 தமிழ்க் கைதிகள் பரீட்சை எழுதுவர்

கொழும்பு, டிசெ. 4

தமிழ் அரசியல் கைதிகள் 13 பேர் இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் கைதிகளாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகள் 20 பேர் இந்த மாதம் நடைபெறவுள்ள பரீட்சைக்குத் பக். 26

## மீண்டுமொரு போர் ஏற்படாமல் நல்லிணக்கம் உருவாக்கப்படும்

### ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.4

இலங்கையில் மீண்டுமொரு போர் ஏற்படாத வகையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும், நட்புறவையும் கட்டியெழுப்புவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது விடயத்தில் அரசு அர்ப்பணிப்புடன் வடக்கையும் தெற்கையும் இன, மொழி, மத ரீதியாக ஒன்றிணைக்கும்



பக். 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆழக் குழிகளுக்குள் விழுந்தோரை மீட்பதற்குரிய வசதிகள் ஏதுமில்லை

## யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.4
விசவாயுத் தாக்கம் அல்லது ஆழமான இடங்களுக்குள் எவராவது சிக்கி னால் அவர்களை மீட்பதற்குரிய வசதிகள் யாழ்.மாநகர சபையிடம் இல்லாதமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக எவராவது காற்றுப்புக முடியாத கிடங்குகள், குழிகளுக்குள் சிக்கினால் அவர்கள் இறக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில் மோட்டர் கிடங்கு ஒன்றுக்குள் இருந்து இருவர் கடந்த புதன்கிழமை சடலமாக மீட்கப்பட்டிருந்தனர். இவர்கள் வாயுக்கசிவின் காரணமாக உயிரிழந்தனர் என்று முதலில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சம்பவ இடத்துக்கு வந்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் வாயுக்கசிவின் காரணமாக மூச்சுத் திணறல் ஏற்பட்டு மயங்கியிருக்கக் கூடும் என்று சந்தேகித்து, அது தொடர்பில் யாழ். மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினருக்கு தகவல் வழங்கினர்.

ஆனால் அவர்களை மீட்கத் தம்மிடம் ஒட்சிசன் சிலிண்டர் இல்லை எனத் தெரிவித்ததை அடுத்தே மீட்புப் பணி சிக்கலை அடைந்தது. அதையடுத்து வைத்தியசாலையில் இருந்து சிலிண்டரைப் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும் குறித்த இருவரும் இராணுவத்தினரால் சடலங்களாவே மீட்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது எம்மிடம் தீ விபத்து ஏற்பட்டால் தீயை அணைப்பதற்குரிய வசதிகளும், உயரமான கட்டடத்தில் எவராவது சிக்கினால் அவர்களை மீட்பதற்குரிய வசதிகளும் மாத்திரமே உள்ளன என்று தெரிவித்தார்.

அவற்றை விட மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கு பணியாளர்களுக்குப் பயிற்சிகள் போதாது என்றும் அவர் கூறினார். (ஐ-109)

# விடுதலையான பின் புனர்வாழ்வு எதற்கு?

## அரசியல் கைதி ஒருவர் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.4
எந்தவிதக் குற்றங்களும் புரியாமல் ஆறரை வருடங்களாகச் சிறையிலிருந்து விசாரணையின் மூலமாகச் சட்டப்படி விடுதலையான தனக்கு புனர்வாழ்வு வழங்கப் படவுள்ளது என்று பெயர் கூறப்பட்டிருப்பது தொடர்பில் அரசியல் கைதி ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

தனக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தர வேண்டம் என்று கோரியே கஜேந்திரன் எனும் குறித்த அரசியல் கைதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் திகதி தான் கல்கிசைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கும் கஜேந்திரன், அங்கு பலவகையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டேன் என்றும், சம்மதமின்றிப் பலவந்தமாகவும் தன்னிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று பெறப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே தனக்கு எதிராகக் கொழும்பு மற்றும் வவுனியா மேல்நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டது என்றும் தெரிவித்தார்.

குறித்த வழக்கு வவுனியா மேல்நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது விசாரணை அதிகாரிகளும், மொழி பெயர்ப்பாளர்களும் விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியாளர்கள் முன்னுக்குப் பின்னான தகவல்களை வழங்கியதாலும், மொழி பெயர்ப்பாளர் தகுந்த தராதரம் கொண்டிருக்காமையாலும், பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சந்தேக நபரால் சுயமாக வழங்கப்பட்டமை நிரூபிக்கப்படாததனாலும், தான் கடந்த மார்ச் மாதம் விடுதலை செய்யப்பட்டேன் என்று அவர் தெரிவித்தார்.

அவ்வாறே கொழும்பு மேல்நீதிமன்றத்தாலும் விடுதலை செய்யப்பட்டேன் எனவும் குறிப்பிட்டார்.

அவ்வாறு வந்துள்ள தனக்கு புனர்வாழ்வு வழங்க வேண்டும் என்று கூறி கொழும்பு மகசீன் சிறைச்சாலையிலும் அநுராதபுரம் சிறைச்சாலையிலும் தனது பெயர் விசாரிக்கப்பட்டது என்றும், வீட்டிலும் விசாரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ள அவர் அந்தச் சம்பவங்கள் தனக்கு மனவருத்தத்தைத் தருவதாகவும் கூறியுள்ளார்.

இதற்கு உரிய தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என்றும் அவர் முறைப்பாட்டில் கோரியுள்ளார். அவரது முறைப்பாடு தொடர்பில் உரிய ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் பதிலை எதிர்பார்த்துள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார். (ஐ-4)

# உப உணவு செய்கைக்கு ஊக்குவிப்பு

கிளிநொச்சி, டிசெ.4
கிளிநொச்சி, பச்சிலைப் பள்ளி (பளை) பிரதேச செயலகத்துக்குட்பட்ட புலோப்பளை கிழக்கு கிராமத்தைச் சேர்ந்த 178 விவசாயிகளுக்கு உப உணவு செய்கைக்கான தானியங்கள் ஐ.சி.ஆர்.சி நிறுவனத்தால் வழங்கப்படவுள்ளன.

500 கிலோ பயறு, 550 கிலோ உழுந்து, 2280 கிலோ கச்சான், 500 கிலோ கௌப்பி என்பன விளை நிலங்களுக்கு ஏற்ற வகையில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. (ற)

# மருத்துவ அதிகாரிகள் நேற்று அடையாள வேலை நிறுத்தம்

## நாடளாவிய ரீதியில் நடந்த போராட்டத்தால் நோயாளர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,டிசெ.4
நான்கு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து வடக்கு உட்பட நாடளாவிய ரீதியில் மருத்துவ அதிகாரிகள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நோயாளர்கள் சிகிச்சையைப் பெறுவதில்சிக்கலை எதிர்கொண்டதோடு வெளிநோயாளர்கள் நீண்டநேர ஏமாற்றத்தின் பின்னர் திரும்பிச் சென்றனர்.



மருத்துவ சங்கம் உட்பட 17 தொழிற் சங்கங்கள் இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் சில நிறைவேற்றப்படவில்லை எனவும், அரச உத்தியோகத்தர்களுக்கு இருந்து வந்த சில வரப்பிரசாதங்களைப் புதிய வரவு செலவுத் திட்டம் இல்லாமல் செய்கிறது என்றும் தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

அவற்றை வழங்குமாறு கோரி அந்தச் சங்கங்கள் நேற்றைய போராட்டத்தில் ஈடுபட்டன. நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம்பித்த அவர்களது அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் இன்று காலை 8 மணியுடன் நிறைவுக்கு வருகின்றது என்றும் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இவர்களது போராட்டத்தினால் வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் போன்றவற்றில் வழமை போன்று நேற்றுக் காலையும் நோயாளர் கூட்டம் அலைமோதியது.

நேற்றைய வேலை நிறுத்தம் பற்றி முன்னரே அறிவிக்கப்படாததால், மாதத்தில் ஒரு தடவை நடைபெறும் கிளினிக்குகளுக்குத் தூர இடங்களிலிருந்து வந்திருந்தவர்களே அதிகம் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவு மட்டும் இயங்கின. இந்தப் பிரிவில் கடமையாற்றியவர்கள் விடுதிகளில் தங்குவோருக்கு மட்டும் சிகிச்சையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-,4,9)

# கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,டிசெ.4
நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் கலை விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லை தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சனசமூகநிலையத்தின் தலைவர் சு.கிருஸ்ணராஜா தலைமையில்நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர்க.சத்தியமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக ஆலய பரிபாலன சபைத் தலைவர் பொ.கதிரமலையும் கலந்துகொள்ளவுள்ளனர்.

முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வும், தரம் 5 புலமைப்பரீட்சை, க.பொ.த.சாதாரணதரம், க.பொ.த.உயர்தரம் பரீட்சைகளில் சித்தியடைந்தோருக்கு பரிசில் வழங்கலும் நடைபெறவுள்ளன. (ஐ-422)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.4
இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த மாதம் 19 ஆம் திகதி கைதான இந்திய மீனவர்கள் 14 பேரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் இராமலிங்கம் சபேசன் நேற்று உத்தரவிட்டார்.

நெடுந்தீவு கடற்பரப்பை அண்மித்த இலங்கைக் கடற்பரப்பில் 3 விசைப்படகுகளுடன் எல்லை தாண்டி மீன் பிடித்த இந்திய மீனவர்கள் 14 பேரையும் காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் கைது செய்திருந்தனர். (ஐ-107)

# மாணவர்கள் விசாரித்ததில் 4 மாணவர்கள் வைத்தியசாலையில்!

## ஸ்கந்தபுரம் பகுதியில் உள்ள பாடசாலையில் சம்பவம்

கிளிநொச்சி,டிசெ.4
கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் மேல் வகுப்பு மாணவர்கள், கீழ் வகுப்பு மாணவர்களை விசாரணைக்கு உட்படுத்தியதில் காயமடைந்த கீழ் வகுப்பு மாணவர்கள் நான்கு பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலை அதிபரின் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான அலைபேசியைக் காணவில்லை எனத் தெரிவித்து, அதிபருடைய பணிப்பில் சந்தேகம் என்ற பெயரில் தரம் ஆறு மாணவர்களில் மூவரும், தரம் எட்டு மாணவர்களில் ஒருவரும் தரம் ஒன்பது மாணவர்களினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணைகளின் போது மாணவர்களை அறை ஒன்றுக்குள் அழைத்துச் சென்ற தரம் 9 மாணவர்கள், குறித்த கீழ் வகுப்பு மாணவர்களைக் கடுமையாகத் தாக்கியும், அடித்தும், சுவருடன் தலையை மோதியும் விசாரணை செய்துள்ளனர்.

காயமடைந்த மாணவர்கள் பிற்பகல் வீடு சென்று பெற்றோருக்குத் தெரியப்படுத்தவே உடனடியாக பெற்றோர்களால் அக்கராயன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பட்டுள்ளனர்.

இதனால் பாதிப்புக்குள்ளான நான்கு மாணவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுள்ளனர். ஒரு மாணவன் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக செவி வழியாக நீர் வடிந்த வண்ணம் வைத்திசாலையில் தற்போதும் சிகிச்சை பெற்று வருகின்றார். குறித்த சம்பவமானது பெற்றோர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ-21,ரி3)

“குறித்த பாடசாலை அதிபரின் பெறுமதி மிக்க கைத் தொலைபேசி காணாமல் போனதை அடுத்தே மாணவர்கள் விசாரணை நடத்தியுள்ளனர். விசாரணையின்போது குறித்த 4 மாணவர்களையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்ஜட்டுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆதரவு வழங்காது

நல்லாட்சி அரசின் வரவு - செலவுத் திட்டத்திற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆதரவு வழங்காது என்றும், அதன் காரணமாகவே நேற்றுமுன்தினம் வாக்களிப்பில் பங்கெடுக்கவில்லை என்றும், அந்தக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அரசுக்கு எமது எதிர்ப்பை வெளியிடும் முகமாகவும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவருக்கு எமது அதிருப்தியைத் தெரிவிப்பதற்கும் எமது வேண்டுகோளை ஏற்று தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்த மக்களின் உணர்வுகளை மதிக்கின்ற வகையிலும் அதேவேளை ஐக்கியத்திற்குக் குந்தகம் ஏற்படாத விதத்திலும் நாம் இந்த வாக்கெடுப்பிலிருந்து ஒதுங்கியிருக்கத் தீர்மானித்தோம்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டம் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில், எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் சிவமோகன் ஆகியோர் பங்கெடுக்கவில்லை.

குறித்த கூட்டத்தில் பங்கெடுக்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும், நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பிலும் பங்கெடுக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களும் நல்லாட்சி அரசு என்று அழைக்கப்படுகின்ற இந்த அரசை உருவாக்குவதற்கும், குடும்ப சர்வாதிகார ஆட்சியிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கும் எதுவித நிபந்தனைகளுமின்றி அரும்பங்காற்றியுள்ளனர் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

2016 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு எதிர்பார்த்த நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. அரசியல் கைதிகள் விடுதலை, தமிழர்கள் வாழ்கின்ற மாவட்டங்களில் தமிழ் அரச அதிபர்களை நியமித்தல் போன்ற சிறிய அரசியல் கோரிக்கைகளைக்கூட இந்த நல்லாட்சி அரசு நிறைவேற்றவில்லை. இனிமேலாவது அரசு எமது மக்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க முன்வரவேண்டும் என்றும், அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் தமது பூரண இதயசுத்தியுடனான அழுத்தங்களை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (வ-5)

SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 430
சீட்டிழுப்பு திகதி 2015.12.03

வெற்றி இலக்கங்கள்
07 29 62 68 T

அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 44,532,880/=

ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1216
சீட்டிழுப்பு திகதி 2015.12.03

வெற்றி இலக்கங்கள்
11 43 47 54 J

அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 36,055,600/=

*Invitation*

*Please join us when our choir presents a Christmas experience you'll never forget*

through the Christmas Musical

**Hope of the Broken World**

*on*

Friday, December 04,2015, 4.00 p.m.

*At*

The Jubilee Hall

Principal, staff and students,
Uduvil Girls' College.

ஐடியல் அக்கடமி

சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய்
K.K.S. வீதி, யாழ்நகர். (புதிய கரிக்கணன் பிறிண்டேர்ஸ் பின்புறம்)

தரம் 6 முதல் O/L வரை
கல்வியாண்டு - 2016
ஆரம்பம் : 07.12.2015 திங்கள்
சண்டிலிப்பாய் 9.30 AM | யாழ்.நகர் 12.30 PM


KeyBoard - Organ
புதிய பிரிவுகள் ஆரம்பம்

Batch 1 - Wed,Fri 5-6 PM
Batch 2 - Wed,Fri 6-7 PM
Batch 3 - Sat,Sun 2-3 PM

பதிவுகளுக்கு நேரில்,
ஆசிரியர் : ஸ்ரீதகன்
கல்வியங்காட்டு சந்தியில் MCAI CAMPUS
Web: www.mcai.edu.lk Phone : 775520940

MCAI

கண்ணீர் அஞ்சலி



திரு. லயன் பிரான்சிஸ்பிள்ளை அன்ரனி சில்வெஸ்டர் (முன்னாள் AB/ MAYURI LANKA (PVT) LTD. பிராந்திய விற்பனை முகாமையாளர்) யாழ். கோப்பாயைப் பிறப்பிடமாகவும் யாழ். ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.லயன் பிரான்சிஸ்பிள்ளை அன்ரனி சில்வெஸ்டர் அவர்கள் 01.12.2015 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும். உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்
றாபா பன்முக வர்த்தகம், சுப்பருஸ்,
இல. 104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வாடகைக்கு

அரச பணிபுரியும் பெண்களுக்கு நல்லூர் பகுதியில் சமையலறை வசதியுடன் அறை வாடகைக்கு உண்டு. முற்பணம் எதிர்பார்க்கப்படும்.
தொடர்பு: 0714620806

தேவை

புத்தூர் பிரதேசத்துக்கு உட்பட்ட இராச வீதியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு கணினி அனுபவம் உள்ளவர் தேவை.
தொடர்பு: 077 087 2128

நூல் வெளியீடு

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி
உயர்தர மாணவர் மன்ற
வெளியீடு
இந்து உலா 2014 / 2015

இன்று பகல் ஒரு மணி
இடம் : பொன் சபாபதி மண்டபம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உயர்தர மாணவர் மன்றம்
கிளி/இந்து கல்லூரி.

"கல்வியே கண் மற்றெல்லாம் பின்"

26 ஆம் ஆண்டில்
ஏசியன் அக்கடமி
கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

புதிய கல்வியாண்டு - 2016
தரம் 01 முதல் O/L வரை
புதிய வகுப்புகள் ஆரம்பம்
05.12.2015 சனிக்கிழமை மாலை 3.15 மணி

- சிறப்புத்தேர்ச்சி பெற்ற அநுபவமுள்ள ஆசிரியர் குழாம்.
- அனைத்து மாணவர்களுக்கும் இலவச கணினி (கொம்பியூட்டர்) கல்வி.

"விரையுங்கள் அனுமதிக்கு, உடையுங்கள் கல்வித் தடைகளை."

நிர்வாக இயக்குநர்:
திரு. ஷங்கர் வாமன் (விஞ்ஞான ஆசிரியர்)

டாசோன் நாய்க்குட்டி விற்பனைக்கு

ஒரு மாதம் நிரம்பிய டாசோன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை சந்தி.

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்



இஞ்சி இடுப்பழகி
மஜெஸ்டிக் பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30

தூங்காவனம்
சில்வர் 10.15 / 2.15 / 6.15

SPECTRE 007
ப்ரொன்ஸ் 10.30/ 2.30 / 6.30

விசாரணை ☏ 021- 2227712

facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

NEW SCIENCE HALL - JAFFNA

A/L - 2016 Day Classes

பௌதீகவியல்

G. பிரபா

கடந்த கால வினாவிடை வகுப்புக்கள் (அலகு ரீதியான)
திங்கள் முதல் வெள்ளி வரை
11.30- 1.30
மாதிரி வினாக்கள், அமைப்புக்கட்டுரை, கட்டுரை
செவ்வாய், வியாழன், வெள்ளி 1.30- 2.30 (08.12.2015 முதல்)
Theory Classes - மின்னியல்
சனி, ஞாயிற்று 3.30- 5.30
ஆரம்பம் 05.12.2015

NEW SCIENCE HALL
Kannathiddy Road, Jaffna.

Chemistry
பல புதிய பிரிவுகள் ஆரம்பம்

By:- G.BENO (B.Sc, PGDE)

2017- Thermo
பிரிவுகள் I Sat, Sun - 9.30 - 10.30 am
பிரிவுகள் II Tue, Wed - 3.30 - 4.30 pm

2016- அயன் சமநிலை
Sat, Sun : 11.30 - 1 pm

By:- T.சுசாந்தன் (B.Sc)

2017- Gases & Inorganic
பிரிவு I Sat, Sun - 10.30 - 11.30 am
பிரிவு II Tue, Wed - 4.30 - 5.30 pm

2016- அவத்தைச் சமநிலை
Sat, Sun : 1 - 2.30 pm

விடுமுறை காலத்தில் முழுநாள்களும் வகுப்புக்கள் நடைபெறும்
ஆரம்பம் 05.12.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

### FACULTY OF MEDICINE

1. **Senior Professor/Professor of**
   Anatomy/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Forensic Medicine/ Pharmacology/ Medicine/ Obstetrics & Gynaecology/ Paediatrics / Surgery
2. **Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in**
   Anatomy/ Biochemistry/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Microbiology/ Forensic Medicine / Psychiatry/ Paediatrics

   Note:
   Applications will be entertained from candidates with **MBBS** degree as their first degree for the above posts.
3. **Temporary Scientific Assistant Grade II** in Biochemistry/ Microbiology

**PARA MEDICAL DEGREE PROGRAMME**

4. **Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in** Medical Laboratory Sciences

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.67100 - 11x1425 - 82775/-p.m |
| Professor | Rs.56505 - 13x1310 - 73535/-p.m |
| Senior Lecturer Gr.I | Rs.45545 – 7x1050 – 52895/-p.m |
| Senior Lecturer Gr.II | Rs.39755 – 11x790 – 48445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27775 – 10x645 – 34225/-p.m |
| Scientific Assistant Grade II | Rs.24930 – 19x360 – 31770/- p.m |

**Note:**
In addition to the above salary, the following allowances will also be paid:

i) Academic allowance – Senior Professor - 135% of the basic salary
Professor - 130% of the basic salary
Senior Lecturer Gr.I/Gr.II – 120% of the basic salary
Lecturer (Probationary) – 85 % of the basic salary
ii) Special allowance -20% of the basic salary
iii) Additional monthly allowance – 20% of the basic salary
iv) Cost of living allowance of Rs.7,800/-p.m.
v) Interim allowance of Rs.10,000/- p.m

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the permanent academic staff.

**Statutory benefits:**

1) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
2) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
3) Gratuity payments
4) Employees' Trust Fund benefits
5) Free Medical Services

**Closing date:**

**Post of Senior Professor/Professor** - **12.02.2016**
**Other posts** - **08.01.2016**

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA.**
**03.12.2015**

(C/20553)(10.15.17)


# மகிந்தவின் சம்பளம் நான்கரை லட்சம்

கொழும்பு, டிசெ. 4
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினருக்குரிய சம்பளத்தையும், முன்னாள் ஜனாதிபதிக்குரிய ஓய்வூதியத்தையும் பெற்று வருவதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். இதன் பிரகாரம் 4 லட்சத்து 54 ஆயிரம் ரூபாவை அவர் மாதாந்த வருமானமாகப் பெற்றுக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஜனாதிபதி ஒருவருக்குரிய ஓய்வூதியச் சம்பளமாக 3 லட்சத்து 49 ஆயிரம் ரூபாவையும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபாவையும் சம்பளமாகப் பெற்றுக் கொள்கின்றார். இவ்வாறு மகிந்த பெற்றுக் கொள்ளும் சம்பளப் பட்டியலை நாடாளுமன்றத்தில் காண்பித்த நிதியமைச்சர், இவ்வாறு அரச ஊழியர் ஒருவர் செய்திருந்தால் என்னவாகியிருக்கும் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

வரவு – செலவுத் திட்ட விவாதத்தின்போது நாடாளுமன்றத்துக்கு வந்து உரையாற்றாத முன்னாள் ஜனாதிபதி, விகாரைகளுக்குச் சென்று வரவு - செலவுத் திட்டத்தை விமர்சித்து வருவதாக கூறிய அமைச்சர், முடிந்தால் இங்கு வந்து விவாதிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

ஓய்வூதியம் பெறும் அரச ஊழியர்கள் சம்பளம் பெறுவதில்லை. ஆனால் மகிந்த ஜனாதிபதிக்குரிய ஓய்வூதியம், சம்பளம் இரண்டையும் ஒன்றாக பெற்று வருகிறார். அதற்கான ஆதாரங்களைச் சபையில் சமர்ப்பித்துள்ளேன். மகிந்தவின் பாதுகாப்புக்கு 107 பொலிஸார், 550 இராணுவத்தினர் மற்றும் பல டசின் வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

(த-5)


**வீடு வாடகைக்குத் தேவை**

நிறுவனம் ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தில் வீடு ஒன்று உடனடியாகத் தேவை.
தொடர்பு: 076 9129308



**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**வணிகக்கல்வி**

A/L - 2016
**சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்**
நேரம்:11.00 - 01.00 am
ஆரம்பம்:06.12.2015

A/L - 2017
**வணிக அமைப்புக்கள்**
நேரம்:10.00 - 11.00 am
ஆரம்பம்:06.12.2015

ஆசிரியர்: **S.பிரதீபன்**
(M.com,H.N.D.A.PGDE)
(சி.20548)
(13.15)

*உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்



**தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.பிராந்திய காரியாலயத்தின் கீழ்வரும் அனைத்து வாகனங்களுக்கும் 2016 ஆம் ஆண்டு தூய்விப்புச் செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன**

கேள்வி இல: **O&M/JAF/RM/EA/MEC/VEH/2015/223**

01. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய காரியாலயத்தின் கீழ்வரும் அனைத்து வாகனங்களுக்கும் 2016 ஆம் ஆண்டு தூய்விப்புச் செய்வதற்காக தகுதியான சேவை வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
02. யாழ்.மாவட்டத்துக்குத் தனியாகவும் கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்டத்துக்குத் தனியாகவும் விண்ணப்பிக்க வேண்டும்.
03. எமது தலைமைக் காரியாலயத்தில் மேற்கூறப்பட்ட சேவைக்காகப் பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
04. சேவை வழங்குநர்கள் கேள்வியுடன் தங்களது வியாபாரப் பதிவுச் சான்றிதழின் போட்டோ பிரதி ( Business Registration Certificate ) மற்றும் சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதிப் பத்திரத்தின் போட்டோ பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எமது அலுவலகத்தில் 04.12.2015 தொடக்கம் 14.12.2015 வரையான நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரையும் மாலை ஒரு மணி தொடக்கம் 3 மணிவரையும் விநியோகப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.
06. தங்களால் கோரப்படும் கேள்விகள் கேள்வி முடிவு தினத்திலிருந்து 400 நாள்களுக்குச் செல்லுபடியாகும்.
07. இக் கேள்வி அறிவித்தல், இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாகத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சகல சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டதாகும்.
08. பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களைத் தபாலுறையிலிட்டு, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் முடிவு திகதி குறிப்பிடப்பட்டு, கேள்வி கோரல் சபை, பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,இல.46, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ அல்லது பிராந்திய முகாமையாளர் காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம்.
கேள்விகள் அனைத்தும் 15.12.2015, 14.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினமே உடனடியாகத் திறக்கப்படும்.

பிராந்திய காரியாலயம்
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
இல.46, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/20551)
(11,15,17)

பிராந்திய முகாமையாளர் (யா)
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

யாழ் நகர மத்தியில் உள்ள
**சன்றைஸ் மெடிக்கிளினிக்கிற்கு**
பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

01. தாதியர்,
02. தாதிய உதவியாளர்,
03. கணினி இயக்குநர்
04. கணக்கு உதவியாளர்
05. பகல் நேர காவலாளி- ஆண் 50 வயதிற்கு மேல்

நேர்முகத்தேர்வு- 05.12.2015 சனி
காலை 8.00 - 10.30 மணிவரை
**சன்றைஸ் மெடிகிளினிக்**
NO.388 , ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6069

## வீடு வளவு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அண்மை யில் K.K.S வீதிக்கு மிக மிக அருகில் 4 அறைகள், 2 ஹோல், ஒரு குளியலறை, ஒரு சமையலறை, கராஜ், கிணறுடன் கூடிய நல்ல வீடு வளவு டன் உடனடி விற்பனைக்குண்டு. வாங்க விரும்பு வோர் 077 905 0274 என்ற தொலைபேசி இலக்கத்துடன் காலை 6 மணி முதல் காலை 9 மணி வரை மட் டும் தொடர்பு கொள்ளவும். (c/20472) (11,15,17)
(தரகர்கள் தேவையில்லை)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையில்



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2015 இல் 156 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்த

செல்வி. க. டிலக்சிகா அவர்களையும்

**மேலும் 148 புள்ளிகளைப் பெற்ற சு. வினித் மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற**

கா.கெவினோஜ்- 138 நி. தேனுகன்- 134
அ. முராஸ்அன்றோ- 128 இ.விஷானி- 122
த. நம்ருதன்- 118 வி. சானுஜன்-116

ஆகிய மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற க.வினோஜன் வ. தஷிகியா. த.டிலான் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களைக் கற்றலில் ஊக்குவித்த வித்தியாலய அதிபர் வெற்றிக்கு வழிகாட்டிய ஆசிரியர் அனைவரையும் நன்றியுடன் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

**வாழ்த்துவோர்:** பாடசாலைச் சமூகம்
யா / மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை

## முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் கோரல் -2016

முல்லைத்தீவுமாவட்டசெயலகம் மற்றும் 06 பிரதேசசெயலகங்களுக்குமான 2016ஆம் ஆண்டிற் குரிய கீழ் வரும் பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குநர் களாகபதிவு செய்யவிரும்புபவர்கள் அழைக்கப்படுகின்றனர். பதிவுகள் 31.12.2015ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் பதிவுவிண்ணப்பம் மாவட்டசெயலகம் முல்லைத்தீவில் 18.12.2015 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர்ரூபாய். 1000.00 இனை பணமாகச் செலுத்தி நேரடியாகவும்.தபால் மூலமாகபெற விரும்புபவர்கள் "அரசாங்க அதிபர் முல்லைத்தீவு" என்ற பெயரிற்கு வங்கிகட்டளை அனுப்புவதன் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

**முல்லைத்தீவு மாவட்ட செயலகம்**
**பொருள்கள் சேவைகள் வழங்குவதற்கான வழங்கல் விவரங்கள்**

| இல. | விவரம் |
|---|---|
| 01 | எழுதுபொருள்கள் காகிதாதிகள் |
| 02 | மரத் தளபாடங்கள் |
| 03 | உருக்குத் தளபாடங்கள் |
| 04 | றோணியோ இயந்திரங்கள் |
| 05 | Photocopy இயந்திரங்கள் |
| 06 | கணினிகள் மற்றும் மடிக் கணினிகள் |
| 07 | தொலைநகல்கள் |
| 08 | தட்டச்சு இயந்திரங்கள் |
| 09 | கணினிவலைப்பின்னல் உபகரணங்கள் |
| 10 | கணினிஅச்சியந்திரங்கள் |
| 11 | ரோணர்கள் மற்றும் றிபன்கள் ( Photocopy இயந்திரம் மற்றும் கணினிஅச்சியந்திரம்) |
| 12 | ஜன்னல் கதவுகளுக்கான திரைச்சீலைகள் |
| 13 | சீருடைகள் |
| 14 | மின்சாரசாதனங்கள் மற்றும் உபகரணங்கள் |
| 15 | மின் இணைப்பு வயர்கள் |
| 16 | கட்டட எயார் கெண்டிசனர்கள் |
| 17 | வாகன எயார் கெண்டிசனர்கள் |
| 18 | விளையாட்டுஉபகரணங்கள்/பொருள்கள் |
| 19 | உடற்பயிற்சிஉபகரணங்கள் /பொருள்கள் |
| 20 | அச்சிடுதல் / ஸ்கிறீன் அச்சிடுதல் /Officeஅச்சிடுதல் /Digital அச்சிடுதல் |
| 21 | அலுமினியபிற்றிங் வேலைப் பொருள்கள் |
| 22 | ஜெனரேட்டர்கள் |
| 23 | நீர் இறைக்கும் மோட்டார் குழாய்கள் |
| 24 | பெயின்ற் பூ ச்சுக்கள்.வானிஸ் மற்றும் பெயின்ற் பிறஷ் |
| 25 | பைப்புக்கள் பைப் இணைப்புக்கள் அவற்றுடன் தொடர்புடையபொருள்கள் |
| 26 | மோட்டார் வாகனங்கள் |
| 27 | டயர் ரியூ ப்புக்கள் |
| 28 | வாகனபற்றரிகள் |
| 29 | உலர் மின்கலபற்றரிகள் |
| 30 | பற்றரிஅசிட் |
| 31 | இயந்திரகருவிகளும் உதிரிப்பாகங்களும் |
| 32 | Hardware பொருள்கள் |
| 33 | பிளாஸ்ரிக் உற்பத்திகள் |
| 34 | இறப்பர் முத்திரைகள் |
| 35 | உள்ளக தொலைபேசி வலைப்பின்னல் உபகரணங்கள் /சேவைகள் |
| 36 | தொலைபேசிகளும் அதன் வயர்களும் |
| 37 | பெயர் பலகைகளும் முப்பரிமாண (3D) எழுத்துக்களும் |
| 38 | பொலிசிங் குளோத் |
| 39 | கட்டடவேலைகளும் அதற்கானபொருள்களும் மார்பிள் வகைகளும் |
| 40 | தோல் வகைஉற்பத்திப் பொருள்கள் |
| 41 | பால்மாவகைகளும் பிளாஸ்ரிக் குவளைகளும் (Nescafe Premix & Disposal Cups.etc) |
| 42 | குடிநீர் போத்தல்கள் மற்றும் சுடுநீர் போத்தல்கள் |
| 43 | சோடா (மென் பானவகைகள்) |
| 44 | தும்புத்தடி.விளக்குமாறு.கால் துடைப்பங்கள்.மொப்பர்கள்.வைப்பர்கள் |
| 45 | காப்பிக்.விம்.பினோல்.சவர்க்காரம்.அசிட். குளோறின்.எயார் பிறஷ்னர் etc |
| 46 | சாதாரணமற்றும் நைலோன் கயிறுகள் |
| 47 | சுண்ணாம்புக்கல்/ கருங்கல் /சல்லிகள் / உற்பத்திசெய்யப்பட்டகட்டடபொருள்கள்.(வழங்கக்கூடியவற்றின் கீழ் அடையாளமிடவும்) |
| 48 | மணல் மண் மற்றும் கிரவல் மண் வகைகள் (குறிப்பிடவும்)........................................ |
| 49 | ஒலிபெருக்கிசாதனங்கள்.ஒலிவாங்கிசாதனங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பானவை |
| 50 | வாகனங்கள் தூய்மிப்பு மற்றும் அதற்கானபொருள்கள் |
| 51 | வாகனதிருத்தங்கள் |
| 52 | வாகன திருத்தத்திற்கான உதிரிப்பாகங்கள் |

**திருமதி றூ.கேதீஸ்வரன்**
மாவட்டச் செயலாளர்,மாவட்டச் செயலகம்,முல்லைத்தீவு.

## BARATHY
### கல்வி நிறுவனம் - சித்தன்கேணி

**தரம் 6 முதல் 11 வரை**

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
06 - 12 - 2014 ஞாயிறு

தரம் - 9, 10,11 - 9.00
தரம் - 6,7,8 - 10.00

நீங்கள் நன்கு அறிந்த இப்பிரதேசத்தின் பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

| விஞ்ஞானம் | கணிதம் |
|---|---|
| Mr.தேவா<br>Mr .பத்மநாதன் | Mr. சிவரூபன்<br>Mr. சிவா |
| **தமிழ்** | **வரலாறு** |
| Mr.குகபரன்<br>Mr .கஜீதரன் | Mr. சுதன்<br>Mr. பிரதாப் |
| **ஆங்கிலம்** | **சமயம்** |
| Mr.சுதர்சன்<br>Mr .சிவகுமார் | Mr.N.T தரன்<br>Mr. பாபுதரன் |
| **புவியியல்** | **குடியுரிமை** |
| Mr.சர்வேஸ்வரன் | Mr. பாபுதரன்<br>சிவா |
| **சுகாதாரம்** | **வணிகக்கல்வி** |
| Mr.பார்த்தீபன் | Mr. திருக்குமரன் |
| **நாடக அரங்கியல்** | **விவசாயம்** |
| Mr.கஜீதரன் | Mr. சிவசஞ்ஜீவன் |

**Note:**
விடுமுறை காலத்தில் மேலதிக வகுப்புகள் நடைபெற உள்ளதால் தாமதியாது உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

ஏற்கனவே மாணவர்கள் உள்ளதால் இட நெருக் கடிகளைத் தவிர்க்கும் முகமாக புதிய மாணவர்கள் உங்கள் அனுமதிக்கு முந்திக் கொள்ளவும்.

**இயக்குநர், ஆசிரியர்கள்**

## டிப்பர் வாகனம் விற்பனைக்கு உண்டு

LH XXXX,
39 TATA டிப்பர் வாகனம்
விற்பனைக்கு உண்டு.
(60666) (11,15,17) தொடர்பு:077 692 9006

## நாஹா மருத்துவ நிலையம்

* எலும்புகள் தீவிரமாகப் பாதிப்படையும் வாதம், ஆஸ்மா, புண்கள் பாரிசவாதம், அல்சர், மாற்றமுடியாத நோய்கள்- குணப்படல்
* குழந்தையின்மைக்கு- சிறப்பு சிகிச்சை

தொடர்பு: 077 321 2740
வங்கிமுன்லேன், சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி(ஜெயபதிவீடு),மானிப்பாய்.

## வேலை வாய்ப்பு

அதி உயர்ந்த சம்பளத்துடன் வேலை வாய்ப்பு ஜாம்,. பிஸ்கட், பால்மா, யோகட் போன்ற பிரதான தொழிற்சாலைகளில் லேபல், பொதியிடல் ஆகிய பிரிவுகளுக்கு ஆண், பெண் (வயது - 18 - 55) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம், சம்பளம் (25000, 40000) நாள் சம்பளம், 1500, OT- 150, 8 HRS வேலை, நண்பர்கள், தம்பதியினர், குழுக்களாகவும் சேர்ந்து கொள்ளலாம்.

**072 287 0967** (66531)(11,15)

" சேரா வருதாம் " வந்தது உங்கள் வீடுகளுக்கு மாத்திரம் அல்ல உங்கள் வாழ்க்கையிலும் தான் சேரா பால் கம்பனி உட்பட இன்னும் அரச அங்கீகாரத்துக்கு உட்பட்ட கம்பனிகளில் வேலை வாய்ப்புக்கள் உண்டு. ஆண், பெண் இருபாலாரும் தேவை. 18-50 வயதுக்கு உட்பட்டவராய் இருத்தல் வேண்டும். உணவு, தங்குமிடம் அனைத்தும் உட்பட சீருடை ஆண், பெண்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் இலவசம்.

ஒருநாள் சம்பளம் - 1026/=
25 நாள் சம்பளம் - 25650 +OT உட்பட 35650/=

(66531) (11,15) **076 701 5219, 072 223 1518**

## துணுக்காய்,மல்லாவி ,ஐயன்குளம், பொதுச்சந்தை,ஆட்டிறைச்சி,மாட்டிறைச்சி, கோழி இறைச்சி கடைகளுக்கான குத்தகை மீள்கேள்வி அறிவித்தல் - 2016

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2016 தொடக்கம் 31.12.2016 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | - (அலுவலக நாள்களில் மு.ப.8.30-பி.ப.3.00 - 07.12.2015 -14.12.2015 |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி | - 14.12.2015 முற்பகல் 10.00 மணிவரை |
| கேள்வி திறக்கப்படும் திகதி | - 14.12.2015 பி.ப.1.00 மணி |
| கேள்வி திறக்கும் இடம் | - துணுக்காய் பிரதேசசபை அலுவலகம் |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், துணுக்காய் பிரதேசசபை துணுக்காய் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

**இறைச்சிக்கடை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 17,400.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 211,000.00 | 2,500.00 | 500.00 |
| 03 | கோழி இறைச்சிக்கடை | துணுக்காய் | 17,400.00 | 1,500.00 | 500.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 43,200.00 | 1,500.00 | 500.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை | மல்லாவி | 1,677,500.00 | 2,500.00 | 500.00 |
| 06 | கோழி இறைச்சிக்கடை | மல்லாவி | 245,960.00 | 1,500.00 | 500.00 |
| 07 | ஆட்டிறைச்சிக்கடை | ஐயங்குளம் | 10,500.00 | 1,500.00 | 500.00 |
| 08 | மாட்டிறைச்சிக் கடை | ஐயங்குளம் | 102,400.00 | 2,500.00 | 500.00 |
| 09 | கோழி இறைச்சிக்கடை | ஐயங்குளம் | 10,500.00 | 1,500.00 | 500.00 |

**பொதுச் சந்தை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | துணுக்காய் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 20,000.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மல்லாவி பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | மல்லாவி | 1,309,000.00 | 1.500.00 | 500.00 |
| 03 | ஐயங்குளம் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | ஐயங்குளம் | 20,000.00 | 1,500.00 | 500.00 |

**நிபந்தனைகள்**

01. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் இலங்கை பிரஜையாகவும் தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கக்கூடியவராகவும் சான்றுகள் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
02. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் எனத் தெரியவருமிடத்து கேள்விகோர தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
03. எந்தவொரு கேள்வியும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளரிற்கு பூரண அதிகாரம் உ ண்டு. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
04. கேள்விப்படிவ கட்டணம்,கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றிற்கு 12 % பெறுமதி சேர்வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படவேண்டும்.
05. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்படவேண்டும்.
06. சபையால் விதிக்கப்படும் நிபந்தைனைகளை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
07. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
08. இறைச்சிக்காக ஆடு, மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங் களுக்கு அமைய நடந்துகொள்ளவேண்டும்.
09. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
10. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப்பணத்தை ஒரு வார காலத்திற்குள் செலுத்திசபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

**திரு.க.சத்தியநாதன்**
செயலாளர், பிரதேசசபை, துணுக்காய்.

(சி.20550) (14.15.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக நகருக்கு ரணில் பச்சைக் கொடி

கொழும்பு, டிசெ. 4

கடந்த எட்டுமாத காலப்பகுதியாக இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகரத் திட்டமானது விரைவில் ஆரம்பாகும் என்பதற்கான சமிக்ஞையை நேற்று முன் தினம் கொழும்பு பங்குச் சந்தையின் 30 ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு இடம் பெற்ற கொண்டாட்ட நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டார்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும்போது, கொழும்புத் துறைமுக நகர்த்திட்டம் மீண்டும் ஆரம்பமாகும் என்று நம்பிக்கையுள்ளது. அங்கு மீள நிரப்பப்படுகின்ற நிலப்பகுதியில் தென்னாசியாவிலேயே தனித்துவமானவகையில் விசேடமான நிதி மற்றும் வர்த்தக பிரதேசமொன்று நிறுவப்படும் என்று குறிப்பிட்டார்.



இடைநிறுத்தப்பட்ட நாள் முதலாக துறைமுக நகர்த் திட்டம் தொடர்பான கேள்விகளின்போது சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களுட்பட தேவையான முன் அனுமதிகள் பெறப்படவேண்டியுள்ளதாகவும் இதுதொடர்பாக அமைச்சரவை உபகுழு ஆராய்ந்து வருவதாகவும் பிரதமர் கருத்துக்களை வெளியிட்டுவந்தநிலையில், நேற்று முன் தினம் கொழும்புத் துறைமுக நகர் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்பதற்கான பச்சைக் கொடியைப் பிரதமர் காண்பித்துள்ளார்.

1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் (ஏறத்தாழ 20ஆயிரம் கோடி இலங்கை ரூபா) பெறுமதியான கொழும்புத் துறைமுக நகர்த் திட்டம் சீன அரசாங்கத்தின் சைனா ஹாபர் நிறுவனத்தின் சீசீசீ நிறுவனத்தால் முதலீடு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், உரிய முன்அனுமதி பெறப்படாமையைக் காரணம் காட்டி புதிய அரசின் பதவியேற்பையடுத்து கடந்த மார்ச் மாதம் 6ஆம் திகதி இடைநிறுத்தப் பட்டது.

இந்தத்திட்டத்தின் மூலம் 252 ஹெக்ரேயர் நிலப்பகுதி காலிமுகத்திடலுக்கு வடமேற்கே உள்ள கடற்பரப்பிலிருந்து மீள் நிரப்புகை மூலமாக மீட்டெடுக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு பங்குச் சந்தையின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நிகழ்வில் மேலும் கருத்துவெளியிட்ட பிரதமர், பொருளாதார வளர்ச்சியை 9 வீதமாக ஆக்குவது கடினமான பணி எனினும், சாத்தியமற்றது அல்ல எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அதனைச் செய்ய வேண்டும் எனவும், காரணம் 2030 ஆம் ஆண்டளவில் இலங்கை அதிக வருமானம் பெரும் நாடாக இருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, அடுத்த வருடம் பொருளாதாரவளர்ச்சியை 6.5 வீதமாக விரிவாக்க நாம் எமதுவேகத்தை அதிகரிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எனவே, எமது உழைப்பு இந்த இலக்கை அடைய வேண்டும் எனவும் பிரதமர் இதன் போதுமேலும் குறிப்பிட்டார். (த-சி)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னத்தம்பி சிவஞானசுந்தரம்**

(ஓய்வுபெற்ற அதிபர்)

திதி: 04.12.2015

தோற்றம்
25.09.1928

மறைவு
07.12.2012

மூன்றாண்டுகள் ஆனதா நம்பத்தான் முடியவில்லை
கனவல்ல நிஜம் தான் கண்முன்னே நீ இல்லை - அப்பா
நெஞ்சம் குமுறிட நினைக்காத நாளில்லை
மிஞ்சுவது வேதனை தான் விடிவில்லை ஏனோ அப்பா!

"தண்ணிழல்"
21/5, முதலாம் ஒழுங்கை,
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
21 . 03 . 1951



இறப்பு
15 . 12 . 2014

**சின்னையா மகாலிங்கம்**

பாசத்தின் பிறப்பிடமே
எங்கள் குடும்பத்தின் தலைவனே
அமைதியே உருவாக
அயலவர் அனைவருடனும்
இனிமையாகப் பழகும் அழகிய உங்கள்
நினைவுகள்
எத்தனை ஆண்டானாலும் அழியாது எம்மனதில்
ஆண்டவன் அடியில் உங்கள் ஆத்மா
என்றும் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்

அழியாத நினைவுடன்....

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

அன்பு மனைவி - ம.மல்லிகாதேவி
அன்பு மகன் - ம.கிரீசன்

(66553)(11.18)

## முப்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **E.K. சண்முகநாதன்**
(ஓய்வுபெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர்)



ஐயாறு வருடங்கள்
உருண்டோடினாலும்
ஆறாது எம் துயர்
பாசமிகு எம் குடும்ப விளக்கே
எங்கு செல்வோம் - உம்
பாசத்தைத் தேடி
ஆறாத் துயரில்
எம்மை ஆழ்த்தி
ஆண்டவன் மடியில் நீர்
சேர்ந்தீரோ

என்றும் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்

**மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

**137, பலாலி வீதி,
திருநெல்வேலி.**

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

மண் மகிழ
04 . 01 . 1969



கண் நெகிழ
26 . 11 . 2013

**தானியேல் றெக்சியன் (தோடீர் ரஜீப்)**

(நெடுந்தீவு பிரதேசசபை தலைவர்)

திதி:அபரபக்க நவமி (04.12.2015)

அலையாய் மோதும் உம் ஞாபகங்கள்
அலறித் தவிக்குது எம் இதயங்கள்
வருடங்கள் இரண்டு அஸ்தமித்தும்
மனச்சாளரம் உம் வரவை நோக்கி திறந்திருக்கிறது
நாட்டின் தேவையும் - உன்
வீட்டின் கடமையும் கண்ணியமாய் நீர் நிறைவேற்றியது- ஏன் அந்தக்
காலனுக்கு பிடிக்காமல் போனது
உம் உயிரினை எடுத்து எம் உறவைப்
பிரிந்து செல்ல வழிவகுத்ததுதான் ஏனோ?

கண்ணீர் சரங்களுடன்... **மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.**

புங்குடுதீவு - 3

(66559)(11.15)

## ஓராண்டு நீங்காத நினைவில்



தோற்றம்
26 . 06 . 1932

மறைவு
15 . 12 . 2014

வேலணையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் வேலாயுதர் சின்னத்தம்பி சொக்கலிங்கம் (J.P)**

[முன்னாள் துறைமுக அதிகார சபையின் நிர்வாக உத்தியோகத்தர்- கொழும்பு]

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை

**மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய, அதிபர் இடமாற்றத்தை அதிகாரிகளே இழுத்தடிக்காதீர்

### வலியுறுத்துகிறது ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், டிசெ.4

வடக்கில் ஆசிரியர் மற்றும் அதிபர் இடமாற்றக் கொள்கைகள் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். கடந்த காலம் போன்று இழுத்தடிக்காமல் வருடாந்த இடமாற்றங்களை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி நடைமுறைப்படுத்தியே ஆகவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் சங்கப் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கில் நடைமுறையில் உள்ள இடமாற்றக் கொள்கைகள் முழுமையாக இடம்பெறவில்லை. இனியாவது கொள்கைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

அவ்வாறே அதிபர்கள் இடமாற்றம் 7 வருடங்களுக்கு ஒரு தடவை இடம்பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். ஆனால் வடக்கிலுள்ள அதிகாரிகள் அதனைச் சரியாகச் செய்ய முன்வருவதில்லை.

கடந்த காலங்களில் வருடாந்த இடமாற்றங்களை ஜனவரி முதலாம் திகதி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டாலும், வடக்கிலுள்ள கல்வி அதிகாரிகள் அதனை ஜனவரியில் செய்ததில்லை. காலதாமதம் செய்து, இழுத்தடித்துப் பாடசாலை தொடங்கிய பின்னரே அதனைச் செய்வர்.

இந்த வருடத்துக்குரிய ஆசிரிய இடமாற்றம் கடந்த ஜனவரியில் செய்திருக்க வேண்டும். ஆனால் கடந்த ஏப்ரலிலேயே ஆசிரிய இடமாற்றத்தை அதிகாரிகள் செய்தனர். அதுவும் பல ஆசிரியர்களின் ஆர்ப்பாட்டம் மற்றும் பணிப்புறக்கணிப்புக்கு மத்தியிலேயே இடம்பெற்றது. அதனால் மாணவர்கள் தான் பாதிக்கப்பட்டிருந்தனர். மாணவர்கள் பாதிப்புப் பற்றி பின்னர் எவரும் கரிசனை கொள்வதில்லை -என்றார். (ற-ஜ-4)

# விலைக்குறைப்புச் செய்யாமல் யாழில் பொருள்கள் விற்பனை

## முறைப்பாடு கிடைக்கவில்லை என்கிறது நுகர்வோர் அதிகார சபை

யாழ்ப்பாணம், டிசெ.4

வரவு - செலவுத் திட்டத்தில் விலைக் குறைப்புச் செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா வகைகளின் விலைகள் யாழ்.மாவட்டத்தில் இதுவரை குறைக்கப்படவில்லை எனப் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வரவு - செலவுத் திட்டத்தில் விலைகள் குறைக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் இதுவரை குறைக்கப்படவில்லை. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட விலைக் குறைப்புச் செய்ய முன்வரவில்லை.

விலைக் குறைப்பு விடயத்தில் மாவட்ட நிலை அதிகாரிகள் மற்றும் விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, பாவனையாளர் நியாய விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

> சம்பந்தப்பட்டவர்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிப்பு

கடந்த 20 ஆம் திகதி வரவு-செலவுத் திட்ட உரை மூலம் கடலை, பருப்பு, குழந்தைகளுக்கான பால்மா வகை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் விலை குறைப்புச் செய்யப்பட்டன. வெளிமாவட்டங்களில் குறைக்கப்பட்ட விலைக்குப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் யாழ். மாவட்டத்தில் பொருள்களின் விலைகள் குறைக்கப்படவில்லை.

மழை வெள்ளம், பயிர் அழிவு போன்றவற்றால் மக்கள் இடர்படும் இந்த வேளையில், விலை குறைக்கப்பட்ட பொருள்களின் விலையை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் நுகர்வோர் பாவனையாளர் அதிகாரசபையினரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

பொருள்கள் விலை குறைக்கப் படாதமை தொடர்பில் இதுவரை எமக்கு எந்த முறைப்பாடும் கிடைக்கப்பெறவில்லை. இருந்த போதிலும், மக்கள் கோரிக்கைக்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. சம்பந்தப் பட்டவர்களை இணங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர். (ற-ஜ-10,11)

## 2016 இல் கல்வி அமைச்சால் பொதுவான பாடப்பதிவுப் புத்தகம்

யாழ்ப்பாணம், டிசெ.4

கல்வி அமைச்சால் இலங்கை முழுவதும் 2016 ஆம் ஆண்டு முதல் பொதுவான பாடப்பதிவுப் புத்தகம் அறிமுகம் செய்யப்படவுள்ளது என்று வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மாதிரிப் புத்த கங்கள் இறுவட்டு வடிவில் கல்வி அமைச்சால் மாகாணங்களுக்கு அனுப்பி வைககப்பட்டுள்ளன என்றும் இவை அடுத்த வருடம் பாடசாலைகள் ஆரம்பிப் பதற்கு முன்னர், சகல பாடசாலைகளுக்கும் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் அச்சடிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டது.

எனினும் பாட வேலைத்திட்டப் பதிவேடுகளை முன்னர் போலவே பாடசாலைகள் தயாரித்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி5)

### திருப்பலிப்பூசை

யாழ்ப்பாணம், டிசெ.4

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி மரியறொசாறியோவின் 31ஆம் நாள் நினைவுத் திருப்பலிப் பூசை இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற-ஜ-422)


## ஆபாசப்படம் பார்த்தவருக்கு ஐயாயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

இணுவில் கந்தசுவாமி கோயில் பகுதியில் மில் ஒன்றில் இருந்து சிறு டி.வி.டி பிளேயரில் ஆபாசப்படம் பார்த்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார் மல்லாகம் மாவட்ட நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன்.

அத்துடன் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்ட டி.வி.டி பிளேயரினை அரசுடைமையாக்குமாறு நீதிமன்றப் பொலிஸாருக்கு பணித்தார்.

கடந்த மாதம் சுன்னாகம் பொலிஸாரினால் கைதான குறித்த சந்தேக நபருக்கு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தும், அவர் சமுகம் அளிக்கத் தவறியிருந்தார். இதனால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, குறித்த நபர் பொலிஸாரினால் கைதாகி முற்படுத்திய போது, ஆபாசப் படம் பார்த்த குற்றத்துக்காக அபராதமாக 5 ஆயிரம் ரூபா அவருக்கு விதிக்கப்பட்டது. (ற-ஜ-107)




வவுனியா மாவட்டத்தில் சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர் தினவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. விசேடதேவைக்குட்பட்டோரின் சக்கரநாற்காலி ஓட்டம், வவுனியா பஸ் நிலையத்தில் விழிப்புணர்வுக் கூட்டம், பஸ்களில் விசேட தேவைக்குட்பட்டோருக்கான ஆசனங்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டுதல், மற்றும் விசேட தேவைக்குட்பட்டோரின் உணர்பூர்வ மான பேரணி என்பன நடைபெற்றன. (ற-ஜ-402)

### தரம் 5 மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.4

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 35 மாணவர்களைப் பாராட்டிக் கௌரவித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வடக்கு மாகாணக் கூட்டுறவு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் அந்தப் பகுதியைச் சேர்ந்த மூத்த கூட்டுறவாளர்கள் 13 பேரும், சங்கத்தில் தொடர்ந்து 25 வருடங்கள் சேவையாற்றிய கூட்டுறவாளர்களும் பாராட்டி தங்கப்பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து சங்கத்தின் வரலாற்றை உள்ளடக்கிய 'பண்கோப்' எனும் நூல் வெளியிடப்பட்டது. நிகழ்வில் வடமாகாண கூட்டுறவுத் திணைக்களத்தின் கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.பாலச்சந்திரன், மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ஜ-17)

## கோடா வைத்திருந்தவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடாவைத் தனது உடைமையில் வைத்திருந்த நபருக்கு 25 ஆயிரம் ரூபாவை அபராதமாக மல்லாகம் நீதிமன்றம் விதித்துள்ளது. பிரான்பற்று பகுதியைச் சேர்ந்த குறித்த நபருக்கு எதிராக இளவாலைப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த மாதம் பிரான்பற்று பகுதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதற்கு ஒருவர் தயாராக இருக்கின்றார் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் குறித்த நபரின் உடைமையில் இருந்து 6 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கொள்ளவு கொண்ட கோடாவை மீட்டனர். (ற-ஜ-107)

## மாற்றுத்திறனாளிகளின் தேவைகள் நிறைவேற்றப்படாமை கவலைக்குரியது

### வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா,டிசெ.4

வடமாகாணத்தில் மாற்றுத்திறனாளிகளின் முக்கிய அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாமல் உள்ளமை கவலைக்குரிய விடயமாகும். எனினும் சமூகசேவை அமைச்சின் ஊடாகவும், புனர்வாழ்வு அமைச்சின் ஊடாகவும் மாற்று திறனாளிகளின் பல்வேறு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் மாற்றுத் திறனாளிகளின் நலன் கருதி அவர்களின் உடல் ரீதியான உள ரீதியான சிகிச்சைக்காக வைகறை நிறுவனமும் அமைக்கப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகளின் சுகாதார வசதிக்கு அப்பால், அவர்களின் வாழ்வாதார வசதிகளை நாம் மேற்கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது. வட மாகாண சபை ஊடாக வாழ்வதார வசதியை ஏற்படுத்த வரவு-செலவு திட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு கூடிய நிதி ஒதுக்க நாம் முயற்சி செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார். (ற-ஜ-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 750 விவசாய வீதிகள் சேதடைந்த நிலையில்

## முல்லைத்தீவு மாவட்டக் கமநல சேவைகள் உதவி ஆணையாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு,டிசெ.4
முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகள் அறவே போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் சுமார் 750 க்கும் மேற்பட்ட விவசாய வீதிகள் உள்ளன. அவை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்டக் கமநல சேவைகள் உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள 6 குளங்களின் கீழ் விவசாயத்தை மேற்கொள்ளும், விவசாயிகளது பிரதான போக்குவரத்து வீதிகள் திருத்தப்படவில்லை எனவும், அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் குறித்த வீதிகளால் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பற்றி எமக்கு பல தடவைகள் தெரியப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்த வருடம் குறித்த வீதிகளைப் புனரமைப்பதற்கான நிதி எம்மிடம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் அறவே போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் சுமார் 750 க்கும் மேற்பட்ட விவசாய வீதிகள் காணப்படுகின்றன. அவற்றில் 10க்கும் மேற்பட்ட வீதிகளே தற்போது கமநல சேவைகள் நிலையத்தால் திருத்தம் செய்யப்படுகின்றன.

ஏனைய வீதிகளும் கட்டாயமாகத் திருத்தப்பட வேண்டும். எனவே அடுத்த வருடம் இந்த வீதிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டு, எமது திணைக்களத்துக்கு உட்பட்ட குறித்த வீதிகள் திருத்தம் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எமது திணைக்களத்துக்குக் கீழ் உள்ள வீதிகளில் உள்ள முக்கியமான பாலங்களும் அடுத்த வருடம் புனரமைப்புச் செய்யப்படும் எனவும் உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ஐ-500,21)



சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நேற்று மட்டக்களப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சமூக சேவைகள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விளையாட்டுப் போட்டிகள், மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.அருள்மொழி தலைமையில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. (ற)

# படைகள் வசமுள்ள களஞ்சியசாலையை மீட்டுத் தாருங்கள்

## வவுனியா விவசாயிகள் கோரிக்கை

வவுனியா,டிசெ.4
வவுனியா நகரசபைப் பூங்கா வீதியில் உள்ள நெற் களஞ்சியசாலையை இராணுவத்தின் பிடியிலிருந்து மீட்டுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா நகரசபைப் பூங்காவீதியில் உள்ள நெற் களஞ்சியசாலை இராணுவ முகாமாகவுள்ளது. அதிலிருந்து இராணுவத்தை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிகாரிகளிடமும், இராணுவத்திடமும் பல தடவை கோரிக்கை விடுக்கப்பட்டன.

> இது குறித்து அதிகாரி களிடமும் இராணுவத்திடமும் பல தடவை கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் அவர்கள் உரிய வகையில் நடவடிக்கை எதுவும் எடுக்கத் தவறியிருந்தனர்.

எனினும் அவர்கள் உரியவகையில் நடவடிக்கை எடுக்கத் தவறியமையால், சுமார் 3 ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லைக் களஞ்சியப்படுத்தும் வசதியை விவசாயிகள் இழந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த விடயம் குறித்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், மகாணசபை உறுப்பினர்களும் உரிய கவனம் எடுத்து இந்த நெற்களஞ்சியசாலையை மீட்டுத் தருமாறு வவுனியா மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-402)

## தோல் பொருள் உற்பத்தி பயிற்சி நிறைவு

கிளிநொச்சி,டிசெ.4
கிளிநொச்சி மாவட்டத்தில் தோல்பொருள்கள் உற்பத்தியில் ஈடுபடுவோருக்கான பத்து நாள் பயிற்சிகளின் நிறைவும், உற்பத்திகள் காட்சிப்படுத்தலும் கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்றது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் அனுசரணையுடன் நியு கிலியஸ் நிறுவனத்தால் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பயிற்சிகள் நிறைவை முன்னிட்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தலும், பயிலுநர்களுக்கு சான்றிதழ் வழங்கலும் இடம்பெற்றன.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் சி.சசிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதமவிருந்தினராக மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினார். (ஐ-9)



# வீதிப் போக்குவரத்துப் பயிற்சி முடித்த மாணவருக்கு சான்றிதழ்

வவுனியா,டிசெ.4
வவுனியா மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்துப் பயிற்சி அளிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளது.

அதை முன்னிட்டு வவுனியாநெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் 25 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் சு.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.ஜ. பலகவடன மற்றும் நெளுக்குளம் வீதிப் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி மாயாதுன்ன, சார்ஜண்ட் நிமால், திலீப் ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினர்.

வவுனியா மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் வவுனியா மாவட்ட வீதிப் போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரின் வழிகாட்டலில் மாணவர்களுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன. (ஐ)

# போசாக்கான சமூகத்தை உருவாக்கும் செயற்றிட்டம் கிளிநொச்சியில் ஆரம்பம்

## 20 பேர் கொண்ட குழு நியமிப்பு

கிளிநொச்சி,டிசெ.4
போசாக்கு அற்றவர்கள் அதிகம் வாழும் மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் இனங்காணப்பட்டுள்ள நிலையில், போசாக்கான சமூகத்தை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கென 20 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

தேசிய ரீதியில் ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் போசாக்கான சமுதாயத்தை உருவாக்கும் செயற்றிட்டம் சகல மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கையில் உள்ள 25 நிர்வாக மாவட்டங்களிலும் போசாக்குக் குறைபாடு உள்ள மக்கள் அதிக விகிதாசாரத்தில் உள்ள மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் விளங்குகிறது.

இந்த நிலையில் இந்த மாவட்ட மக்களின் போசாக்குக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் மாவட்ட ரீதியில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அரச அதிபரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட இந்தக் குழுவில் மாவட்ட சுகாதார அதிகாரி, வைத்திய சேவை அதிகாரிகள் உள்ளிட்ட 20 பேர் அடங்கியுள்ளனர்.

இதேவேளை இந்த மாத இறுதிக்கு போசாக்கை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை வகுத்து ஒப்படைக்குமாறும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற- ஐ-101)

## கட்டாக்காலி மாடுகளின் பிடிபாடு

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச சபைப் பிரிவில், வீதிகளில் அலைந்து திரிந்து பாதசாரிகளுக்கும் வாகன சாரதிகளுக்கும் இடையூறு விளைவித்த 40 மாடுகள் பிரதேசசபை அதிகாரிகளால் பிடிக்கப்பட்டுள்ளன என்று பிரதேச சபை வருமான பரிசோதகர் எம்.வசந்தகுமார் தெரிவித்தார். (ற)

# மன்னார் மாவட்டத்தில் டெங்குத் தொற்று கட்டுப்பாட்டில்

## மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

மன்னார்,டிசெ.4
மன்னார் மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களில் 11 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இது, இந்த ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் குறைவாகக் காணப்படுகின்றது என்று மன்னார் மாவட்டப்பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஜனவரி,பெப்ரவரி மாதங்களில் 54 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தனர். ஆனால் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை. மார்ச் மாதத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் வரை எவரும் டெங்கு நோய்க்கு ஆளாகவில்லை.

இறுதிக் காலாண்டான ஒக்டோபர் முதல் இதுவரைக்கும் 11 டெங்கு நோயாளர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் அபாயம் காணப்படுகிறது என்று எந்தப் பகுதியும் இனங்காணப்படவில்லை.

எனினும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பகுதிகள், மன்னார், வங்காலை போன்ற பிரதேசங்களில் குறித்த டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தபட்டு வருகின்றது. இனிவரும் காலங்களிலும் டெங்கு குறித்து பிராந்திய சுகாதார பிரிவினர் மக்களுக்கான விழிப்புணர்வுகளையும், அதற்கான பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொடுப்பார்கள் என்று சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கை கடல் பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். அதனால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது."

# அத்துமீறலைத் தடுக்க சர்வதேச நடவடிக்கை

## வடக்கு மீனவர் அமைப்புக்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம்,டிசெ.4
இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையைத் தடுக்க சர்வதேச மட்டத்தில் நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்று வடக்கு மீனவ அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.

இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களின் ஊடாக, இந்திய மீனவர்களின் வருகையைத் தடுக்க முடியும் என நாம் நம்புகிறோம் என வட மாகாண கடற்றொழில் இணையத்தின் தலைவரும், மன்னார் மீனவ சமாசத்தின் தலைவருமான என்.எம். ஆலம் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளின் தூதுவர்களுக்கும் ஏனைய சர்வதேச பிரதிநிதிகளுக்கும் தபால் அட்டைப் போராட்டத்தின் ஊடாக தபாலட்டைகள் அனுப்பி வைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கபட்டுள்ளன. குறித்த நடவடிக்கை வட மாகாணம் தழுவிய ரீதியில் கட்டம் கட்டமாக தொடர்ச்சியாக முன்னெடுக்கபடவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாடுகளும் தெரிந்து கொள்ளும் விதத்தில் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர் களுக்கும், அந்த நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையைத் தடுக்கும் முகமாக தபாலட்டை அனுப்பும் நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

இந்த நடவடிக்கை நிச்சயமாக இந்திய மீனவர்களுக்கு அல்லது இந்திய தரப்பினருக்கு ஓர் அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும். அதனூடாக எமது எல்லைக்குள் இந்திய மீனவர்கள் வருவதைத் தடுக்கமுடியும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக நாம் மேற்கொண்டிருந்த நடவடிக்கையின் பயனாக இலங்கை அரசு, அமைச்சரவைத்திருத்தத்தின் ஊடாக வெளிநாட்டுப் படகுகளைக் கையாளும் சட்டத்தை முன்வைத்துள்ளது.

இது வரவேற்கத்தக்க விடயம். குறித்த திருத்தத்தின் ஊடாக நாடாளுமன்றத்தில் அதனைச் சமர்ப்பித்து, அது சட்ட வடிவமாக்கப்பட்டு இந்திய மீனவர்களின் வருகை நிறுத்தப்பட வேண்டும்.

வடக்குப் பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் செழிக்க இந்த அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஜ)

## தமிழக உறவுகளுடன் இணைந்திருப்போம்

### வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.4
தண்ணீரில் தத்தளிக்கும் தமிழக உறவுகளின் அவலம் எம்மைக் கலங்க வைக்கின்றது. அதிர்ச்சி ஊட்டும்வகையில்அமைந்துள்ள இந்த இயற்கைப் பேரிடர் மற்றுமொரு மனிதப் பேரவலத்தை விளைவித்துள்ளது. நிலைமை மோசமாகுமுன்னர் சர்வதேச நாடுகள் சிறப்புக் கவனம் எடுத்து உதவ முன்வர வேண்டும்.

இவ்வாறு வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவி கரன்தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வரலாறு காணாத மழையால் தமிழகத்தின் சென்னை, கடலூர், தூத்துக்குடி உள்ளிட்ட பல பகுதிகளும் தண்ணீரில் மிதக்கின்றன.

இந்த இயற்கைப் பேரிடர் ஒரு மாபெரும் மனிதப் பேரவலமாக மாறி விடுமோ என பதற வைக்கிறது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் தமிழக தொப்புள் கொடி உறவுகளுடன் உணர்வால் இணைந்திருப்போம் என்றுள்ளது. (ற-ஜ-ரி6)

## பெண்ணிடம் சேஷ்டை; ஒருவருக்கு மறியல்

கிளிநொச்சி, டிசெ. 4
தனிமையில் இருந்த பெண்ணிடம் தவறாக நடந்துகொண்டதாகக் கூறப்பட்ட நபர் பொதுமக்களால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் நேற்று முன் தினம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி, சாந்தபுரம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் உள்ள கடை ஒன்றில் தனிமையில் உள்ள பெண் ஒருவரிடம் குறித்த நபர் தவறாக நடந்து கொண்டுள்ளார். இதனை அடுத்து அந்தப் பெண் கூச்சலிட்டபோது அங்கு கூடிய பொதுமக்கள் குறித்த நபரைக் கடுமையாகத் தாக்கிய பின்னர் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து கிளிநொச்சிப் பொலிஸாரால் நேற்று முன் தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது குறித்த நபரை எதிர் வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியிலில் வைக்குமாறு தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான், அவரை வைத்திய சாலையில் அனுமதித்துச் சிகிச்சை வழங்குமாறும் உத்தரவிட்டார்.

இதனை அடுத்தே குறித்த சந்தேக நபர் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (து-21-ரி3)

## கௌரவிப்பு நிகழ்வு

சாவகச்சேரி,டிசெ.4
மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குபாடசாலைமண்டபத்தில்நடைபெறவுள்ளது.

பாடசாலைஅதிபர்ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதனும், சிறப்பு விருந்தினர்களாக வைத்தியர் லியோன் புஷ்பராணி, தொழிலதிபர் செ.பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ-9)



பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாட்டின் ஒரு கட்டமாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் யாழ் டிறிபேக் கல்லூரி மற்றும் சாவகச்சேரி மகளிர்கல்லூரி என்பவற்றில் நடத்தப்பட்டுள்ளன. திருமதி ஆ. கோசலை, 'மாணவர்கள் பால்நிலை சம்பந்தமான விடயங்களில் பாதிக்கப்படுவது குறித்தும், பால்நிலை சமத்துவம் என்பதன் முக்கியத்துவம் பற்றியும், அதனை எவ்வாறு குடும்பங்களிலும் பாடசாலைகளிலும் பேணுவது என்பது பற்றியும் கலந்துரையாடினார்.(ற-ஜ-10)

## மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.4
கருவி மாற்றுத்திறனாளிகள் சமூகவள நிலையம் நடத்தும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது:

நிலையப் பொறுப்பாளர் யே. கொன்கிளோடியஸ் தலைமையில்நடைபெறும் இந்தநிகழ்வில்பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட அரசஅதிபர்நா.வேதநாயகன் கலந்து கொள்வார். (ற-ஜ-ரி5)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பை விரைவுபடுத்த வேண்டும் நல்லாட்சி அரசு

## புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி வலியுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.4
அரசியல் கைதிகளுக்காக உயிர் நீத்த மாணவன் செந்தூரன் போன்று, இளைஞர்கள், மாணவர்களின் மனங்களில் மேலும் பாதிப்பேற்படாத வகையில் அரசியல் கைதிகளை அரசு விரைவாக விடுவிப்பதோடு அரசியல் தீர்வையும் விரைவாக முன் வைக்க வேண்டும். இவ்வாறு புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

மாணவன் செந்தூரனின் சாவை இனவாத சக்திகள் பயன்படுத்த முயல்கின்றன. எனவே சக மாணவர்கள்மத்தியிலும்விழிப்புணர்வை ஏற்படுத்தி ஐக்கியப் படுத்தி மக்கள் மத்தியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். என்று புதிய ஜன நாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் வட பிராந்திய செயலாளர் செல்வம் கதிர்காம நாதன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த மாதம் 26 ஆம் திகதி கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் செந்தூரன், சிறைகளில் விசாரணை ஏதுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, ரயில்முன் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

நடந்து முடிந்த போரைக் காரணம் காட்டியும் அதனுடன் தொடர்புபடுத்தியும் வயது வரம்பின்றி இளைஞர்கள், முதியவர்கள், பெண்கள் எனப் பலரும் கைது செய்யப்பட்டும் தடுத்தும் வைக்கப் பட்டுள்ளனர்.

அவர்களின் எதிர்காலம் வீணடிக்கப்பட்டுள்ளதுடன், போர் முடிவடைந்து ஆறு ஆண்டுகளுக்கு மேலான போதும் இவர்களுக்கான தீர்வுகள் இன்னமும் எட்டப் படவில்லை.

தீர்வு கிடைக்காததால் தோன்றிய போரைக் காரணம் காட்டி கைது செய்யப்பட்டவர்களைச் சிறையில் அடைத்து வைத்திருப்பதில் எது விதமான நியாயமும் இல்லை.

நீதியான சமூகத்தில் வாழ விரும்பும் இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் இது போன்ற எண்ணம் தோன்றுவது இயல்பானது. ஆனால் இவர்கள் வெறும் உணர்வு நிலையில் மட்டும் நின்று இது போன்று தம்மை அழித்துக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

தாம் எதிர்நோக்கும் சமூக அரசியல் பிரச்சினைகளை அறிவு பூர்வமாக அணுக வேண்டும். அத்துடன் நல்லாட்சி அரசு மாணவன் செந்தூரனின் கோரிக்கைக்கு மதிப்பளித்து அனைத்து அரசியல் கைதிகளையும் விரைவாக விடுதலை செய்யவேண்டும் என்றுள்ளது. (ற-ஜ-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லெண்ண முறையில் பட்ஜெட்டுக்கு ஆதரவு

## சபையில் தெரிவித்தது கூட்டமைப்பு

கொழும்பு, டிசெ.4

வரவு-செலவுத் திட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு பொது மக்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிருப்தியடைந்துள்ள போதிலும், நல்லெண்ண அடிப்படையில் வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கத் தீர்மானித்துள்ளோம் என்றுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற 2016ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 8ஆம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டம் குறித்து போரில் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் அரசு கலந்துரையாடவில்லை. எமது பிரச்சினைகள், தேவைகள் என்ன என்பது குறித்து எம்முடன் கலந்துரையாடவில்லை. இந்த அரசு எமது மக்களின் பிரதிநிதிகளைப் புறக்கணிக்கிறது. கடந்த அரசைப் போலவே இந்த அரசின் செயற்பாடுகள் அமைகின்றன.



"ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்த ஆட்சியில் இலங்கை மக்கள் மத்தியில் மன மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்ற நம்பிக்கையில்தான் நாம் செயற்பட்டு வருகின்றோம்."

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்த ஆட்சியில் இலங்கை மக்கள் மத்தியில் மன மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்ற நம்பிக்கையில்தான் நாம் செயற்பட்டு வருகின்றோம். வரவு-செலவுத் திட்டம் குறித்து முடிவெடுப்பதற்காக நாமும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துரையாடினோம். வரவு-செலவுத் திட்டத்தில் வடக்கு-கிழக்கு புறக்கணிக்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் கவலையடைந்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிருப்தியடைந்துள்ளனர். இந்த நிலையில், இந்த விடயம் குறித்து ஜனாதிபதி, பிரதமருடன் பேசுவதாகக் கூறியே, நல்லெண்ண அடிப்படையில் வரவு-செலவுத் திட்டத்துக்கு ஏதுவாக வாக்களிக்கத் தீர்மானித்தோம். பாதிக்கப்பட்ட பொது மக்களது வாழ்க்கையைக் கட்டியெழுப்ப, அவர்களின் வாழ்வாதா ரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இலட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும். நன்கொடைமாநாடுநடத்தப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. நன்கொடையாளர்களுடன் பேசுவதற்கு முன்னதாக எம்முடன் பேசுங்கள். எமது தேவை என்ன? எத்தகைய நன்கொடை தேவை என்பவை தொடர்பாக எம்முடனும், எமது மாகாணப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாட வேண் டும் என்று பிரதமரிடம் நான் கேட்டுக் கொள்கின்றேன்-என்றார். (கு-சி)

# இலங்கையுடன் ரஷ்யா மிகநெருக்கமான உறவு

## புடின் விருப்பம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 4

இலங்கைஅரசுடன்நெருக்கமான உறவுகளைத் தொடர்ந்தும் பேணுவதற்கு ரஷ்யா ஆர்வமாக இருப்பதாக, அந்த நாட்டின் ஜனாதிபதி விளாடிமீர் புடின் தெரிவித்துள்ளார்.



இருதரப்பு உறவுகளைப் புதுப்பித்துக்கொள்வதில்அண்மைக்காலமாக ரஷ்யா தீவிரமாகச் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் சமன் வீரசிங்கவின் நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் மீன்பிடி மற்றும் விவசாயத் துறையிலும் ரஷ்யா ஒத்துழைப்பை வழங்க விரும்புவதாகப் புடின் தெரிவித்துள்ளார். இந்தநிலையில் இலங்கையின்தற்போதையஅரசியல் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து தூதுவர் சமன் வீரசிங்க, ரஷ்ய ஜனாதிபதிக்கு விளக்கம் அளித்துள்ளார். (த-5)

# திறந்த சமூக அமைப்பு சம்பந்தனுடன் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 4

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை, திறந்த சமூக அமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசியுள்ளனர். இந்தச் சந்திப்பு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சமகால அரசியல் நிலவரங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் பிரசன்னமாகியிருந்தார். (த-5)

CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGTH
NEDA

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை
மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையும்
இணைந்து நடாத்தும்
வடமாகாண

தொழில் முயற்சியாளர்களுக்கான விருது
2014

இடம் - கிறீன் கிறாஸ் மண்டபம்
காலம் - 04.11.2015, 3.30 பி.ப

Northern Entrepreneurs Awards - 2014

அனுசரனையாளர்கள்
Annai Sea Foods (PVT) Ltd. (S.K.M.E)
CargillsBank
TECHNOLOGY
AVERY
HARI
உதயன்
COMMERCIAL BANK
Harikanan Printers of the North

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா மீது கை வைத்தால் விளைவுகள் விபரீதமடையும்

## சிங்கள - பௌத்த அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 4

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை எக்காரணம்கொண்டும்கைதுசெய்யக்கூடாது. அவரைக் கைது செய்வதற்கு அரசு முட்டாள்தனமாக முடிவெடுத்தால் அதன் விளைவுகள் மிகப் பாரதூரமானதாக அமையும் என்று, பெவிதி ஹன்ட என்ற கடும்போக்கு சிங்கள - பௌத்த அமைப்பு எச்சரிக்கைவிடுத்துள்ளது.

அந்த அமைப்பைச் சேர்ந்த முரத்தட்வே ஆனந்த தேரர், இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் மோசடிகள் ஊழல்கள் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்திய ஆளும் கட்சி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களினால் அவற்றை நிரூபிக்க முடியாதநிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் போலியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி கோத்தபாய உள்ளிட்டவர்களைக் கைது செய்ய முயற்சிக்கப்படுகின்றது.

சட்ட மா அதிபர் யுவான்ஜித், சட்டம் ஒழுங்கு முன்னாள் அமைச்சர் திலக் மாரப்பன, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச உள்ளிட்டவர்கள் அவன்ட் கார்ட் தொடர்பில் வழக்குத் தொடர முடியாது எனத் தெளிவுபடுத்தியிருந்தனர். எனினும் பயங்கரவாதத் தடைச் சட்டம், ஆயுதச் சட்டம் மற்றும் நிதி மோசடிச் சட்டத்தின் கீழ் அவன்கார்ட்டுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

> பயங்கரவாதம் நிலவிய காலத்தில் கால்களுக்குள் முகத்தை மறைத்துக் கொண்டு அஞ்சியிருந்தவர்கள் இன்று சிங்கங் களைப் போன்று சீறத்தொடங்கியுள்ளனர்.

கோத்தபாயவும் அவரது மேலதிக செயலாளரும்பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்களை வழங்கவில்லை. அவன்கார்ட் நிறுவனத்துடன் ஒப்பந்த அடிப்படையில்செயற்பட்டுள்ளனர். பயங்கரவாதம் நிலவிய காலத்தில் கால்களுக்குள் முகத்தை மறைத்துக் கொண்டு அஞ்சியிருந்தவர்கள் இன்று சிங்கங்களைப் போன்று சீறத்தொடங்கியுள்ளனர்.

அரசின் இயலாமையை மூடி மறைப்பதற்கு இவ்வாறு அவன்கார்ட் சம்பவம் பற்றி பரப்புரை செய்யப்பட்டு வருகின்றது. கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்ய முட்டாள்தனமாகத் தீர்மானித்தால், வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப்படும் - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## காணாமற்போன யுவதி சடலமாக தோட்டத்தில் நிர்வாண நிலையில் மீட்பு

கொழும்பு, டிசெ. 4

ஆடைத் தொழிற்சாலைக்குச் சென்று காணாமற்போன யுவதி அரை நிர்வாணமான நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணையை முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனை தம்பகொல்ல பிரதேசத்தில் காணாமற்போன குறித்த யுவதி மஹியங்கனையில் வேறொரு பகுதியிலுள்ள தேயிலைத் தோட்டத்திலிருந்து நேற்று முன் தினம் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த ரம்யா விதர்னி (வயது 18) என்ற யுவதியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது சடலம் அரைநிர்வாணக் கோலத்தில் காணப்பட்டதாகவும், சடலத்துக்கு அருகில் இரண்டு அலைபேசிகள் மற்றும் பாதணி ஒரு சோடி என்பன காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கெமுனுபுர, எங்கலும ஆடைத்தொழிற்சாலையில் தொழில்புரிந்து வந்த இவர், கடந்த வாரம் காணாமற்போயிருந்ததுடன் அது தொடர்பில் அவரது உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலை யிலே அவர் சடலமாக மீட்கப்பட் டுள்ளார். அவரது மரணம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த-4)

## பாதீட்டு அறிக்கை பார்வைக்கு

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் பாதீட்டு அறிக்கை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படவுள்ளது. பிரதேச சபை கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு(பாதீடு) அறிக்கை இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை வரை பொதுமக்கள் பார்வைக்காக தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் வைக்கப்படவுள்ளதாக வலி.கிழக்கு பிரதேசசபை செயலாளர் நா.குமணன் தெரிவித்துள்ளார். (த-ரி5)

ஒளிப் படச் செய்தி



## வருடாவருடம் தொடரும் அவலம்



தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாகக் கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதிகளும் கிராமத்தின் வீதிகளும் வெள்ளத்தில் மூழ்குவதுடன் அரிப்புக்கும் உள்ளாகி வருகின்றன. வருடாவருடம் மழை காரணமாக சாந்தபுர வீதிகள் வெள்ளத்தில் மூழ்குவது தொடர்கதையாகியுள்ளது. இதன் காரணமாக மழை காலத்தில் சாந்தபுர மக்கள், மாணவர்கள், நோயாளிகள், வயோதிபர்கள் என அனைவரும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். முறையான வடிகால மைப்பு மற்றும் மழை காலத்தில் வெள்ள நீரோட்டங்கள் பற்றிய முன்னோக்கு இன்றி மதகுகள் அமைக்கப்பட்டுள்ளமை போன்ற காரணங்களால் தொடர்ந்தும் வெள்ளப் பாதிப்புக்களைச் சந்திக்க வேண்டியுள்ளது என்று மக்கள் கவலையுடன் கூறுகின்றனர்.





# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை தமிழக அரசால் விடுவிக்க முடியாது

## புதுடில்லி உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி, டிசெ 4

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளைத் தன்னிச்சையாக விடுவிக்கதமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை என புதுடில்லி உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ராஜீவ் குற்றவாளிகளை விடுவிப்பதில் மத்திய அரசுக்கே அதிக அதிகாரம் இருக்கிறது என உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், முருகன், சாந்தன், பேறிவாளன், நளினி உட்பட 7 பேரது தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கும் அதிகாரமும் தமிழக அரசுக்கு இல்லை என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு குறிப்பிட்டுள்ளது.

அதேபோல், சி.பி.ஐ விசாரித்த வழக்குகளில் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குவதில் [illegible] அரசே இறுதி முடிவு எடு[illegible] நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இந்த வழக்கை ஏற்கெனவே விசாரித்த மூன்று நீதிபதிகள் அமர்வுக்கு மாற்றி உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கட்டளையிட்டனர்.

ராஜீவ் கொலை வழக்கில் சாவுத் தண்டனை பெற்று ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் மற்றும் [illegible] [illegible] நளினி, ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேரையும் கடந்த ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி தமிழக அரசு விடுதலை செய்தது.

இதை எதிர்த்து மத்திய அரசு தொடர்ந்த வழக்கு, உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு முன்பாக நடந்து வந்தது.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எச்.எல்.தத்து, நீதிபதிகள் இப்ராஹிம் கலிபுல்லா, பி.சி.கோஸ், ஏ.பி. சாப்ரே, யு.யு.லலித் ஆகிய 5 பேர் கொண்ட அமர்வு முன்பாக நேற்று முன் தினம் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது.

வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளை விடுவிக்க தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை. மத்திய அரசுக்கே அதிகாரம் இருக்கிறது.

மேலும், அவர்களது தண்டனையை ஆயுள்தண்டனையாகக் குறைக்கும் அதிகாரமும் தமிழக அரசுக்கு இல்லை - என்றனர். (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இப்போதும் புகைந்து கொண்டிருக்கும் இனக்குரோதம்; நிறுத்த எவருமில்லையா…?

வடக்கும் தெற்கும் ஒன்றிணைந்து, போரினால் பாதிப்புற்ற மக்களுக்கு, வாழ்வாதார வளம் பெருக்கும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த உள்ளன.

அதற்கான பொறிமுறையை வடக்கு மாகாண சபையும் மத்திய அரசும் இணைந்து செயலாக்க ஏற்பாடாகி உள்ளது. மத்திய அரசின் சார்பில் மீள்குடியேற்ற அமைச்சு குறிப்பிட்ட திட்டத்துக்குப் பங்களிக்கும்.

இது தொடர்பில், மீள்குடியேற்ற அமைச்சின் அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவை அங்கீகரித்து உள்ளது.

விசேட முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள குறித்த திட்டத்தின் கீழ், ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையே கடற்பாலத்தை நிர்மாணிப்பதும், நெடுந்தீவுக்கான பெரிய படகு ஒன்றை -- நூறு பயணிகளை ஏற்றிச் செல்லத்தக்க படகு ஒன்றைக் கட்டுவதும் அடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் தீவக மக்களின் கடல்வழிப் போக்குவரத்தை சீர்செய்வதற்கான இந்தத் திட்டம் -- ஏற்பாடு -- அந்தப் பிரதேச மக்களின் போக்குவரத்தை இலகுவாக்கவும், கஷ்டங்களை நீக்கவும் மிகப்பெரிய அளவில் உதவும்.

அவை மட்டுமன்றி, இந்தச் செயற்றிட்டம் விரைந்து செயற்படுத்தப்பட்டால், விவசாயம், கடற்றொழில், பனை உற்பத்திகள் சார்ந்த தொழில்கள், தீவுப் பகுதிகளின் பொருளாதாரத்தைப் பெருக்கும்; மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் என்று நம்பலாம்.

வினைத்திறனற்ற போக்குவரத்து முறைமை காரணமாக தீவகப் பகுதி மக்கள், தொழிலாளர்கள் பிரதான நிலத்துக்கான போக்குவரத்தில் தமது பொன்னான நேரத்தையும், பணத்தையும் செலவிடும் கஷ்ட நிலையே, மிக நீண்டகாலமாக உயர்ந்து நிற்கிறது.

அது மட்டுமன்றி, வடக்கின் பொருளாதார உயர்ச்சிக்கான தீவக மக்களது பங்களிப்பும் வரையறுக்கப்படுகிறது.

முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டம், மேற்சொன்ன பின்னடைவுகளை நீக்குவதற்கு, மிகப் பெரிய அளவில் உதவும் என எதிர்பார்க்கலாம்; நம்பலாம்.

அவற்றுக்கும் மேலாக,வடக்கின் கரையோரப் பகுதிகளில் கடற்பாசி வளர்த்தல், பால் உற்பத்தி, வதிரி, தோல் பொருள் உற்பத்தி, மென்பொருள் உற்பத்தி, மென்பொருளியல் கைத்தொழில் என்பனவற்றையும் மேம்படுத்தலாம்.

அதேவேளை, மறுபுறமாக நோக்கும்போது , யதார்த்த நிலை மனதை நெருடச் செய்கிறது.

போரினால் பாதிப்புற்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களில், அது அகன்று ஆறு ஆண்டுகளின் பின்னரும், பாதிப்புற்றவர்களின் மீள்குடியேற்றம், அவர்களின் தொழில் ஆதாரங்கள், பிள்ளைகளின் கல்வி மற்றும் மிகப் பல வாழ்வியல் தேவைகள், கொழும்பு அரசுகளால் தோண்டிப் புதைக்கப்பட்ட நிலைக்கு உட்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசு கூட இது விடயத்தில் பற்றுறுதியுடன் செயற்படுவதற்கு, வழி நடப்பதற்குத் தயங்கும் தன்மையையே வெளிப்படுத்துகிறது; மேலுயர்த்துகிறது.

ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தாறுகளில் (1956) உற்பவித்த இனக்குரோதம், இதுவரையில் உள்ளும் புறமும் ஆகப் புகைந்து கொண்டிருக்கிறது. கொழும்பு அரசுகள் அதற்கு, அவ்வப்போது எண்ணெய் ஊற்றி வளர்த்துக் கொண்டிருக்கின்றன. இந்தப் போக்கு, ஒழுக்கு விழுந்து வீட்டை விழுத்தும்வரை தொடரப் போகிறதா?

# தப்பித்துக் கொள்ளப்போகும் போர்க் குற்றவாளிகள்

சேரலாதன்





தற்போதைய நல்லாட்சி அரசின் செயற்பாடுகளைப் பார்க்கும்போது இறுதிப் போரின்போது தமிழர்களின் பேரழிவுக்குக் காரணமான போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

### மகிந்த போர் வெற்றி வீரனா?

இன்னமும் ஒரு போர் வெற்றி வீரனாக பெரும்பான்மையின மக்களால் போற்றிப் புகழப் படும் மகிந்த ராஜபக்ச, எந்த அந்நிய நாட்டுச் சேனைகளுடன் போரிட்டு இந்தப் பெருமையைப் பெற்றுக் கொண்டாரோ தெரியவில்லை. தனது சொந்த நாட்டினுள்ளேயே வாழுகின்ற சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு தொகுதியினரைக் குரூரமான முறையில் எந்தவிதமான இரக்கமுமின்றிக் கொலை செய்தும், அழிவுகளை ஏற்படுத்தியும் அவர் பெற்றுக் கொண்ட அந்த வெற்றியைஒருபோர்வெற்றியெனக்கூறுவதுநகைப்புக்கு இடமான தொன்று. இந்தப் போரின்போது தமிழர்கள் எதிர்கொண்ட அழிவுகளை அன்றைய ஆட்சியாளர்கள் கணக்கிலும் சரி, கருத்திலும் சரி எடுத்துக் கொள்ளவே இல்லை. மாறாக அதைத் தமிழர்களின் தோல்வியாகவும் பெரும்பான்மை இனத்தவரின் வெற்றியாகவும் கருதி மமதையில் ஆழ்ந்தனர். இந்த நிலை இன்றளவும் நீடித்து வருகின்றது.

### வாயைத் திறப்பதற்கும் அச்சம்

மகிந்த அதிகாரத்தில் இருக்கும்வரை தமிழர்கள் தமது உரிமைகள் தொடர்பாக எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை. இவர்கள் வாயைத் திறப்பதற்குக்கூட அப்போது அஞ்சினார்கள். கைதுகள் மற்றும் காணாமற் போகச் செய்யப்படும் சம்பவங்கள் அப்போதெல்லாம் சர்வ சாதாரணமான விடயங்களாகவே காணப்பட்டன. இவை தொடர்பாக விசாரணைகள் இடம் பெறுவதில்லை. இதனால் குற்றவாளிகள் சுதந்திரமாகச் செயற்பட முடிந்தது. அதிலும் அரசுக்கு எதிராக விமர்சனங்களைத் தெரிவிப்பவர்களின் உயிருக்கு உத்தரவாதமும் இருக்கவில்லை. அரசுக்கு எதிரான விமர்சனங்களைத் தெரிவித்து வந்த ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டனர். கடத்திச் செல்லப்பட்டனர். காணாமல் போகச் செய்யப்பட்டனர். இவர்களில் பலரின் நிலை தொடர்பாக இன்றுவரையும் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. மகிந்தரின் ஆட்சிக்காலம் தமிழர்களுக்கு ஓர்இருண்ட யுகமாகவே கழிந்ததெனலாம்.

> “மகிந்த அதிகாரத்தில் இருக்கும்வரை தமிழர்கள் தமது உரிமைகள் தொடர்பாக எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை. இவர்கள் வாயைத் திறப்பதற்குக்கூட அப்போது அஞ்சினார்கள்.”

### விசாரணைகளுக்கு மகிந்த எதிர்ப்பு

மகிந்த ஆட்சியில் இருந்தவேளையிலேயே, இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களை விசாரணை செய்வது தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் மகிந்த அரசு அதனை உடனடியாகவே நிராகரித்து விட்டது. போர்க்குற்ற விசாரணைகள் நீதியாக இடம்பெறுமாயின் நாட்டின் பாதுகாப்புப் படைகளுக்குப் பொறுப்பான பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் என்ற வகையில் அவரும், போரை வழி நடத்தியவர் என்ற வகையில் அவரது தம்பியாராகிய அப்போதைய பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாயவும் குற்றவாளிகளென இனம் காணப்படுவார்கள். அத்துடன் போர்க்குற்றங்களிலும், மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்ட படையினரும் தண்டனைக்குள்ளாக வேண்டியதொரு நிலை உருவாகும். இதன் காரணமாகவே போர்க்குற்ற விசாரணைகளைத் தென்பகுதி அரசியல்வாதிகள் பலரும் விரும்பவில்லை. அத்துடன் பெரும்பான்மையின மக்களிடத்திலேயும் இது தொடர்பான எதிர்ப்புணர்வுகளை விதைத்து வருகின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தாம்கலந்து கொண்ட பரப்புரைக் கூட்டங்களில் எல்லாம் மகிந்த மற்றும் படையினர் மீது போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதைத் தான் அனுமதிக்கப் போவதில்லையெனத் தற்போதைய ஜனாதிபதி கூறினார். பெரும்பான்மையின மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கக் கூடாது என்பதற்காகவே அவர் அவ்விதம் கூறியிருப்பாரென அப்போது பலரும் நினைத்தனர். ஆனால் அவரது தற்போதைய நடவடிக்கைகள் அவர்தமதுஉண்மையானகருத்தையே வெளியிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

### சர்வதேசத்தின் தலையீடு

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் இறுதியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேசம் தலையிடக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இதனால் நீதியானதொரு விசாரணை இடம்பெறுமென்ற எதிர்பார்ப்புக் காணப்பட்டது. தமிழர் தரப்பும் இதனால் ஓரளவு மன ஆறுதல் அடைந்ததைக் காண முடிந்தது. ஆனால் தென் பகுதி இனவாதிகள் இதை முழுமையாக எதிர்த்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே இதற்கு முழுமையான எதிர்ப்புக் கிளம்பியது. சர்வதேசபோர்க்குற்ற விசாரணைகளுக்குஅரசுஇணங்குமானால் அரசு கவிழ்க்கப்படுமென எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. மகிந்த தரப்பினர் அரசியல் ரீதியில் இன்னமும் செல்வாக்குப் பெற்றுள்ள நிலையில் காணப்படுவதால் அவர்களும் அரசுக்கு அழுத்தத்தைக் கொடுத்து வருகின்றனர். இதனால் ஜனாதிபதி தர்ம சங்கடமானதொரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். அவர் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவிப்பதைக்காண முடிகின்றது. இவர்கள் தம்மீது திணிக்கப்பட்டு வரும் அழுத்தங்களைச் சமாளிக்காதவரை அவரால் உருப்படியாக எதனையுமே சாதிக்க முடியாது. போர்க்குற்றவிசாரணைகளிலும் இதுதான் நடக்கப்போகின்றது. வழக்கமாக ஏமாந்து நிற்கின்ற நிலைக்குள்ளேயே தமிழர்கள் தள்ளப்பட்டு நிற்கப் போகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# இனவாதத்தின் ஒரு பகுதியே
# நயினாதீவின் பெயர் மாற்றம்

மக்களைக் குழப்பியடிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் நயினாதீவும் இணைக்கப்பட்டுள்ளதுபோல் தெரிகின்றது. ஏற்கனவே அந்தத்தமிழ்மண்ணில் விகாரைகளை அமைத்து அதை ஒரு சிங்களப் பிரதேசமாக மாற்ற அங்குள்ள பிக்குகள் முனைந்து, ஒரு கடற்படை முகாமையும் அதற்கு உறுதுணையாக உருவாக்கியுள்ள நிலையில், இப்போது நயினாதீவு என்ற தூயதமிழ்ப் பெயரையும் மாற்றி நாகதீப என மாற்றும் நடவடிக்கையும் இடம்பெறத் தொடங்கியுள்ளது.

**சிங்கள தேசமாகக் காட்டும் முயற்சி**

சிங்கள அரசு இலங்கையை ஒரு பௌத்த சிங்கள தேசமாக உலக நாடுகளுக்கு அறிமுகப்படுத்த, தமிழ்ப் பிரதேசங்களின் பெயர்களை மாற்றவும் அந்த இடங்களில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கவும் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது. இதற்காக வரலாற்று ஆவணங்களைத் திரிபுபடுத்துகிறது. மணலாறு, வெலிஓயா எனவும் மாதகல், சம்புத்துறை, ஜம்புகோன எனவும் மாற்றப்பட்டதுடன் புதிதாக விகாரைகளும் கட்டப்படுகின்றன. பருத்தித்துறையைக்கூட பேதுரு துடுவ எனக் குறிப்பிடுகிறார்கள். இவைகள் சர்ச்சைகளைக் கிளப்பியுள்ள நிலையில் நயினாதீவிலும் சர்ச்சைகளை விரிவுபடுத்தியுள்ளனர். வேலணைப் பிரதேச சபையின் வட்டார எல்லைகள் வரைபடத்தில் நயினாதீவு 8ஆம், 12 ஆம் வட்டாரங்கள் என்றிருந்த பகுதிகள், புதிதாகத் தற்போது நாகதீப வடக்கு, நாகதீப தெற்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் அந்தப் பிரதேசத்தை சிங்களக் கிராமமாக எதிர்காலத்துக்குக் காட்டமுனைகிறார்கள்.



கிறிஸ்துவுக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். குடாநாடு இரண்டுதீவுகளாக இருந்துள்ளது. மேற்கே நாகதீபம், கிழக்கே எருமை முல்லைத்தீவு எனவும் பெயர் பெற்றிருந்த இவை பிற்காலத்தில் ஏற்பட்ட கடல்கோளில் துண்டுதுண்டாக உடைய உருவான தீவுகளே நெடுந்தீவு, நயினாதீவு உட்பட ஏனைய அதன் அருகில் காணப்படும் தீவுகளுமாகும். வரலாற்று உண்மைகள் இப்படி இருக்க, புத்தபெருமான் அங்கு வருகை தந்திருந்தார் என்பதற்காக, அதற்கு எப்படி நாகதீப எனப் பெயரிடமுடியும்? புத்தர் சிங்களவருமல்ல பௌத்த மதம் சிங்களவருக்கானதுமல்ல. பௌத்த மதம் தமிழர்களாலும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. ஆதியில் சிங்கள இனத்தவர் என எவருமே இருந்ததில்லை. நாகரும், இயக்கரும், கலிங்கரும் தமிழர்களும் கலந்ததே சிங்கள இனத்தவரின் தோற்றமாகும்.

**சான்றுகள் அழிப்பு**

இந்தச் சான்றுகளையெல்லாம் அழித்துப் புதியவரலாற்றைத் தோற்றுவிக்க முனையும் சிங்களவரின் முயற்சிதான் தமிழ்ப் பகுதிகளை சிங்களப் பெயர்களாக மாற்றுவதும், விகாரைகளை அமைப்பதுமாக உள்ளது.

ஆரம்ப காலங்களில் நயினாதீவுக்கு புளியந்தீவில் இருந்து நாகம் ஒன்று தினமும் மலர் எடுத்து வந்து அங்குள்ள அம்பாளைத் தரிசித்துச் சென்றதாக வரலாறு இருந்தது. ஏற்கனவே நாகதீபம் என்ற பெயரில் அந்தப் பிரதேசம் வழங்கப்பட்டுள்ளது. நயினாதீவு என்று அழைக்கப்பட்டும் இருக்கிறது. பௌத்தமதம் இந்து மதத்தின் சாயல்களைக் கொண்டதாகவே இருந்துள்ளது. முருகன் விநாயகர் உருவங்கள் இன்னமும்கூட விகாரைகளில் காணப்படுகின்றன. 'பௌத்தம் இந்து மதம்' சார்ந்தது. என்பதால் தமிழர்கள் பௌத்தத்தையும் வரவேற்றனர். நயினாதீவில் விகாரை அமைய இதுவே காரணமாக இருந்திருக்கலாம்.

அப்போதெல்லாம் இனங்களுக்கிடையில் மனக் கசப்புக்கள் இருந்ததில்லை.



> நயினாதீவுக்கு வரும் தென்னிலங்கை மக்கள் மீது இங்குள்ள மக்கள் துன்புறுத்தல்களை மேற்கொள்வதாகவும், சிங்கள மக்கள் மீது வெறுப்புணர்வுகளை வெளிப்படுத்துவதாகவும் ஏற்கனவே தென்பகுதியில் தவறான கருத்துக்களைக் கூறி இனவாதத்தை வளர்க்க முற்பட்டுள்ளனர்.

இப்போது நாட்டை வேரறுக்கும் இனப் பிரச்சினைக்கு மேலும் வலுவூட்டும் நடவடிக்கைகளை அரசு கைவிட வேண்டும்; இனவாதம் தணிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உள்ள நிலையில், அங்குள்ள விகாராதிபதியின் நடைமுறைகள் சற்றேனும் ஏற்புடையனவல்ல. நயினாதீவுக்கு வரும் தென்னிலங்கை மக்கள் மீது இங்குள்ள மக்கள் துன்புறுத்தல்களை மேற்கொள்வதாகவும் சிங்கள மக்கள் மீது வெறுப்புணர்வுகளை வெளிப் படுத்துவதாகவும் ஏற்கனவே தென்பகுதியில் தவறான கருத்துக்களைக்கூறி இனவாதத்தை வளர்க்க முற்பட்டுள்ளனர். இது குறித்து பல செய்திகள் வெளியாகி இருந்தன.

**110 அடி உயரத்தில் புத்தர்சிலை**

இப்போது 110 அடி உயரமான புத்தர்சிலை ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளனர் எனவும் தெரிகின்றது. அங்கே பல காணிகளைக் கொள்வனவு செய்துமுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. நயினாதீவு மக்களைத் திருப்திப்படுத்தக்கூடிய உதவிகளை அந்த விகாராதிபதி அங்கு வழங்கியிருந்தாலும்கூட அவரது நடவடிக்கைகள் தமிழ் இனத்துக்கு எதிரானதாகவே காணப்படுகின்றது.

இரு இனத்தவரும் தம்மிடையே ஏற்படுத்திக் கொள்ள விரும்பும் நட்புப் பாலத்தைக் தகர்க்க முனையும் காரியங்களில் எவரும் குறிப்பாக, துறுவறத்தைப் பூண்டவர்கள் தவிர்த்துக் கொள்வதுதான் அவரவர் கைக்கொள்ளும் மதங்களுக்குப் பெருமையளிக்கும். வரலாற்றுப் பெருமை மிக்க உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்களது ஈடுபாட்டுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் அருளாட்சியில் உள்ள நயினாதீவின் பெயரை நாகதீப என மாற்றியமைப்பதை நயினாதீவு மக்களோ, ஏனைய தமிழ் மக்களோ அங்கீகரிக்க மாட்டார்கள். முதலமைச்சர் கூறியதுபோன்று சிங்கள மக்கள் வேண்டுமானால் நாகதீப எனச்சொல்லிக் கொள்ளட்டும். இது விடயத்தில் உள்ளூராட்சி மாகாண அமைச்சு மௌனம் சாதித்து இளவாதத்துக்குத் தூபமிட வேண்டாம்.

## மொழியைத் திரிபுபடுத்தாதீர்

எஸ்.கிருஷ்ணன் என்பவர் நவம்பர் 18 ஆம் திகதிய உதயனில், "பெயரைச் சரியாக ஆங்கிலத்தில் எழுதுதல்" எனும் தலைப்பில் வாசகர் திருமுகத்தில் எழுதிய கருத்துக்கு இந்த மறுதலிப்புக் கருத்துப் பகிரப்படுகிறது.

தமிழ்மொழி பெரிதும் இயற்கை ஒலிகளோடு ஒத்திசைந்தது. தமிழ்மொழி தோன்றிய காலந்தொட்டு அன்னியர் தொடர்பு ஏற்படாத வரை மற்றைய மொழிகள் போலன்றி ஓரெழுத்துக்குப் பல ஓசைகளை உபயோகிக்க வேண்டிய தேவை தமிழர்களுக்கு எழவில்லை. பின்னர் பிறமொழிகள் தமிழில் கலந்த பின்னரே பல ஓசைப் பிரச்சினைகள் எழுந்தன.

நவீன காலத்தில், ஆங்கில மொழி பல்துறைகளிலும் கோலோச்சுவதால் ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் இன்மையால் வேறு மொழிச் சொற்களை அப்படியே தமிழ் மொழியில் ஓசை பிறளாது எழுதுகையில் பிரச்சினை எழுகிறது. அதற்காக ஓசை பிறழும் ஒவ்வா முறையில் தமிழை எழுதிக் குழப்ப வேண்டியதில்லை. இயலுமானவரை தமிழ் ஓசை பேணி எழுதுவதே சிறந்தது.

இந்தக் கருத்தியலை கிருஷ்ணன் அளித்துள்ள உதாரணங்களையே வைத்து மறுதலித்து விளக்கலாம்.

Kannan ஆங்கிலத்தில் சரியாகவே எழுதப்படுகிறது. இதில் ஆங்கிலமோகம் காட்ட விரும்பினால் கனன் என்று உச்சரிக்கப்படும். ஏன் பாஸ்கரனை Baskaran என்றே எழுதலாம். பார்த்தீபன் ஐ Pardeepan என எழுதுவது முழுத் தமிழ்க் கொலையாகும். Partheepan என்றே ஆங்கிலத்திலும் எழுதலாம்.'r' இங்கு மௌனமாகிறது.

Dengue fever என்பதில் Dengue என்பது ஸ்பானிய மொழி ஊற்று என்று கருதப்படுகிறது. இதன் இயல்பான ஆங்கில ஒலிப்புகள் பின்வருமாறு:- பிரித்தானியர்கள் டெங்கெய் என்பர், வடஅமெரிக்கர் டெங்கீ என்பர்; இங்கே ககரம் மென்மையாயுள்ளது. தமிழில் தெங்கே அல்லது தெங்கீ என்று எழுதலாம்/ஒலிக்கலாம். ஏனெனில் டகரம் தமிழில் மொழிக்கு முதலில் வராது.

ஆக அனைத்தும் உலகமயமாக்கப்படுகிறது என்பதற்காக அரைவேக்காட்டுத்தனமாக கண்மண் தெரியாமல் மொழியை விகாரப்படுத்த வேண்டியதில்லை. விகாரப்படுத்தவும் கூடாது. இடறு முறையில் இங்ஙனம் மாறி/மாற்றிக் கொள்வது எங்ஙனம் அறிவை வளர்க்கப் பயன்படும்?

*கே.சனந், உபயகதிர்காமம், புலோலி.*

## இடமாற்றத்தில் தொழில்நுட்ப அலுவலருக்கும் உதவுக

வடக்கு மாகாணத்தில் முகாமைத்துவ உதவியாளர், அபிவிருத்தி அலுவலர், சாரதி போன்ற சேவையில் உள்ளவர்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இதற்கு ஏற்றவகையில் வடமாகாண பொதுநிர்வாக செயலகம், வடமாகாண பிரதம செயலாளரின் பணிப்புரையின் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன்மூலம் வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் தீவகப் பகுதிகளில் உள்ளவர்களும் நன்மை அடையவுள்ளனர்.

இங்கு முக்கியமான விடயம் யாதெனில், சகல பிரிவினருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டபோதும் தொழில்நுட்ப அலுவலர்கள் ஆகிய நாம் ஐந்து வருடங்களுக்கு மேல் ஒரு சேவை நிலையத்தில் வேலை செய்கிறோம்.

இதனைவிட புறநெகும திட்டத்தில் (நெல்சிப்) உள்ளோம் எனக்கூறி இடமாற்றமின்றி தொழில்நுட்ப அலுவலர்கள் ஆகிய நாம் பாதிக்கப்பட்டு பல்வேறு சிரமங்களுக்கும் ஆளாகின்றோம்.

தீவகப் பிரதேசங்களில் 7 வருடத்துக்கு மேல் உள்ளூராட்சி மன்றங்களில் அபிவிருத்தி அலுவலர், தொழில்நுட்ப அலுவலர் சேவையில் உள்ளவர்கள் இடமாற்றமின்றி உள்ளனர்.

இதனால் பல்வேறு மனத்தாக்கங்கள், உளத்தாக்கங்களுக்கு உள்ளாகி வேதனை அனுபவிக்கின்றோம். விண்ணப்பம் கோரப்பட்டு இடமாற்றம் செயற்படுத்தப்படுவதில்லை. இடமாற்றங்களைச் செய்யும்போது ஒட்டுமொத்தமாக சகல யாழ்.மாவட்ட தொழில்நுட்ப அலுவலர்கள், அபிவிருத்தி அலுவர்கள் அனைவரையும் இடமாற்ற வேண்டும்.

பிரதம செயலாளர் விவரங்களை முழுமையாகத் தொகுத்து அடுத்த ஆண்டு முதல் செயற்படுத்துவதன் மூலம் வடக்கு நல்லாட்சித் தத்துவம் மேலும் மெருகிட்டுச் செல்லும்.

இதுவே அபிவிருத்திக்கும் உகந்தது. மாற்றம் ஊடாக நிலைபேறு உண்டு. இல்லாவிடில் யாவும் பூச்சியமே.

– இ.நடேசன்

*பாதிக்கப்பட்ட அலுவலர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ். மீது தாக்குதலை ஆரம்பித்தது பிரிட்டனும்

## டொர்னாடோ போர் வானூர்திகள் சரமாரியான குண்டு வீச்சு



ஹொங்கொங், டிசெ. 4
இஸ்லாமிய அரசை உருவாக்கியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் மீதான வான் தாக்குதல்களுக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்றம் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து பிரிட்டனின் போர் விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளன.
ஐ.எஸ். மீது ஏற்கனவே வான் தாக்குதலை நடத்திவரும் அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேற்கு நாடுகளுடன் இப்போது பிரிட்டனும் இணைந்து கொண்டுள்ளது.
முன்னதாக பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தாக்குதலுக்கு ஆதரவாக 397 வாக்குகள் கிடைத்தன. 223 பேர் எதிர்த்து வாக்களித்தனர். 10 மணி நேரம் தொடர்ந்த விவாதத்தின் பின்னர் தாக்குதலுக்கான அனுமதியை நாடாளுமன்றம் வழங்கியது.

> “முன்னதாக பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தாக்குதலுக்கு ஆதரவாக 397 வாக்குகள் கிடைத்தன.”

இதனை அடுத்து, சைபிரஸில் நிலை கொண்டுள்ள பிரிட்டிஷ் டொர்னாடோ போர் விமானங்கள் நான்கு ஐ.எஸ். நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்காகப் புறப்பட்டன. அந்த அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள நான்கு எண்ணெய் வயல்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
“சிரியாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதல் வலிந்த தாக்குதல் இது” என பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
தாக்குதல்களைத் துல்லியமாக நிகழ்த்துவதற்காக தானியங்கி உளவு விமானங்கள் (ட்ரோன்–வண்டு) இலக்குப் பகுதியில் பயன்படுத்தப்பட்டதாகவும், குண்டுத் தாக்குதல் விமானங்களுக்கு அவை சரியான இடங்களை அடையாளம் காண உதவிய தாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.
ஐ.எஸ். நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியமையை, “நாட்டைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட மிகச் சரியான முடிவு” என்று பிரதமர் டேவிட் கெமரூன் தெரிவித்திருந்தார். ஆனால் இது மிகப் பெரிய தவறு என்று அவரது எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் கண்டிக்கிறார்கள். (உ)

# அமெரிக்கத் தகவல்களை திருடவில்லையாம் சீனா

## அமெரிக்காவுடனான கலந்துரையாடலின் பின் அறிக்கை

ஹொங்கொங், டிசெ. 4
அமெரிக்க அரசு மற்றும் அரச ஊழியர்களின் விவரங்களைத் திருடியது சட்ட விரோதக் கும்பலே தவிர அரச அதிகாரிகள் அல்லர் என சீனா அறிவித்துள்ளது.
கடந்த ஜூன் மாதம் அமெரிக்க இணையங்களில் ஊடுருவிய சீனப் ஊடுருவிகள் (ஹக்கேர்ஸ்) பல்வேறு தரவுகளையும் திருடி இருந்தனர் என்று அமெரிக்கா அறிவித்தது. இது பெரும் பரபரப்பான விடயமாக ஊடகங்களில் அடிபட்டது. சீன அரசே இந்த ஊடுருவலை நிகழ்த்தியது என்ற வொஷிங்ரன் குற்றஞ்சாட்டியிருந்தது.
இதற்கிடையே அமெரிக்கா – சீனா ஆகிய நாடுகளில், இணைய வழி தாக்குதலுக்கு எதிராகத் தகுந்த வழிமுறைகளைக் கண்டறியும் முயற்சி தொடர்பில் இருநாடுகளுக்குமிடையில் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே சீனா, அந்தத் திருட்டுக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிவித்துள்ளது.
இந்த இணையத் தாக்குதலில் 22 மில்லியன் அமெரிக்க அரச ஊழியரின், ஒப்பந்ததாரரின் விவரங்கள் திருடப்பட்டுள்ளன. ஒரே தடவையில் நிகழ்த்தப்பட்ட இணைய வழி ஊடுருவலில், கைரேகை பாதுகாப்பையும் மீறி இந்தத் தகவல்கள் திருடப்பட்டமை இணையப் பாதுகாப்புத் துறையினரையும் தேசிய பாதுகாப்புத் துறையினரையும் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.
இந்த ஊடுருவலின் பின்னணியில் சீனா இருக்கிறது எனச் சந்தேகிப்பதாக அமெரிக்க தேசிய புலனாய்வு இயக்குநர் தெரிவித்திருந்தார்.
அமெரிக்காவின் அரசு தொடர்பான விவரங்கள் சீனாவின் இணைய வழித் திருடர்களினால் திருடப்பட்டன என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. விசாரணைகளின் பின்பு , இது குற்றவியல் வழக்காகப் பதிவு செய்யப்பட்டது.
எனினும் இப்போது சீனா விடுத்துள்ள அறிக்கையில் இந்த இணைய வழித் திருட்டில், தொடர்புபட்ட நபர்கள் பீஜிங்கைச் சேர்ந்தவர்கள் என்றும், சுவட்டு முயற்சி மூலம் இந்த இணைய வழித்தாக்குதல் இடம்பெற்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ–ரி4)

## பைபிள் கால அரசனின் முத்திரை கண்டுபிடிப்பு


ஜெருசலேம், டிசெ. 4
இஸ்ரேலின் தொல்பொருள் ஆய்வாளர்கள் மீட்டெடுத்த 2,700 வருடங்கள் பழைமை வாய்ந்த மட்பாண்டம் ஒன்று அந்தக் காலத்து அரச முத்திரை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அந்த முத்திரை 13 மில்லி மீற்றர் அகலமுடையது. யூத அரசனான எசேக்கியா ராஜாவின் கையொப்பத்துடன்கூடிய பாபிரஸ் ஆவணமும் அதனுடன் கண்டெடுக்கப்பட்டது.
இந்தத் தொல்பொருள் 2009ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டிருப்பினும், இது தொடர்பிலான பல வருட ஆய்வுகளின் பின்பு தற்போது தான் இது என்ன பொருள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
ஜெருசலேமின் எபிரேய பல்கலைக் கழகக் குழுவினர், பழைய ஜெருசலேம் நகரைச் சூழவுள்ள பிர தேசத்தில் இதனைக் கண்டு பிடித்தனர். எசேக்கியா அரசர் கிறிஸ்துவுக்கு முன் 727 - 698 ஆண்டுகளில் ஆட்சி செய்துள்ளார்.
அந்தக் காலத்தில், அசேரிய சிற்றரசர்களும் ஆட்சி புரிந்துள்ளனர். தலைநகரான ஜெருசலேமில் பொருளாதார, சமய , சமூகவியல் ரீதியில் சிறந்த ஆட்சி புரிந்துள்ளார். பைபிளில் இவரது ஆட்சி பற்றிய குறிப்புகள் நாளாகமம், அரசர்கள் ஆகிய இரு புத்தகங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.
யூத அரசன் ஒருவரின் முத்திரையுடனான ஆவணம் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல் முறை என தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (உ–ரி4)



# பனியில் உறைகிறது அமெ. டெக்சாஸ்

## வெள்ளம், பனிப் புயலால் 14 பேர் சாவு

டெக்சாஸ் , டிச.4
அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் கடந்த ஞாயிறு பெய்த பலத்த மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட கடும் பனிப் பொழிவால் அந்த மாநிலமே உறைந்து போயுள்ளது.
திடீர் வெள்ளம் மற்றும் மோசமான காலநிலையால் இதுவரையில் 14 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆர்கன்சஸ், ஒக்லகோமா, வடடெக்சாஸ் ஆகிய பகுதிகள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.
பனிப் புயலும் தாக்கியதால் நகரம் முழுவதும் பனிமூடி உறைந்துபோய்க் காணப்படுகிறது. அயோவா பிரதேசம் பனிப் புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சாலைகளையும் பனி மூடி உறைந்து கிடக்கின்றது. இதனால் வாகனங்கள் சறுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அங்கு போக்குவரத்து கிட்டத்தட்ட முற்றாக முடங்கியுள்ளது.
ஒக்லகோமாவில் வீசிய புயலினாலும் வெள்ளத்தினாலும் ஏற்பட்ட பாதிப்பைச் சமாளிக்க மாநில அரசு அங்கு அவசர காலநிலையை அறிவித்துள்ளது. அங்கு ஒரு லட்சம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.
டெக்சாஸ் மாகாணத்தின் வேறு பல பகுதிகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர். பனிப் புயலினால் வர்த்தக மையங்கள், வணிக வளாகங்கள் என்பவற்றுக்கும் கடும் இழப்பு ஏற்பட்டுள்ளது.
வடடெக்சாஸில் பெய்து வரும் கடும் மழையைத் தொடர்ந்து 7 பேர் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். எனினும் மீட்புப் பணியாளர்கள் துரிதமாகச் செயற்பட்டு அவர்களை மீட்டனர். வடடெக்சாஸில் 1991 ஆம் ஆண்டு பெய்த 53.4 புள்ளிகள் மழைக்குப் பின்பு இந்த ஆண்டு அதைவிட அதிகமாக 56 புள்ளிகள் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.
இந்த வருட விடுமுறையைக் கழிக்க 47 மில்லியன் அமெரிக்கர்கள், சுற்றுலாப் பயணங்களுக்குத் திட்டமிட்டிருந்தனர். தற்போதைய காலநிலையால், இவை அனைத்தும் பெரும் பாதிப்புக்குள்ளாகும் என்று தெரிகின்றது.
(உ–ரி4)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ...நிலை மாற்றங்களால் ...டையும் உயிரினங்கள்

...டிசெ.4
... மாற்றங்களி
...ரினங்களில்
... மாற்றங்கள்
...க்கப் பட்டுள்
...டமாக பனிப்
...ன ஆட்டிக்,
... பகுதிகளில்
...களில் முதலா
...ந்த
...06
...டு
...கப்
...ள
...க்
...ண
...ட்
...ட
...ன.
...ங்கள்குறி...ட்
...ன் இருப்பை
...ம் காரணியாக
...டுள்ளது.
... மாற்றத்துக்
...ர் பல்வகை
... திறன் என
...அறிவியலாளர்
...றனர். தொடர்ச்
...ப்வுகளின் மூலம்
... ஆண்டு இந்த
...ள் நிரூபிக்கப்
...ஆம் ஆண்டு
...ப்பட்ட அறிக்
...லநிலை கார

ணமாக 34 இனங்கள் இனப்பெருக்கத்தை த் தவிர்த்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

திமிங்கல இனத்தில் பலூகா - நார்வல் எனும் இரு இனங்கள் இணைந்து, புதிய இனத்தை உரு வாக்கியுள்ளன. 1980



ஆம் ஆண்டு அவதானிக்கப்பட்டவற்றைவிட நிறத்திலும் வடிவத்திலும் உயிரினங்களில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

இதனைத் தவிர பறக்கும் அணில், கடல் சிங்கம், கடல் நாய் , கடல் பன்றி என்பவற்றிலும் வெளித் தெரியக்கூடிய மாற்றங்கள் அவதானிக்கப்பட்டுள்ளனவாம்.

(உ-ரி4)

## ...த்தைவிட உறுதியாக ...லிக்கும் மூலகம்

...ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு


...யா, டிசெ.4
...விட பளபளப்பான, உறுதியான மூலக்கூறை
...கள் கண்டுபிடித்துள்ளனர். கியூ - காபன்
...தச் சேர்வையை அமெரிக்காவின் வட
...ரியா பல்கலைகழக ஆய்வாளர்கள் கண்டு
...னர்.
...விட உறுதியானது என்றாலும் இதனை அணி
...அணிய முடியாது. இந்தச் சேர்வை மருத்துவ
...க்காகவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காபன்
...றுடன் குறிப்பிட்ட உலோகச் சேர்வை
...டு இந்த மூலக்கூற்று சேர்வை உருவாக்கப்
...த்தை
...யாக
..., இது
...ல்ல
...கை
...ாரு
...ட்



... இது செயற்கையாக உருவாக்கப்பட்ட சேர்வை.
...ஈர்ப்பும் உண்டு என்பதாலும் அணிகலனாக
... உத்தேசிக்கப்படவில்லை. ஆனாலும் இந்தக்
...யின் மூலம் மேலும் பல உலோகங்களைக்
...கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன" என்று
...கள் தெரிவித்துள்ளனர்.
...ாகம் மனிதக் கண்களுக்கு 200 நானோ செக்
... ஜொலிக்கும். அதாவது ஒரு செக்கனுக்கு 200
... தெறிப்புக்களை ஏற்படுத்தும். இதன் உருகு
...0 டிகிரி செல்சியஸ் ஆகும். இயற்கை வைரங்
...த நிலையைவிட, இதன் உருகுநிலை 2 மடங்கு
...த்துடன் இயற்கை வைரங்கள் உருவாக பில்
... மேற்பட்ட ஆண்டுகள் எடுக்கும். இது குறைந்த
...உருவாக்கப்படக்கூடியது.

(உ-ரி4)

# தொடர்ந்தும் தத்தளிக்கும் சென்னை



## முடுக்கி விடப்பட்டுள்ளன மீட்புப் பணிகள்

சென்னை, டிசெ. 04

"ஹொலிவூட் திரைப்படக்காட்சிகளை மிஞ்சுமளவுக்கு சென்னை நகரம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக, தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தப் பேரிடரினால் - பெரு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதுடன், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் மற்றும் பிரதமர் மோடி ஆகியோர் பாதிக்கப்பட்ட பகுதிகளை உலங்கு வானூர்தியிலிருந்து நேற்றுப் பார்வையிட்டுள்ளனர்.

இந்த இயற்கைச் சீற்றத்தினால் இதுவரை 270 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 450 இற்கு மேற்பட்ட நலன்புரி நிலையங்களில் 3 லட்சத்துக்கும் அதிக மானமக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும்,



தமிழக அரச அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

நவம்பர் மாதத்தின் இரண்டாம் வாரத்தில், பருவப் பெயர்ச்சி மழை காரணமாக சென்னையில் பெரு வெள்ளம் ஏற்பட்டிருந்தது. இந்த வெள்ளம் வடிந்தோடுவதற்கு முன்னரே, இரண்டாவது தடவையாகவும் சென்னை மாநகரம் கடும் மழையை எதிர் கொண்டுள்ளது. வங்கக் கடலில் உரு வான தாழமுக்கம் காரணமாக, கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவிலிருந்து கடும் மழை தொடர்ச்சியாகப் பெய்தது.

### மாண்ட மாடி வீடுகள்

107 ஆண்டுகளின் பின்னர் ஏற்பட்ட இந்தப் பெருவெள்ளம் காரணமாக, சென்னையின் தொடர்மாடிக் குடியிருப்புக்கள் நீரில் மூழ்கியுள்ளன. சென்னை மாநகரம் அதனுடன் இணைந்த புறநகர்ப் பகுதிகள் யாவும் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் தனித் தனிக் கட்டடத் தீவுகளாகக் காட்சியளிக்கின்றன. மாடி வீடுகளினுள்ளும் வெள்ளம் புகுந்தமையினால் மக்கள், வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வீதிகள் எங்கும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதனால், மக்கள் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததாலும் வெளியேற முடியாத நிலையில் தத்தளிக்கின்றனர். தமிழகப் பொலிஸார், இந்திய கடலோரக் காவல் படையினர், தேசிய மீட்புக் குழு, இந்திய இராணுவத்தினர், இந்தியக் கடற்படையினர் என்று பல தரப்பினரும், வீதி வெள்ளத்தில் படகுகளில் சென்று வீடு வீடாக மக்களை மீட்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

### முடங்கிய போக்குவரத்து

வீதிகள் - பாலங்கள் யாவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் போக்குவரத்து முடங்கியுள்ளது. அரச [illegible] குறிப்பிட்ட இடங்[illegible] கின்றது. ரயில் தண்டவாளங்கள் - ரயில் நிலையங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், சில ரயில் நிலையங்கள் தற்காலிக நலன்புரி நிலையங்களாக இயங்குவதாலும் ரயில் சேவையும் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள விமான நிலையத்தினுள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் ஓடுபாதை முழுவதும் வெள்ளக் காடாகியுள்ளது. இதனால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமானங்கள் கூட வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, விமான நிலையத்தின் தடுப்புச் சுவர்களுக்கு அருகில் விடப்பட்டுள்ளன. இருப்பினும் சென்னைக்கான விமானப் போக்குவரத்து நேற்று மீள ஆரம்பிக்கப்பட்டது. சென்னைக்கு அருகில் உள்ள ராயப்பேட்டை இராணுவ முகாமிலிருந்து விமான சேவைகள் இடம்பெற்றன.

### இருளில் மூழ்கிய நகரம்

வெள்ளத்தில் மாநகரமே மூழ்கியுள்ளதால், சென்னையின் பல பகுதிகளில் மின்சாரம் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் வங்கிச் சேவைகள் - தொலைபேசிச் சேவைகள் என்பன செயலிழந்துள்ளன.

> வீதிகள் எங்கும் வெள் ளம் பெருக்கெடுத்து ஓடுவதனால், மக்கள் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததாலும் வெளியேற முடியாத நிலையில் தத்தளிக்கின்றனர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணி தொடக்கம் நேற்றுக் காலை 8 மணி வரையிலான காலப் பகுதியில் மழை ஓய்ந்திருந்தது. இதன்போது பொது மக்கள், தமக்குத் தேவையான அத்தியவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகவும், மருந்துகள், தண்ணீர்ப் போத்தல்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் வெளியே வந்தனர்.

இருளில் மூழ்கிய நகரத்தில் சிறிய விளக்கு வெளிச்சத்திலேயே மக்கள் தமது சேவைகளைப் பெற்றுக்கொண்டனர். மேலும், பொருள்களும் அதிகரித்த விலையிலேயே விற்பனை செய்யப்படுவதால் மக்கள் அந்தரித்துள்ளனர். அதனைவிட, வர்த்தக நிலையங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையினால் பொதுமக்களுக்குத் தேவையான பொருள்களின் கையிருப்பும் குறைவாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### உதவும் முகநூல்

[illegible] உள்ளார்கள் என்பது போன்ற விவரங்கள் முகநூல் வழியாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் உதவி புரிபவர்களும், எங்கு - எத்தனை பேர் தங்குவதற்குரிய வசதிகள் உள்ளன என்ற விவரங்களையும் தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு முகநூலில் தகவல் பரப்பி வருகின்றனர். இதனால் மீட்புப் பிரிவினர் மற்றும் உணவுகள் - உடைகள் வழங்குபவர்கள் ஆகியோர் இலகுவாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யக் கூடியதாக உள்ளது.

இதனைவிட, முகநூல் புதிய செயலி ஒன்றை நேற்று அறிமுகப்படுத்தியுள்ளது. அதில் ஒவ்வொருவரும் தாம் பாதுகாப்பாக உள்ளோமா? அல்லது உதவி தேவையா? என்ற விவரத்தை வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளது.

### உலாவரும் உலங்கு வானூர்திகள்

நேற்றைய தினம் சற்று மழை ஓய்ந்திருந்தமையினால், உலங்கு வானூர்திகள் ஊடாக பொது மக்களுக்கு பொட்டலங்களாக உணவுப் பொருள்கள் - உடைகள் என்பன போடப்பட்டன. அத்துடன் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் பிரதமர் மோடி ஆகியோர் உலங்கு வானூர்தியிலிருந்து வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர். இதே வேளை, சென்னையில் வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்பு 12 ஆயிரம் கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### ஊடக நிறுவனங்களும் மூழ்கின

தொடர் மழை காரணமாக, ஊடக நிறுவனங்களின் அலுவலகங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. 'த இந்து' ஆங்கில ஊடகம், தனது 137 ஆண்டுகால வரலாற்றில் சென்னைப் பதிப்பை நேற்று முன்தினம் அச்சிடவில்லை. 'த இந்து' ஊடக அலுவலகத்தினுள் வெள்ளம் புகுந்தமையினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதேபோன்று ஜெயா தொலைக்காட்சியின் சேவைகளும் நேற்று முன்தினத்திலிருந்து முடங்கியுள்ளது. புதிய தலைமுறை, வேந்தர், மெகா தொலைக்காட்சிகள் தமது நேரடி ஒளிபரப்பை நிறுத்தியுள்ளன. (5)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரம் நாவலர் உயர்நிலைப்பள்ளியின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு பூர்த்தி விழா

ஆறு. திருமுருகன்

நல்லை நகர் நாவலர் பெருமான் 1858 ஆம் ஆண்டில் தமது முப்பத்தாறாவது வயதில் அரிய தமிழ் நூல்கள் சிலவற்றை அச்சிடுவதற்காக இந்தியா சென்றார்.

அந்தத் தருணத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஏற்பாட்டிலும் தருமபுர ஆதீனத்தின் ஏற்பாட்டிலும் சைவப் பிரசங்கங்களைச் செய்து வந்தார். தமிழ் நாட்டில் மூன்று ஆண்டுகள் பத்துமாத காலம் வசித்தார். இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்நாட்டில் பலர் பயன்படுத்தி நாவலரிடம் கற்றனர். நாவலரின் பேராற்றலை உணர்ந்து கொண்ட பலர் தமிழ் நாட்டிலும் சைவப் பிரகாச வித்தியாலயங்களை நிறுவ வேண்டுமென வேண்டினார். நாவலர் சிதம்பரத்துச் சூழலில் சைவப் பாடசாலை அமையவேண்டும் என்ற சிந்தனையை முன்வைத்தார். தில்லைவாழ் அந்தணர் கள்மரபில்வந்தவர்கள் போதிய சமய அறிவு பெறாது இருப்பது கண்டு கவலையுற்றார். சிதம்பரத்துத் தீட்சிதர்கள் விடயமாக நாவலர் துண்டுப் பிரசுரமொன்றும் வெளியிட்டிருந்தார். இந்த நிலையில் முதலில் சிதம்பரத்தில் ஒரு வித்தியாசாலையை நிறுவ வேண்டும் என்ற கருத்தை முன் வைத்தார். அதன் பொருட்டுபலநாள்சிந்தித்து பதின்நான்கு திட்டங்களை விளக்கி ஓர் அறிக்கையை வெளியிட்டார். ஆனால் சிதம்பரத்துக் கல்விநிலையம் நிறுவ தமிழகத்தில் பணம் சேரவில்லை. இந்த நிலையில் யாழ்ப் பாணத்தில் பணம் திரட்டுவதற்கு 1862 ஆம் ஆண்டு பங்குனிமாதம் நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்துக்கு வந்தார்.

**சிதம்பரத்தில் வித்தியாசாலை**

யாழ்ப்பாணத்தில் தாம் நிறுவிய வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் சபையைக் கூட்டி சிதம்பரத்தில் வித்தியாசாலை ஒன்று ஸ்தாபிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்கினார். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிலர் தங்களால் இயன்ற பொருளுதவிசெய்ய முன்வந்தார்கள். இந்தியாவிலிருந்து திரும்பிய சில நாள்களில் பருத்தித்துறை சித்தி விநாயகர் கோயிலில் நாவலரின் தொடர்ச் சொற்பொழிவு இடம்பெற்றது. அந்தச் சொற்பொழிவிலும் சிதம்பரத்தில் பாடசாலை நிறுவுவது பற்றி எடுத்துரைத்தார். சித்திவிநாயகர் அறங்காவலர்களும் புலோலியிலுள்ள சில வர்த்தகர்களும் நாவலரது சிதம்பரப் பாடசாலை உருவாக்கலுக்கு உதவ முன்வந்தனர். 1864 ஆம் ஆண்டு தமது நாற்பத்தி ஓராவது வயதில் சிதம்பரத்தில் வித்தியாசாலை தொடங்கும் ஆயத்தங்களுடன் தமது ஐந்தாவது இந்தியப் பயணத்தைத் தொடங்கினார். சிதம்பரத்தில் பாடசாலை நிறுவும் பணி சிறப்பாக நடைபெற்றவேளை நாவலர் பெருமானுக்கு கூரைவேலைக்குப் போதிய பணம் கிடைக்கவில்லை. இறுதியில் வேங்கடாசல ஐயர் என்பவர் நாவலர் மீது கொண்ட பற்றினால் கூரைவேலை யாவற்றையும் தானே பொறுப்பேற்றார்.

> யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சுவாமி ஞானப்பிரகாசர் சிதம்பரத்தில் வெட்டிய திருக்குளத்துக்கு அருகில் நாவலரால் உருவாக்கப்பட்ட சேக்கிழார் திருக்கோயிலிலிருந்து நாவலர் பெருமானின் உருவச்சிலை ஊர்வலமாகக் கொண்டுவரப்பட இருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கூரைக்குரிய மரங்களைக் கொண்டு சென்று சிதம்பரத்துப் பாடசாலைத் திருப்பணியை நிறைவேற்றுவதில் வேங்கடாசல ஐயரின் பங்களிப்பு பேருதவியாக அமைந்தது என நாவலரது வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1864 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் சிதம்பரம் சைவ வித்தியாசால்லை திறந்து வைக்கப்பட்டது. இந்தப் பாடசாலையின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு நிறைவுவிழா டிசெம்பர் மாதம் 3 ஆம், 4 ஆம் , 5 ஆம்திகதிகளில் சிதம்பரத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.



**சிதம்பரத்தில் நாவலர் பெருமானுக்கு உருவச்சிலை திறப்பு**

சிதம்பரத்தில் நாவலரால் தொடக்கப்பட்ட பாடசாலை தற்போது சிதம்பரம் நாவலர் மேல்நிலைப்பள்ளி என்ற பெயரில் சிறப்பாக இயங்கி வருகிறது. இந்தப் பாடசாலையில் நாவலர் பெருமானுக்கு உருவச்சிலை அமைக்க வேண்டும் என நீண்ட காலமாகப் பலர் சிந்தித்த போதிலும், அந்தப் பணி நிறைவேறவில்லை. உலகத் தமிழராய்ச்சி மாநாடு இந்தியாவில் நடைபெற்றபோது நல்லைநகர் நாவலர் பெருமா னுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என சில அறிஞர்கள் குரல்கொடுத்த போதும் சரியான பயன் கிட்ட வில்லை. கவியோகி சுத்தானந்தபாரதியார் நாவலர் பெருமானுக்கு சென்னையிலும் சிதம்பரத்திலும் நினைவாலயங்கள் எழுப்பவேண்டும் என அறைகூவல் விடுத்தபோதும் அவை பயன்தரவில்லை. தற் போது நாவலர் உருவாக்கிய பாடசாலை வளாகத்தில் உருவச் சிலை இவ்வாண்டு திறந்து வைக்கப்படுவது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சுவாமி ஞானப்பிரகாசர் சிதம்பரத்தில் வெட்டிய திருக்குளத்துக்கு அருகில் நாவலரால் உருவாக்கப்பட்ட சேக்கிழார் திருக்கோயிலிலிருந்து நாவலர் பெருமானின் உருவச் சிலை ஊர்வலமாகக் கொண்டுவரப்பட இருப்பது பெருமைக்குரிய விடயமாகும் நாவலர் மேல்நிலைப் பள்ளியில் நீண்டகாலம் அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்று வாழும் தொண்ணூறு வயது நிரம்பிய ஸ்ரீமான் க. சுவாமிநாதன் நாவலர் பெருமானின் சிலையைத் திறந்து வைப்பது சிறப்பைத் தருகிறது. சிதம்பரத்தில் நாவலரால் நிறுவப்பட்ட பாடசாலையில் ஈழத்து அறிஞர்கள் பலர் தலைமையாசிரியர்களாகவும், ஆசிரியர்களாகவும் முன்பு பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. நாவலர் பாடசாலை நிர்வாகத்தில் நாவலர் வழிவந்த குடும்ப உறுப்பினர்களும் அவரது மாணாக்கர்களும் நாவலருக்குப் பின் நிர்வாகப் பணிகளை நிறைவேற்றினர். நாவலர் வாழும் காலத்தில் அவரது மாணாக்கர் வடகோவை சபாபதி நாவலர் இந்தப் பாடசாலையின் தலைமையாசிரியராக விளங்கிப் பாடசாலையைச் சிறப்பாக வழி நடத்தியமை சிறப்புக்குரிய விடயமாகும்.

**சோமசுந்தரப் புலவரின் வரிகள்**

தன்னவரும் பிறருமென்று சாராமே
நடுவுநிலை சார்ந்து நின்றே
அன்னவர்கள் வழுவியவை யஞ்சாது
வெளிப்படுத்தி யறிவை யூட்டும்
முன்னவனே தமிழ் மக்கள் முதுநிதியே
கற்பகமே முடியாக் கல்வி
மன்னவனே யெனவாழ்த்த வந்துதித்த
நாவலன்றான் வாழி வாழி

நவாலியூர் சோமசுந்தரப்புலவர் என்ற புலவரின் பாவரிக்கு ஏற்ப தமிழ் மக்கள் கற்பகமாகக் கருதிய நாவலரின்புகழ் சூரிய சந்திரர் உள்ளவரை நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

# மாற்றுத் திறனாளிகளே பெரிய சிறுபான்மையினத்தவர்

சி.ப.வேந்தன்

தங்கத்திலே ஒரு குறையிருந் தாலும் தரத்தினில் குறைவதுண்டோ, உங்கள் அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் அன்பு குறைவதுண்டோ? கறுப்பு வெள்ளைக் காலத்து சினிமாப் பாடல் இது. குறை என எதுவுமில்லை என அழகாய்ச் சொல்கின்றன வரிகள்.

படைப்பில், மரபணுக் குளறுபடியில், விபத்தில், நோயில் என சாதாரண தன்மையிலிருந்து மாறுபட்டு மாற்றுத்திறனாளிகள் எனும் பெயர் கொண்டவர்களைச் சிறப்பிக்கும் நாளே மாற்றுத் திறனாளிகள் தினமாகும்.

**சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம்**

ஊனம் எனும் கொச்சைத்தனத்தைத் தவிர்த்து அவர்களின் மாற்றுத்திறன்களை கவனத்தில் கொண்டு மாற்றுத்திறனாளிகள் என அழைப்பதே உலக நாகரிகத்தின் உச்சமெனலாம்.

உலகின் மிகப்பெரிய சிறுபான்மையினர் என உலக சுகாதார நிறுவனத்தினால் குறிப்பிடப்படுகிற இவர்களை மாற்றுத்திறனாளிகள் என பெயர் குறிப்பிடப்படாத (ஊனமற்றவர் எனக் குறிப்பிடுவதால் எதிர்ப் பதம் ஊனமானவர் என்பதாகிவிடும்) பெரும்பான்மையினர் அவர்களில் எந்த அளவுக்குக் கவனம், அக்கறை செலுத்துகிறார்கள் என்பது இங்கே முக்கிய விடயம்.

இவர்களுக்கான அங்கீகாரம் முதலில் மனதளவிலேயே ஏற்படுத்தப்படவேண்டியிருக்கிறது. அதனால்தான்விசேட உதவிதேவையுடையவர்கள் என்பதற்குப் பதிலாக விசேட தேவையுடையவர்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. இங்கே உதவி எனும் பதமே அவர்களைக் காயப்படுத் திவிடக்கூடாதென்பதில் மிகக் கவனமாய் இருக்கவேண்டியுள்ளது. எல்கிராஸ் என்பவர் மனவளர்ச்சியைப்பற்றிக் குறிப்பிடும்போது மனவளர்ச்சிக்குறையென்பது ஒரு நோயல்ல, வளர்ச்சி நின்றுவிடும் நிலை என்கிறார்.

இவ்வாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இவர்களுக்கு மாற்றுப் பார்வைக்கூடான கௌரவங்களை வழங்கத்தொடங்கிவிட்டோம் என்பதில் பெருமைப்படலாம்.

2006ஆம் ஆண்டு ஐ.நா சாசனம், மாற்றுத் திறனாளிகளின் தேவைகளைக் கருணை அடிப்படையில் பார்க்காது உரிமைகளின் அடிப்படையில் பார்க்கவேண்டும் என்பதோடு, அவர்களுக்கெதிரான பாரபட்சங்களுக்கு முடிவு கட்டவேண்டும் என கூறுகிறது. இது அவர்களுக்கான கௌரவத்தோடு அந்தஸ்தையும் வழங்கி விடுகிறது. இதனோடு பல அரசுகள் அவர்களுக்கான சட்டமூலங்களையும் கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

> உலகின் இசை மாமேதை எனக் கொண்டாடப்படும் பீத்தோவன் தனது கேட்கும் திறனை இழந்த பின்னர்தான் மிகச்சிறந்த இசைப்படைப்பான சிம்பொனி இசையை உருவாக்கினார்.



இழந்த சொர்க்கம் (பரடைஸ் லொஸ்ட்) எனும் காவியத்தை தனது பார்வைப் புலனை இழந்த பின்னர்தான் மில்ட்டன் படைத்தார்.

அதே போன்றே பார்க்க, கேட்க, பேச முடியாத ஹெலன் கெல்லரும் இலக்கிய உலகில் பெரும் சாதனையை நிகழ்த்தி விட்டு சென்றிருக்கிறார்.

உலகின் இசை மாமேதை எனக் கொண்டாடப்படும் பீத்தோவன் தனது கேட்கும் திறனை இழந்த பின்னர்தான் மிகச்சிறந்த இசைப்படைப்பான சிம்பொனி இசையை உருவாக்கினார்.


இசையின் மிக மிக முக்கியமாக விளங்குவதே கேட்கும் திறன்தான். அது இல்லாமல் போனபின்னரும் அந்தச் சாதனையாளனால் இதை நிகழ்த்திட முடிந்ததென்றால் அவனை மாற்றுத்திறனாளி என்பதைவிட மாபெரும் திறனாளி என்றே கொண்டாடவேண்டியிருக்கிறது.

இவர்களின் வரிசையில் யாழ்ப்பாணம் சிவபூமி இல்லத்தை சேர்ந்த மாற்றுத்திறன் மாணவன் சிவராசா துஸ்யந்தன் வலுவிழந்தோருக்கான ஒலிம்பிக் போட்டியில் அஞ்சலோட்டத்தில் கலந்துகொண்டு வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளான்.

சாதனைகளுக்கு குறைகள் தடையல்ல என்பதை செயலில் நிகழ்த்திக் கொண்டிருக்கும் இவர்களை தினம் குறித்துக் கொண்டாடுவதை விட தினம் தினம் கொண்டாடுவதே சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையின் அனுபவம் புதுமை



செ.உமாசுதன்

மனித வாழ்க்கையின் வண்ணங்களில் இளமைப் பருவம் என்பதும் முதுமைப்பருவம் என்பதும் இரு வேறு நிறங்கள் கொண்டவை.இவற்றின் தன்மையிலேஎப்போதும் மாற்றங்கள் வந்ததில்லை.ஆனால் அவற்றின்செயல்நிலைகளிலேஒரேவிதமானஆற்றுகைகள் இடம்பெறுகின்றன.குழந்தைத் தனம், அடம்பிடித்தல், ஆர்ப்பரித்தல்எனஅவைதொடரும்.ஆனாலும் முதியவர்களிடம் இருக்கின்ற அனுபவங்களும் வாழ்வு தந்த பாடங்களும் பசுமையானவை.இளமையின் துடிப்பும் முதுமையின் அனுபவநிறைவும்அவர்களின்எந்தவொருசெயற்பாடுகளை வெளிப்படுத்தும்தருணங்களிலும், எங்களோடுஉறவாடுகின்ற போதும்இயல்பாகவேஅறிவுரைகளாகவெளிக்கிளம்புவதைக் கண்டுகொள்ள முடியும்.

**அழகான மழையுதிர் காலம்**

இவ்வாறானதொரு சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தது.கார்த்திகை மாதம் என்பது அழகான மழையுதிர் காலம்.எப்போதும் மழைத்துளிகளின்சாரல்தூறலாகமண்நனைக்கும்.அன்றும் இப்படித்தான் அலுவலகம் வரும் வழியே மழைத்துளிகளின் ஸ்பரிசம் எனை முற்றாக நனைத்து விட்டது. வீதியோரம் இருந்தசிகைஅலங்கரிப்பு நிலையக் கூரையின் தாவாரம் தரித்து நிற்கஇடம்தந்தது.வானமகளின்அன்பான இரைச்சலிடையேகடையின்உள்ளிருந்து இருவர் உரையாடும் ஒலி என் காதடைந்தன. அங்கே ஓர் அனுபவத்தின் பகிர்வு ஊசலாடுவது தெரிந்தது. முகத்தைத் திருப்பி கடையின் உள்ளே பார்த்த போது நான் ஊகித்ததைப்போன்று ஓர் அனுபவத்தின் முதுமை அமர்ந்திருந்தார். அவருடைய முகத்தில் தென்பட்ட இளமையின் துடிப்பு என்னை அவருடன் கதையாடச் செய்தது.மழை நனைத்த சேட்டும் ஜீன்சும் கசகசக்க அமர்ந்திருந்து கேட்ட விடயங்களுக்கு சலிக்காது சுடசுடவென வார்த்தைகளில் சுவாரஸ்யம் பொங்கப் பதில் தந்தார்.

இன்றைய சமூக மாற்றங்களின் இடையே பயணிக்கின்ற, 1928 களின் துடிப்பான இளமையாக, அனுபவங்களின் முதுமையாக தோற்றம் தந்த அந்தப் பெரியவர் வேறு யாருமல்ல. சுப்பிரமணியம் குமாரசாமி என்ற 87 வயதின் அனுபவமுதிர்வுதான்.தன்னுடைய இளமைக்காலத்தில்தான் கண்டு கொண்ட சமூகம் தொடர்பிலும் இப்போது கண்டுகொண்டுள்ள மாற்றம் தொடர்பிலும் தன்னுடைய கருத்துக்களை அனுபவப் பகிர்வாக,மழையின் சாரலான தூறலாக என்னிடம் ஒப்புவித்துவிட்டார். அந்தச் சுவாரஸ்யங்களை உங்களிடம் பகிர நினைக்கிறேன். படித்துப் பாருங்கள்.

**பாடசாலையில் அடி வாங்கிய காலம்**

நான் படிக்கிற காலத்திலை ஜெ.சி எண்டு சொல்லுறது எட்டாம் வகுப்புத்தான்.எங்களுக்கு ஆறு பாடம் தான். கணக்கு, ஆங்கிலம், விஞ்ஞானம், தமிழ் எண்டு படிச்சம்.மல்லாகம் ஆங்கிலப்பாடசாலையில்தான்படிச்சனாங்கள். (இப்ப அதுக்கு வேற பெயர் இருக்குமெண்டு நினைக்கிறன் என்றவர்) என்ரை நண்பர்கள் ஐஞ்சு பேர்.இடைவேளை நேரத்திலை இலந்தைப்பழம், விளாம்பழம் பொறுக்கப்போவம்.இப்ப என்ன படிப்பு, அந்த நேரம் அடி வேண்டித்தான் படிக்கிறது. செல்லப்பா மாஸ்ரர் தான் அதிபராய் இருந்தவர்.நேரம் செல்லப்போனாலும் சொல்லுற வேலையைச் செய்யாட்டிலும் கையிலை பிரம்பாலை அடிப்பினம்.இப்ப அடிக்கக்கூடாது எண்டு சட்டம். ஐந்தாம் ஆண்டு ஆறாம் ஆண்டு படிச்சால் எஸ்ரேற்றிலை கிளாக் வேலை செய்யலாம்.பங்களா, தோட்டம்,பால் மாடு வளர்ப்பு எண்டு வசதிகள் இருந்தது. அப்ப உழைக்கிற காசு மிச்சம்.நல்ல சீவியம்.இப்ப சாகும் வரையும் படிச்சால் தான் நல்லம். திணைக்களங்கள்ள இப்ப போய்ப் பார்த்தால் தெரியும். ஒருத்தரும் வேலை செய்யிறேல்லை. கணினிகளுக்கு முன்னாலை சும்மா இருக்கினம்.இருபது வயசில சுத்தாத இடமில்லை, இலங்கை பூராகவும் சுற்றி வந்தனான்.இஞ்சை இருந்து காலித் தொங்கல் வரைக்கும், அங்காலை பதுளை நுவரெலியாத் தொங்கல் வரைக்கும், இங்காலை மட்டக்களப்பு தொங்கல் வரைக்கும் போட்டு வந்திட்டன்.அப்ப பிரச்சனை இல்லைத் தானே. சுதந்திரமாய் எல்லா இடமும் போய் வந்தம்.

**சாமிச்சோறுதான் சாப்பாடு**

இப்பஎன்னசாப்பாடப்பா.உடம்போடைஒட்டாது.அந்தக் காலத்திலைசாமிச்சோறுதான்மதியம்சாப்பாடு.அரிசி குறுணியாய்த் தான் இருக்கும்.அவிச்சா நல்லாய்ப் பொலியும்.கொஞ்சம் தேங்காய் பூ போட்டு அடிக்க நல்லாய்த் தான் இருக்கும்.இரவிலை சாமிப்பிட்டு அவிப்பம்.பானையிலை ஊற வைச்சு பிறகு உரலிலை தீட்டி மாவை அரிச்சு சக்கரை போட்டுத்தான் அவிப்பம். என்ன ரேஸ்ற்.குரக்கன் பிட்டு,மரவள்ளி, ஒடியற் கூழ்,குரக்கன் கூழ் எண்டு அந்தக்காலத்திலே எல்லாரும் அதுதான் சாப்பாடு.

எப்பாவதுதான் கலியாண வீடு, விசேடதினம் எண்டால் தான் நெல்லுச் சோறு சமைப்பம்.இந்தக் காலத்திலை அதுக்குத்தான் மதிப்பு. விலையும் கூட. அப்ப நல்ல சாப்பாடுகளை சாப்பிட்டதாலை ஒரு நோயும் வரேல்லை.வராது ஆரோக்கியமாய் தான் இருந்தம். இப்பவும் நான் கஞ்சி தான் சாப்பிடுறன்.அந்த நேரம் ரெண்டு கத்தரிக்காயை தண்ணியிலை அவிச்சுப் போட்டு திண்டாலும் நல்லாய்த் தான் இருக்கும். இப்ப கத்தரிக்காயை அவிச்சுப்போட்டு என்னத்தைப் போட்டு சாப்பிட்டாலும்அந்தச்சுவைஇல்லை. கத்தரிக்காயை தணல்ல சுட்டுப்போட்டு மேல் தோலைஉரிச்சுநல்லாய்பிணைஞ்சு போட்டு தேசிக்காயும் விட்டு சாப்பிடுவம்.அது கத்தரிக்காய். இப்பஎல்லாம்மருந்துஇரசாயனம் கலந்து கிடக்குது.

> பள்ளிக்கூடம் போனது பாதி போகாதது பாதி.அப்ப எங்களுக்கு படிப்பின்ரை சுவை தெரிஞ்சு கொண்டம். புரிஞ்சு கொண்டம்.இப்பத்தைய பெற்றோரும் இதை உணர்ந்து பிள்ளையளைப் படிப்பிக்கினம்.
> “ம்ம்... நல்லதொரு காலம் அது. ஒருத்தருக்கொருத்தர் ஒத்துழைப்பு.அன்பு பாசம் இருந்தது.இப்ப ஒன்றுமில்லை. மனத் தெம்பிலை ஓடித்திரியிறம்.....

**பெரிய நோயெல்லாம் இல்லை**

அந்த நேரம் உந்த நீரிழிவுநோய் இருக்கேல்லை.பெரிய தொழில் செய்தவை, பணக்காரர் எண்டு, அவைக்குத் தான் இருந்தது. ஏனெண்டால் அவைதான் ஒரே இடத்திலை இருப்பினம். நாங்கள் எப்பவும் இயங்கியபடிதான் இருப்பம். அப்ப இந்த நோயைப் பற்றி நாங்கள் அறியவே இல்லை. நோயெண்டால்நெருப்புக் காச் சலையும் கசத்தையும் தான் சொல்லலாம்.அப்ப கண் பரியாரியார் எண்டு ஒராள் இருந்தவர்.அவர் மூக்குத் தூள் மாதிரி ஒண்டைத் தருவார். அதை உறுஞ்சி இழுக்க ஒரு தும்மல் வரும். அதுக்குப் பிறகு தான் வைத்தியம்.கண்ணுக்கு மருந்து விடேக்கை கண்ணை மூடிக்கொண்டு இருக்கச் சொல்லுத்தான் விடுவர். அது தன்பாட்டிலை ஊறிப் போகும். அவங்களிட்டைத்தான் மருந்து செய்தனாங்கள். எனக்குத் தெரிஞ்சு, அப்ப ஏழாலையிலை தங்கமுத்து எண்டு ஒருவர் இருந்தவர். அவர் 110 வயசு மட்டும் இருந்தவர்.எனக்கு இப்ப 87 வயசு எண்டால் நம்பீனமில்லை.ஒரு 70 -75 வயசு எண்டு சொல்லுகினம்.. இந்த திடகாத்திரத்துக்கு அந்தக்காலச் சாப்பாடுதான் காரணம் என்று கூறி கையை மடித்து நெஞ்சை முன்னே நிமிர்த்தி செய்து காட்டிச் சிரிக்கிறார்.

அப்ப புளியம் பூவை எடுத்து பானையிலை ஊறவைச்சு நொதிக்க விட்டுட்டு பனம் பழத்தை எடுத்து அடுப்புப் புகட்டிலை கொஞ்ச நேரம் வைச்சு பிறகு தோலைக் கொஞ்சமாக பிரிச்சுப்போட்டு அதிலை இந்த நொதிச்ச புளியம் பூத் தண்ணியை ஊற்றிப்போட்டு கொஞ்ச நேரம் செல்ல அதை எடுத்து வாயிலை வைச்சு உறிஞ்சிக் குடிப்பம். புளிப்புச் சேர்ந்து நல்லாய்த் தான் இருக்கும்.

உடம்புக்கு ஆரோக்கியம்.பள்ளிக் கூடத்தாலை வந்த உடனை தாகத்துக்கு அதுதான் குடிப்பம்.இப்ப எதுக்கும் சோடா.பிறகு எண்ணெண்டு ஆரோக்கியம் வரும்.இதற்கும் ஆங்காங்கே தெரியும் பல்லுகளிடையே புன்முறுவல் தந்து கெக்கட்டம் விட்டுச் சிரிக்கிறார்.

பிணாட்டு,பாணிப்பிணாட்டு. இது மிளகு கலந்து தருவினம். நல்லாய்த் தான் இருக்கும்.அப்ப பருத்தித்துறை வல் வெட்டித்துறையிலிருந்து தான் வாறது கருப்பணி. வீட்டுக்கு வீடு வரும்.முட்டியிலை தான் வரும்.5 சதம் தான்.கள்ளும் 5 சதம் தான் என்கிறார்.

**கார்களைக் காண்பது அரிது**

எல்லா வீட்டிலும் சைக்கிளும், வண்டில் மாடும்தான் போக்குவரத்துக்கு இருந்தது.எங்கையும் ஒரு வீட்டில்தான் கார் இருக்கும்.குதிரை வண்டில் இருந்தது.புறொக்டர்மார் எல்லாரும் ரிச்சோ வைச்சிருப்பினம்.ஒராள் இழுத்துக்கொண்டு போவார்.அந்தாளுக்கு தனிச் சம்பளம்.இப்ப தானே டிசைன் டிசைனாய் கார் வருகுது. அதிலை எல்லாரும் ஓடித் திரிகினம். இப்பத்தை காரேல்லாம் நிறை குறைஞ்சது.அப்ப முழுக்க இரும்பு தான். நிறை கூடின காருகள். 'ஏ' போட்டி,மொறிஸ் மைனர் எண்டு. மல்லாகத்திலை முருகையா எண்டு ஒருத்தர் இருந்தவர். அவர் தான் எந்தக் கார் வந்தாலும் முதல்லை வேண்டுவர். இப்ப நாங்கள் போடுற லவுட் ஸ்பீக்கரும் முதல்ல யாழ்ப்பாணத்திலை போட்டது அவர்தான். நாங்கள் ஒற்றைத் திருக்கை வண்டிலிலை தான் பயணம் செய்வம் சந்நிதி,வல்லிபுரம் எண்டு போவம். ஒரு சந்தோசம் தான்.மையப் மைய இடங்களையும் பார்த்து, இயற்கையையும் ரசிச்சுக் கொண்டு போய்வருவம். இப்ப ஏறினால்உடன இறங்கிறம். பிறகெங்கை இடங்கள் பாக்கிறது?

அரசியல்லை அப்ப இங்கை இருந்தாக்களை பச்சைப்பெட்டி மற்றது சிவப்புப் பெட்டி எண்டு தான் சொல்லுவினம். அடையாளப் படுத்துவினம்.அதிலை போறாக்கள் அப்பவும் தில்லு முல்லுத்தான், இப்பவும் அதுதான்.இங்கை ஒண்டு சொல்லுறது.அங்கை போய் இன்னொண்டைச் சொல்லுறது.சேர்ந்து கூத்தடிக்கிறது.

பிரபாகரன் இருந்தார். எல்லாம் ஒழுங்காய் தான் இருந்தது. எல்லாம் சோலி சுறட்டு இல்லாமல் இருந்துது. கதவை திறந்து போட்டு விறாந்தையிலை படுத்து தூங்கலாம்.இப்ப எல்லாத்தையும் அடிச்சுப் பூட்டிப்போட்டுத்தான் படுக்கவேணும். காலம் மாறிப் போச்சுது.

அப்ப என்ரை நண்பர்கள் இரண்டு பேர் இருந்தவங்கள். ஒருத்தன் வைத்திலிங்கம்.அவன் படிப்பிலை ஒரு மட்டுத் தான்.பேரம்பலம் கெட்டிக்காரன்.பள்ளிக்கூடம் போனது பாதி போகாதாது பாதி.அப்ப நாங்கள் படிப்பின்ரை சுவையை தெரிஞ்சு கொண்டம். புரிஞ்சு கொண்டம்.இப்பத்தைய பெற்றோரும் இதை உணர்ந்து பிள்ளையளைப் படிப்பிக்கினம்.

“ம்ம்... நல்லதொரு காலம் அது. ஒருத்தருக்கொருத்தர் ஒத்துழைப்பு.அன்பு பாசம் இருந்தது.இப்ப ஒன்றுமில்லை. மனத்தெம்பிலை ஓடித்திரியிறம்...."என்றவர் குரல் ஓசை கேட்டுத் திரும்பினார்.தன்னை ஆசுவாசப்படுத்தி மகள் கூப்பிடுறா தம்பி, உம்மோடை நிறையக் கதைக்கவேணும்.இரும் வாறன் என்றார். பதிலுக்கு அவரை மறுத்துப் பேச முடியவில்லை.நான் அலுவலகத்துக்கு போக வேணும் ஐயா இன்னமொரு நாள் உங்களைச் சந்திக்கிறேன் எனக் கூற.மீண்டும் சிரித்தார். புன்முறுவல் பூத்தார். நானும் விடைபெற்று அலுவலகம் வந்தேன். அவருடைய அனுபவப் புதுமைகள் முற்றுப் புள்ளியற்றுப் பூரிப்போடு எனைத் தொடர்ந்து வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

1791 - உலகின் முதலாவது ஞாயிறு பத்திரிகை 'தி ஒப்சேவர்' பிரித்தானியாவில் வெளியிடப்பட்டது.

1881 - லொஸ் ஏன்ஜல் ரைம்ஸ் முதலாவது பதிப்பு வெளியீடு.

1918 - முதலாவது உலகப் போரின் சமாதானப் பேச்சு வார்த்தைக்காக அமெரிக்க ஜனாதிபதி வூட்றோவ் வில்சன் ஐரோப்பாவுக்கு பயணம். பதவியிலிருக்கும் போது ஐரோப்பாவுக்குப் பயணம் மேற்கொண்ட முதலாவது ஜனாதிபதியுமாவார்.

1939 - 2 ஆவது உலக மகா போரின்போது எச்.எம்.எஸ் நெல்சன் போர்க் கப்பல் கண்ணியில் சிக்கியது.

1945 - ஐக்கிய அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபையில் பங்குகொள்ள அந்த நாட்டின் செனட் சபை அங்கீகாரம். ஆதரவு 65 எதிர் 7.

1971 - இந்திய கடற்படை பாகிஸ்தான் கடற்படைமீதும் கராச்சி மீதும் தாக்குதல்.

1977 - மலேசிய விமானம் 653 கடத்தப்பட்டு மோதப்பட்டதில் 100 பேர் சாவு.

1982 - சீன மக்கள் குடியரசு - புதிய அரசமைப்பை பின்பற்றல்.

1984 - இலங்கை சிவில் போர். மன்னாரில் 107 - 150 பொது மக்கள் சிறிலங்கா இராணுவத்தால் படுகாலை.

1991 - நீண்ட காலமாக லெபனானில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்க ஊடகவியலாளர் ரெரி ஏ.அன்டர்சன் 7 வருடங்களின் பின்னர் விடுவிப்பு.

## சொர்க்கமும் நரகமும்

ஓர் ஊரில் ஒரு கருமி வாழ்ந்து வந்தான். அவன்மிகப்பெரியபணக்காரன்.ஆனால் அவன்எவருக்கும்உதவமாட்டான்.
அவனுக்கு சொர்க்கத்தையும் நரகத்தையும் காண ஆசை வந்தது.
ஒரு நாள் அவனது கனவில் ஒரு பெரியவர் தோன்றினார். அவனைச் சொர்க்கத்துக்குக் கூட்டிச் செல்வதாகக் கூறினார். அவனும் அவருடன் சென்றான்.
முதலில் அவனை நரகத்துக்குக் கூட்டிச் சென்றார். அங்கு உணவு நேரத்தில் பெரிய பெரிய அண்டாக்களில் சாதம் ,குழம்பு மற்றும் சுவை மிக்க பதார்த்தங்களும் இருந்தன.அவரவர்களுக்கு தட்டுகள் கொடுக்கப்பட்டு, சுவை மிக்க உணவுகள் பரிமாறப்பட்டன.
எல்லோருக்கும் நாவில் எச்சில் ஊறியது. ஆனால்..
அந்தோ பரிதாபம்! அனைவராலும் கையை மடக்கி, வாய்க்கு அந்த உணவைக் கொண்டு செல்ல முடியவில்லை!
எனவே அறுசுவை உணவு எதிரே இருந்தும் அவர்களால் உண்ண முடியவில்லை. அவர்களுக்கு பசியோடு ஆத்திரமும் சேர்ந்து கொண்டது.
அனைத்து அண்டங்களையும் கீழே தள்ளி விட்டு அவற்றிலுள்ள உணவை வீணாக்கினர்.
பின்னர், தாங்க முடியாத பசியினால் உட்கார்ந்து அழுதனர்.இப்படி அழுது கொண்டே இருந்தனர்.
பின்னர் அந்தக் கருமியை சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்றார்.
அங்கும் அண்ணடாக்கள் நிறைய அருமையான சாப்பாடு வைக்கப்பட்டிருந்தது.
அங்கு இருந்தவர்களுக்கும் கையை நீட்ட முடிந்தது. ஆனால் தங்கள் வாய்க்கருகில் மடக்க முடியவில்லை.
அவர்களில் ஒருவர் தனது நீட்டிய கையினால் இனிப்பு வகைகளை எடுத்து எதிரே இருந்த



வரின் வாயருகில் நீட்டினார். மடக்கத்தானே முடியாது? கையை நீட்டி எதிரேயுள்ள வாயில் ஊட்ட முடியுமல்லவா?
இப்படியே அனைவரும் ஒருவருக்கொருவர் ஊட்டி மகிழ்ந்தனர்.அனைவரின் வயிறும் நிரம்பியது.
கருமி கனவிலிருந்து மீண்டான். ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதே சொர்க்கம் என்பதை அவன் புரிந்து கொண்டான் .தான் மட்டும் சுகமாய் வாழ நினைப்பது நரகம் என்பதை உணர்ந்தான்.
அன்றிலிருந்து அவன் அனைவருக்கும் உதவிகள் பல புரிந்து நல் வாழ்வு வாழ்ந்தான்.

## தெரிந்து கொள்வோம்

- எறும்பின் வாசனை நுகரும் சக்தி,நாயின் மோப்ப சக்திக்கு ஒப்பானது.
- பன்றிகளால் அண்ணாந்து பார்க்க முடியாது.
- முதலைகளால் தமது நாக்கை வெளியே நீட்ட முடியாது.
- ஒரு நத்தை மூன்று ஆண்டுகள் வரை தொடர்ந்து தூங்கும்.
- பனிக்கரடிகள் எல்லாவற்றையும் தமது இடது கைகளாலேயே செய்யும்.
- பட்டாம்பூச்சிகள் தமது பாதங்கள் வழியே சுவையை உணரும்.
- யானைகளால் குதிக்க முடியாது.
- மாகரெல் வகை மீன் வகை ஒரே நேரத்தில் ஐந்து லட்சம் முட்டைகளை இடும்.
- ஆமைகளுக்கு பற்கள் கிடையாது.
- கடல் ஆமைகளில் ஆயிரத்தில் ஒன்று தான் குஞ்சு பொரித்தபின் உயிர் வாழும்.
- ஒட்டகங்களால் உமிழ் நீரைத் துப்ப முடியும்.
- நெருப்புக் கோழியால் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் ஓட முடியும்.
- பிளாஸ்ரிக் உக்குவதற்கு 500 ஆண்டுகள் ஆகின்றன.
- உலகில் மிகக் கொடூரமான நில நடுக்கம் 1,557 இல் சீனாவில் நடந்தது. இதில் சுமார் 8 லட்சம் மக்கள் இறந்தனர்.


## பொது அறிவு



1. கங்காரு அதிகம் உள்ள நாடு?
   ஆஸ்திரேலியா.
2. கண்கள் திறந்த நிலையிலேயே தூங்கும் மிருகம் எது?
   முதலை.
3. இறப்பர் தாவரத்தின் தாவரவியல் பெயர் என்ன?
   ஹீவியா ப்ரசிலியன்சிஸ்.
4. மஞ்சள் காமாலை நோயைக் குணப்படுத்தும் மூலிகைத் தாவரம் எது?
   கீழ்காய்நெல்லி.
5. வனவிலங்கு தடுப்புச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு எது?
   கி. பி. 1890.
6. உலக சுற்றுச்சூழல் எந்த மாதம் கொண்டாடப்படுகிறது?
   ஜூன் 5.



## வர்ணம் தீட்டலாம் வாங்க



## விடுகதைகளும் விடைகளும்

1) விடிய, விடிய பூந்தோட்டம், விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம்
2) சித்தூர் சிறு மணலிலே காய்க்கும் கத்தரிக்காய் கூட்டிப் பார்த்தால் கொம்புக்கு முப்பது காய் அது என்ன?
3) அத்துவானக் காட்டுக்குள்ளே குடை பிடிக்கிறார். அவர் யார்?
4) பாயைச் சுருட்டவும் முடியாது, பாக்கு எண்ணவும் முடியாது. அது என்ன?
5) கிண்ணம் நிறையத் தண்ணீர் இருக்கு, குருவி குடிக்க வழியில்லை அது என்ன?
6) இரத்தத்தில் வளர்வது ஆனால், இரத்தம் இல்லாதது அது என்ன?
7) பற்கள் பல உண்டு ஆனால், கடிக்கத் தெரியாது அது என்ன?
8) தண்ணீரில் நீந்தி வரும், தரையில் தாண்டி வரும் அது என்ன?
9) ஆடையில்லாத கறுப்பழகி, ஆடிச் சுழன்று பாடுகிறாள் அவள் யார்?
10) வெட்டிக் கூறு படுத்தி வைக்கிறார்களே தவிர எவரும் தின்பதில்லை அது என்ன?
11) மூன்று நிறக் கிளிகளாம் கூண்டில் போனால் ஒரு நிறம் அது என்ன?
12) அடித்தால் விலகாது அணைத்தால் நிற்காது அது என்ன?
13) குளம்படிச் சத்தக்காரன் போருக்கு கெட்டிக்காரன். அவன் யார்?
14) பச்சையாய் விரிச்சிருக்கு, பருவம் கழிந்தால் மணிகள் குவியும். அது என்ன?
15) நீரில் உள்ள கல் எது?
16) தாளமில்லாத ஆட்டம், தாய்மார்கள் விரும்பாத ஆட்டம் அது எது?
17) கேடயமுள்ள வீரனுக்கு வாள் இல்லை அவன் யார்?
18) ஊசி போல் இருப்பான், ஊரையே எரிப்பான் அவன் யார்?

*விடைகள்: 1) நட்சத்திரங்கள் 2) கோப்பிச் செடி 3) காளான் 4) வானம், நட்சத்திரம் 5) இளநீர் 6) நகம் 7) சீப்பு 8) தவளை 9) இசைத்தட்டு 10) சீட்டுக்கட்டு 11) தாம்பூலம் 12) தண்ணீர் 13) குதிரை 14) நெற்கதிர் 15) கலங்கள் 16)சூதாட்டம் 17) ஆமை 18) தீக்குச்சி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைகளை வன்முறை செய்வோமா?

உடுவிலூர் கலா

பெண்களின்வாழ்வில்வன்முறைகள் என்பது தனிநபராலும், குடும்பத்தாலும், சமுதாயத்தாலும்எழுதப்படாத விதியாகும். வன்முறை செய்பவர்கள் ஆண்கள். வன்முறைகளுக்குள்ளாகுபவர்கள் பெண்கள்.

பெண்களுக்கான வன்முறையானது கருவிலேயே தொடங்குகிறது. பெண்பிள்ளையானால் மூக்கைச் சுளிப்பதும், மூத்த பிள்ளை ஆண்பிள்ளையாகப் பிறக்க வேண்டும் என்று கருதுவதும் இன்றும் எமது சமுதாயத்தில் ஆழமாகவேரூன்றியுள்ளன ."உரக்கப் பேசாதே', பெடியன் போல மேலே ஏறாதே, அண்ணாக்கும்அப்பாக்கும்மேற்பானை சோறு அள்ளி வை" என்பவை எல்லாம் பாசமுடன் அரவணைக்கும் அன்னையின் கட்டளைகள். பாசம் என்கிற பெய ரில் பெண்பிள்ளை வன்முறை செய்யப்படுவதை இந்த அன்னையர் உணர்வதில்லைப் போலும்.



திருமணத்துக்கு வரதட்சணை கேட்கும் ஆண்கள், திருமண அடுக்குகளைப் பெற்று பெண்ணுக்கும், பெண் வீட்டாருக்கும் விலை போகின்றனர். பெண்களால் விலை கொடுத்து வாங்கப்படும் ஆண்கள் மீண்டும் பெண்களை வாழ்நாள் முழுக்க ஆதிக்கம் செய்கின்றனர். ஒருபெண்ணுக்கு வரப்போகும் கணவனின் விலையை நிர்ணயம் செய்து பெண் வீட்டாரால் கொடுக்கப்படும் பணம், நகை, பொருள்கள் என்பவற்றை வீட்டுக்குள் புகுந்தும், தெருக்களில் நின்றும் களவாடும் கள்வரும், களவின் பின் தம்மை அடையாளம் காட்டக்கூடாதெனப் பெண்களைக் கொலை செய்யும் கொலைஞர்களும் ஆண்கள்தானே. திருமணம் என்கிற ஆத்மார்த்தமான உறவின் பின் பெண் முழுமையான சந்தோசத்தை அனுபவிக்கிறாளா? என்றால் இல்லை

> வறுமை காரணமாக பெண்கள் பலவித வன்முறைகளைப் பொறுமையோடு சகித்து வாழ்கின்றனர். என்னதான் திறமையிருந்தாலும் பெண்கள் வன்முறைகளிலிருந்து தப்பவே முடியாது.

என்பதே விடையாகும். புகுந்த வீடு வந்த பெண் பிறந்த வீட்டையே அடியோடு மறந்து வாழ்வதும், உடன்பிறந்த அண்ணனோடு, பெற்ற தாயோடு கூடக் கதைக்கக்கூடாது என்கிற நிர்ப்பந்தத்தில் இன்று எத்தனை பெண்கள் வாழ்கின்றனர்? கூட்டுக்குடும்பத்தில் வாழ்ந்த பெண்ணாக இருந்தால், அந்தக் குடும்பத்து ஆண்கள் அவள்மேல் சந்தேகம் கொண்டு வார்த்தைகளாலும், செயல்களாலும் நோகடித்து சிறையான வாழ்வுக்குள் பெண்களை அடைத்து வாழ்கின்ற ஆணாதிக்கச் சிந்தனைகளால் பெண்கள் உடலாலும், உள்ளத்தாலும் துன்புறுகின்றனர்.

பணியிடங்களில் மேலதிகாரிகளின் சுடுசொல், ஏளனப் பார்வை, வன்மையான கட்டளைகள், பட்டும்படாத தொடுகை, உரசல் இம்சிக்கும் வார்த்தைகள் போன்றவற்றாலும் பெண்கள் படும்வேதனையானது சொல்லி மாளாது. குடும்ப வறுமை காரணமாக, விரும்பாத அருவருக்கத்தக்க தொடுகை உரசல்களையும் தாங்கி வாழும் நிலையில் பல பெண்கள் உள்ளனர். வறுமையான பெண்களை இனம்கண்டே சில அதிகாரிகள் இப்படிப்பட்ட கீழ்த்தரமான வன்முறைகளைச் செய்கின்றனர். வாய் திறந்தால் குடும்பம் வறுமையில் தள்ளாடும் என்பதை உணர்ந்த பெண்கள் மனதைக் கல்லாக்கிப் பணியை தொடர்கின்றனர். அதேவேளை, பணியிடங்களில் பெண்களுக்கு ஏற்படுகின்ற இப்படியான மேலதிகாரிகளின் செயற்பாடுகளை, சகபெண்கள் அறிந்தாலோ கிசுகிசுப்புக்கள் தொடர்ந்துவிடும்.

வாகனங்களில் பயணம் செய்யும்போது நடத்துநரின் கை எத்தனை பெண்களைத் தள்ளுகின்ற பெயரில் தொடுகின்றது. இது போதாதென்று உள்ளே ஏறினால் அருகருகே நிற்கும் ஆண்களின் தொடுகை, உரசல், நேர்கொண்ட சுவாசம், மோதல் போன்றவற்றால் பலவித அசௌகரியங்களைப் பெண்கள் அனுபவிக்கின்றனர். குடும்ப வறுமையை கருத்திற்கொண்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் பெண்களின் நிலையை நோக்கின், சொல்லமுடியாத வேதனைகளை அனுபவிக்கின்றனர். பெற்ற பிள்ளைகளை, கணவனை பிரிந்த வேதனையோடு வேலைப்பளு, அடிமைநிலை, ஆண் பெண் ஆதிக்க வெறி, இவற்றோடு பாலியல் வன்முறை என்பனவற்றை நாடு கடந்து சென்று அனுபவிக்கும் பெண்களைக் காண முடிகிறது. சவூதி அரேபியாவில் இலங்கைப் பணிப் பெண்ணை கல்லால் எறிந்து கொல்லும் சட்டம் நிறைவேறியுள்ளது. எதிர்ப்புகளும், ஆர்ப்பாட்டங்களும் முளைவிடத் தொடங்கிவிட்டன. நடக்கப்போவது என்ன? உயிரிழப்புதான். இந்த ஆர்ப்பாட்டங் களையும், எதிர்ப்புகளையும் பெண்களுக்கான வெளிநாட்டுப் பணிப்பெண் என்கிற அறைக்கதவைப் பூட்டித் தொடர்ந்திருக்கலாமே? பெண்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்களைச் செய்து அவர்களது வாழ்வை வளமாக்கியிருந்தால் பெண்கள் பணிப்பெண்களாகச் செல்லும் நிலை ஏற்படுமா? பெண்களை வேலைக்கு வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு வருமானத்துக்கு கையேந்திக் காத்திருக்கும் தந்தை, புருஷன், மகன் என்கிற ஆண்கள், அந்த நாடுகளில் பெண்கள் படும் அவலநிலைகளை அறியாதவர்களா? பெண்களை அவர்களது உறவுகளைப் பிரித்து, சந்தோசத்தைச் சூறையாடி வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பது என்பதே ஆண்களால் பெண்களுக்கு செய்யப்படும் மிகக் கொடூரமான வன்முறை என்பதை ஆணாதிக்கத்தை நெறியாள்கை செய்கின்ற ஆண்கள் உணர்வதில்லை.

ஆக, வறுமை காரணமாக பெண்கள் பலவித வன்முறைகளைப் பொறுமையோடு சகித்து வாழ்கின்றனர். என்னதான் திறமையிருந்தாலும் பெண்கள் வன்முறைகளிலிருந்து தப்பவே முடியாது. பெண்களுக்கான வன்முறையை ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் செய்கின்றனர். என்று தணியும் இந்த வன்முறை வேட்கை? என்று கிடைக்கும் பெண்களுக்கான நீதி?. பெண்கள் வாழ்வில் கண்ணீரும் வேதனையும்தான் நிரந்தரமா?. பெண்களை வன்முறையில் இருந்து தப்புவிக்க வேண்டுமானால் பாலின வேறுபாடின்றி ஒவ்வொருவரும் தம்மை, தாம் பெண்களுக்கு செய்கின்ற கொடூரங்களை உணர்ந்து மனம் வருந்தித் திருந்த வேண்டும். "பெண்களை வீட்டில் அடைத்தல் வீரர்களுக்கு அழகில்லை எனக் கொட்டுமுரசே..." என்ற பாரதியின் புரட்சிக் குரலை ஒவ்வொரு ஆணாதிக்கச் சிந்தனையாளர்களும் கருத்திற் கொள்ள வேண்டியது கட்டாய தேவையாகும். எந்த வீட்டில் பெண்கள் கௌரவமாக நடத்தப் படுகிறார்களோ, அந்த வீட்டில் தேவதைகள் குடியேறும் என்பதே யதார்த்தம். ஆணாதிக்கச் சிந்தனையாளர்களே பெண்களுக்கான வன்முறைகளை வன்முறை செய்வோமா?

## ரணிலின் முன்னெச்சரிக்கை

மத்திய கிழக்கு நாடுகளில் உக்கிரமடைந்து வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் தாக்குதல்கள் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாதிப்படையும் அபாயம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அரசு அவதானத்துடன் செயற்படுவதாகவும், ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படும்பட்சத்தில் அவசர நிலைமைக்கு முகம் கொடுப் பதற்கும், பொருளாதாரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் இறங்கியுள்ளது என்றும், இதன் ஓர் அங்கமாகவே சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சு நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு, தனது தாக்குதல் நடவடிக்கைகளைச் சிரியாவிலும் ஈராக்கிலும் உள்ள தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் வெளியே விஸ்தரித்துள்ளதால் சர்வதேச நெருக்கடியாக இது மாற்றமடையும் சாத்தியங்கள் தென்படுகின்றன. ஜேர்மனியின் நாடாளுமன்றம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனும், சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின் இலக்குகள் மீது விமானக் குண்டுத் தாக்குதல் நடத்துவதற்கு பிரித்தானிய நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைக் கோரியுள்ளார். ஆகவே பிரச்சினை உடனடியாகத் தீரப் போவதில்லை.

சிரியாவில் நடைபெறும் இந்தப் போர் பெரும் பொருளாதாரச் சரிவைச் சர்வதேச நாடுகளில் ஏற்படுத்தக் கூடிய ஏதுநிலை காணப்படுகிறது. இலங்கையைப் பொறுத்தமட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளுக்கு எதிரான போராட்டத்தில் இணைந்துகொள்ளும் தேவை இல்லாத போதிலும், இந்தப் போர் காரணமாக ஏற்படக்கூடிய பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளவதற்கான செயற்திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் இலங்கையில் ஏற்படக்கூடிய பொருளாதாரப் பாதிப்புக்குறித்து பிரதமர் எச்சரித்துள்ளார். முன்னைய ஆட்சியாளர்களைப்போலன்றி, பிரதமர் தெளிவான பொருளாதாரப் பார்வையைக் கொண்டிருப்பதை அவரது கருத்து வெளிக்காட்டுகிறது.

கடந்த ஆட்சியாளர்கள் பொருளாதாரத்துறையில் தூர நோக்குடன் செயற்படவில்லை. அவர்களது பொருளாதாரத்திட்டங்கள் அன்றன்று ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கத்துடனேயே வகுக்கப்பட்டன. அதனால் நாடு பெரிய பொருளாதாரப் பின்னடைவுகளைச் சந்தித்தது.




இலங்கை எவ்வளவு சொந்தப் பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் உலக நாடுகளில் ஏற்படும் சம்பவங்கள், போர் என்பவை இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும். சிரியாவில் தற்பொழுது இடம்பெறும் யுத்தத்தில் ரஷ்யாவுக்கு ஆதரவாக நட்பு நாடு ஒன்று இறங்குமானால் பனிப்போர் காலத்து நேரடி மோதல்களுக்கு இது வழிவகுக்கலாம். மோதல்கள் அதிகரித்தால் இலங்கை இரண்டு விடயங்களில் பொருளாதாரச் சரிவை எதிர்நோக்கக்கூடும். ஒன்று இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்பு. மற்றையது எண்ணெய்.

எண்ணெய் விலை அதிகரித்தாலே எமது பொருளாதாரம் ஆட்டம் கண்டுவிடும். இந்தப் போரில் ரஷ்யா, துருக்கி ஆகிய நாடுகள் சம்பந்தப்பட்டிருப்பதற்கு எண்ணெய் ஒரு பிரதான காரணமாக உள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் உள்ள எண்ணெயை மிகவும் குறைந்த விலையில் குழாய் மூலம் துருக்கி பெற்றுவருகிறது. அதனால்தான் துருக்கி தமது விமானத்தைச் சுட்டதாக புடின் குற்றம் சாட்டியுள்ளார். அதேசமயம் சிரியாவில் அஸாத்தின் ஆட்சி இருந்தால்தான், ரஷ்யா தனது எண்ணெய் வர்த்தகம் மூலம் கூடுதல் இலாபம் ஈட்ட முடியும். சவூதி அரேபியாவின் எண்ணெய் சிரியா ஊடாக குறைந்த விலையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லுமானால் ரஷ்யா தனது எண்ணெய்ச் சந்தைகளை இழக்கலாம்.

இந்தப் போர் உடனடியாக முடிவடையும் சாத்தியங்கள் அருகியே காணப்படுகின்றன. ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் அழிக்கப்பட்டாலும் அஸாத்துக்கு எதிரான சிரிய கிளர்ச்சிக்குழுக்கள் மீது ரஷ்யாவின் முழுக் கவனமும் திரும்பலாம். அதனால்தான் இலங்கையில் ஏற்படக்கூடிய பொருளாதாரப் பாதிப்புகள் குறித்து பிரதமர் தூரநோக்குடன் எச்சரித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதிகம் நடக்க வைப்பது இரண்டு விடயங்கள் மட்டும் தான் ஒன்று சுகர்... இன்னொன்று பிகர்....

## பேஸ் புக்கில் பிடித்தவை...

**பா.தன லட்சுமி** @DHANALA093 · Aug 31

செவ்வாய்க் கிரகத்தில் கட்சி கிளையை துவக்கி வைக்க வருகை தரும் 2016 முதல் வரே வருக..! வருக..!



**:இசையின்:காதலன்:** @Raj_Twitz · Aug 30

இறுதிவரை முயன்றாலும் பெற்றோர் செலுத்திய அன்பை திருப்பி அளிக்க முடியாத கடன் காரர் தான் நாம்.



| மைனா | Retweeted

**அசோக்** @ashokcommonman · Nov 20

பேச்சுலர் லைப்பில துணி துவைக்க கஷ்டமா இருக்கையில சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கலாம்னு தோணும் ஆனா அத பண்ணி 2 பேர் துணியில துவைக்க வேண்டியிருக்கும்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மற்றவரிடம் குடும்ப விடயம் பற்றிப் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பாதுகாப்புக் குறைவான இடத்துக்குச் செல்ல வேண்டாம். உறவினர்களால் உதவி கிடைக்கப் பெறுவீர்கள்.

**இடபம்:** உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு மறையும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் வரும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பர். மாணவர்கள், படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் கவனம் செலுத்துவர். விருந்து விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**கடகம்:** எதிர்பார்ப்பு நிறைவேற வாய்ப்புண்டு. தொழில், வியாபார விடயமாக, வெளியூர் செல்வீர்கள். உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். பிள்ளைகளின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** நண்பர்களின் மத்தியில் செல்வாக்குப் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில், தடை விலகும். இலாபம் உயரும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். மாணவர்கள், கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**கன்னி:** கொடுத்த வாக்கை நிறைவேற்றி, நற்பெயர் காத்திடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், முயற்சிக்கேற்ப இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர்.

**துலாம்:** இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். தொழில், வியாபார விடயமாக, வெளியூர் செல்ல நேரிடும். இலாபம் அதிகரிக்கும். அக்கம் பக்கத்தினாரிடம் செல்வாக்கு அதிகரிக்கும். இயன்ற அளவில் பிறருக்கு உதவி செய்வீர்கள்.

**விருச்சிகம்:** நடைமுறை வாழ்க்கை சுமுகமாக அமைந்திடும். தொழில், வியாபாரத்தில், வருமானம் படிப்படியாக உயரும். பெண்கள், தாய் வீட்டாரின் அன்பை பெறுவர். உறவினருடன் சுற்றுலா சென்றுவரத் திட்டமிடுவீர்கள்.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான வருமானம் கிடைக்கும். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு ஏற்படும். தாயின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தி தரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். உறவினர் வருகையால், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**கும்பம்:** சுறுசுறுப்புடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், இலாபம் உயரும். பெண்கள் மனம்போல ஆடை, ஆபரணம் வாங்குவர். எதிர்பார்த்த சுபச்செய்தி வீடு தேடி வரும்.

**மீனம்:** மதிநுட்பத்துடன் செயற்பட்டு, வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். பிள்ளைகளின் செயற்பாடு கண்டு மகிழ்வீர்கள். அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்பு நிறைவேறும்.




## காதலர் தினத்தில் வெளியாகும் இது நம்ம ஆளு

பாண்டிராஜ் இயக்கத்தில் சிம்பு, நயன்தாரா, ஆண்ட்ரியா, சூரி நடிப்பில் உருவாகி வெளியீட்டுக்குக் காத்திருக்கும் படம் ‘இது நம்ம ஆளு’. இந்தப் படம் காதலர் தினமான பெப்ரவரி 14 ஆம் திகதி வெளியாகும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படத்தை சிம்புவின் சகோதரன் குரளரசன் இசையமைக்க, பாலசுப்பிரமணியம் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். பட இயக்குநர் பாண்டிராஜுக்கும், தயாரிப்பாளரான டி.ராஜேந்தருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக படம் வெளியாவதில் குழப்பம் நீடித்து வந்தது. இறுதியில் இந்தப் படம் பொங்கல் அன்று வெளியாகும் என்று கூறப்பட்டது. தற்பொழுது இந்தப் படத்தின் தமிழக உரிமையை தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம் வாங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால் தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம் பொங்கல் அன்று கதகளி மற்றும் அரண்மனை -2 படங்களை வெளியிடுவதால், காதலர் தினத்தன்று ‘இதுநம்ம ஆளு’ ரிலீஸாகும் என்று கூறப்படுகிறது.

கிறிஸ்மஸ் அன்று பசங்க 2, பொங்கல் அன்று கதகளி, காதலர் தினத்தன்று இதுநம்ம ஆளு என்று வரிசையாக பண்டிகை நாள்களில் தான் படம் வெளியாவதால் சந்தோசத்தில் இருக்கிறாராம் பாண்டிராஜ்.



அப்பாவின் தோளில் ஏறி
சாமியை பார்க்கும் போது...
தெரியவில்லை...
சாமியின் தோள்மீது தான்
ஏறி இருக்கிறேன் என்று...

WhatsApp படித்ததில் பிடித்தது

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையில் நல்லெண்ணத்துடன் நடக்காது அவர்களை விடுவிக்காத அரசு, இனப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வை முன்வைக்கும் என்று நம்பிக்கை இல்லாத நிலையே தோன்றும்!

## சுடோக்கு எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 2 | 6 | 5 | 7 | 3 | 4 | 8 |
| 8 | 3 | 6 | 4 | 9 | 2 | 5 | 7 | 1 |
| 7 | 5 | 4 | 3 | 1 | 8 | 9 | 2 | 6 |
| 6 | 1 | 5 | 8 | 4 | 9 | 7 | 3 | 2 |
| 2 | 4 | 3 | 7 | 6 | 5 | 1 | 8 | 9 |
| 9 | 7 | 8 | 2 | 3 | 1 | 4 | 6 | 5 |
| 5 | 6 | 7 | 9 | 8 | 4 | 2 | 1 | 3 |
| 4 | 8 | 1 | 5 | 2 | 3 | 6 | 9 | 7 |
| 3 | 2 | 9 | 1 | 7 | 6 | 8 | 5 | 4 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | | | | | 6 |
| | | | | 4 | | | | |
| 9 | | 6 | | | | 3 | 2 | |
| 3 | 1 | | 5 | | | 8 | | |
| | | | | 1 | | | | |
| | 7 | | | | 2 | | | 4 |
| | | | | | | 6 | | 7 |
| 7 | | | 8 | 6 | 5 | | | |
| | 5 | | 2 | | 7 | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | – | 80 | – | 100 | 100 | 100 |
| கத்தரி | 160 | 150 | 150 | 160 | 130 | 140 | 100–120 |
| கரட் | 180 | 200 | 200 | 200 | 160 –280 | 120–300 | 300 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40–50 | 40 | 30 |
| பயிற்றை | 200 | 200 | 200–240 | 180 | 160–180 | 300 | 200 |
| பாகல் | 300 | 250 | 300–400 | 260 | 260–280 | – | 300 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 80 | 80 | 80–100 | 100 | 70 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 110 | 100 | 120–130 | 120 | 120 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 100 | 120 | 110–120 | 180 | 100 |
| பூசணி | 40 | 50 | 40 | 50 | 40–50 | 80 | 35 |
| தக்காளி | 200 | 140 | 160–200 | 220 | 180–200 | 160 | 150 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 50 | 50–60 | 80 | 40 |
| கீரை | 60 | – | 50 | 20 | 40–50 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 40 | 25–30 | 40 | 12 |
| பச்சை மிளகாய் | 700 | 600 | 650–800 | 700 | 600 | 800 | 900 |
| புடோல் | 140 | 120 | 140 | 120 | 130–150 | 140 | 120 |
| கோவா | 160 | 200 | 160 | 180 | 150–160 | 200 | 170 |
| வெண்டி | 180 | 120 | 120 | 120 | 100–120 | 140 | 100 |
| போஞ்சி | 300 | 220 | 200 | 260 | 230–240 | 320 | 220 |
| லீக்ஸ் | 180 | 200 | 160 –200 | 180 | 160–180 | 200 | 130 |
| தேங்காய் | 50 | 45 | 50 | 50–60 | 40–45 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 80 | 60–70 | 80 | 120 |
| தேசிக்காய் | 400 | 200 | 300 | 250 | 180–300 | 200 | 120 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 10–20 | 20 | 12 |
| கறிமிளகாய் | 400 | 250 | 600–800 | 360 | 360 | 400 | 300 |
| இராசவள்ளி | 160 | 160 | – | – | 300 | – | – |
| முருங்கைக்காய் | 300 | 300 | – | – | 400 | 360 | 300–350 |

# சமைப்போம் வாங்க

**தேவையானவை**

கோவைக்காய் - கால் கிலோ
(நீளவாக்கில் நறுக்கவும்),
மஞ்சள்தூள் - கால் கரண்டி
மிளகாய்த்தூள் தேவைக்கேற்ப
சீரகத்தூள், தனியாத்தூள் - ஒவ்வொன்றும் ஒரு கரண்டி
கறிவேப்பிலை - சிறிதளவு
எண்ணெய் - ஒரு மேசைக்கரண்டி
உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

கோவைக்காயை நீளவாக்கில் நறுக்கி, மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், சீரகத்தூள், தனியாத்தூள், உப்பு, கறி வேப்பிலை சேர்த்துப் பிசைந்து 5 நிமிடம் வேக வைக்கவும். அடி கனமான தாச்சியை அடுப்பில் வைத்து, எண்ணெய் ஊற்றி, அது காய்ந்ததும், பிசைந்து வைத்த கோவைக் காயைப் போட்டு சில நிமிடங்கள் அதிக நெருப்பில் வைத்து மூடிவிடவும். பிறகு, நெருப்பை மிதமான சூட்டில் வைத்து நன்கு வதக்கி, வெந்தவுடன் இறக்கவும்.

## கோவைக்காய் வறுவல்



# இது புதுசு





## நீங்களும் வாங்கலாம்

பெண்களின் அலங்காரப் பொருள்கள், ஒவ்வொரு காலங்களுக்கும் ஏற்றாற்போல், வகை வகையாக கடைகளில் விற்கப்படுவது வழமை. தற்போது அலங்காரங்களில் நக அலங்காரம், பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. கண்ணைப் பறிக்கும் நிறங்களில் வகை வகையான நிறப்பூச்சுகள் , இதனைவிட நக ஓவியங்கள் என்பன நவநாகரிகமாக வலம் வருகின்றன.
உலக சந்தைக்கு நிகராக, நமது கடைகளிலும் செயற்கை நக அலங்காரப் பொருள்கள் கிடைக்கின்றன. நெயில்ஸ்ரிக்கரின் விலை 70-90 ரூபாவரையும், நகப் பூச்சுக்கு மேல் அலங்கரிக்கும் அலங்காரங்கள் 150 -160 ரூபாவரையும், நகப் பூச்சுடன் - நெயில் ஆர்ட் போல்சின் விலை 400 - 450 ரூபா வரையும் விற்பனை செய்யப் படுகின்றன.

# கைப்பையை வாங்கும் போது கவனிக்க வேண்டியவை

கைப் பை வாங்கச் செல்லும்போது முதலில் நீங்கள் என்ன நிறத்தில் கைப்பையை வாங்கப்போகிறீர்கள் என்று வீட்டிலேயே தீர்மானித்துக் கொண்டு கடைக்குச் செல்ல வேண்டும்.
கடையில் காட்சிக்கு வைக்கப்பட்ட கைப்பைகளை தெரிவு செய்யும் போது அது விலைக்கேற்ற தரமுடையதாக உள்ளதா? எனப் பார்க்க வேண்டும்.
நீங்கள் தெரிவு செய்யும் கைப்பைகள் பொதுவான நிறமுடையதா? எனப் பார்க்க வேண்டும்.
கைப்பைகளை வாங்கும் போது எப்போதும் கண்கவர் வண்ணங்களிலேயே தெரிவு செய்யவேண்டும்.
கைப்பைக்குள் சிறிய சிறிய மடிப்புக்கள் உள்ளனவா? எனப் பார்க்க வேண்டும்.
கைப் பையின் வார்கள் பொதுவாக சிறிதாக இருத்தல் வேண்டும்.
கைப்பையை மூடும் இடம் எப்பொழுதும் சிப் உள்ளதாக இருக்க வேண்டும்.



கைப் பைகளை வாங்கும்போது நீளம் சிறியதாகவும் அகலம் சற்று பெரியதாகவும் இருக்கவேண்டும்.
எப்போதும் கையில் அணிந்து கொண்டு செல்லும்போது கை யின் நடுப்பகுதியில் சரிசமமான அளவில் இருபக்கமும் கைப்பை தெரியவேண்டும்.

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 650 | 600 |
| நண்டு | 200 | 400 | 300 | 300 | 300 | - |
| கணவாய் | 550 | 600 | 500 | 600 | - | - |
| பாரை | 400 | 400 | - | 450 | 600 | 450 |
| சுறா | 450 | 500 | - | 500 | 500 | - |
| சீலா | 200 | 350 | 400 | 400 | 300 | 350 |
| விளை | 650 | 400 | 400 | 450 | 250 | 400 |
| முரல் | 300 | 300 | 300 | 300 | 300 | - |
| கும்பிளா | 350 | 300 | 300 | 300 | 200 | 300 |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | 400 | 300 | - |
| ஓரா | 350 | 350 | 300 | 400 | 200 | 400 |
| திரளி | 200 | 350 | 100 | 300 | 150 | 300 |
| நகரை | 150 | 250 | 100 | 300 | 200 | 300 |
| [illegible] | 150 | 100 | 100 | 100 | 100 | - |
| ஒட்டி | 200 | 150 | 200 | 300 | 200 | - |
| திருக்கை | 150 | 300 | - | 250 | 300 | 120 |
| [illegible] | 350 | 200 | - | 270 | 300 | 250 |
| [illegible] | 100 | 100 | 200 | 300 | 200 | 200 |
| [illegible] | 100 | 100 | 80 | 100 | 50 | - |
| [illegible] | 150 | 200 | 300 | 250 | - | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மக்களுக்கு ஈழ மக்களும் உதவலாம்

யாழ்ப்பாணம், டிசெ.4

கடும் மழை வெள்ளத்தில் தத்தளிக்கும்தமிழ்நாட்டின்சென்னை உட்பட்ட பல நகரங்களில் வாழும் மக்களுக்கு ஈழ மக்களும் உதவ முன்வந்துள்ளனர்.

அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் சிரமப்படும் மக்களுக்கு உதவுவதற்கு வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தினர் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் சமூக வலைத் தளங்கள் ஊடாகவும் தமிழ்நாட்டு மக்களுக்கு உதவுவதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

> இலங்கை வாழ் தமிழர்களாகிய தொப்புள் கொடி உறவு என பேச்சுக்கு அறிக்கை விட்டவர்களாக அல்லாமல், நாமாக அந்த மக்களுக்கு உதவ வேண்டியது தலையாய கடமையாகக் காணப்படுவதை யாரும் மறுப்பதற்கில்லை.

இதற்காக புலம்பெயர் ஈழ மக்களின் உதவிகளும் கோரப்பட்டுள்ளன. குறிப்பாக ருவிற்றர் வலைத் தளத்தில் இணைந்துள்ளவர்கள் நிதி திரட்டி வருகின்றனர்.

இது தொடர்பில் வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் இணைந்துவெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்கும் போதெல்லாம் தம்மை ஆகுதியாக்கியும், போராட்டங்களை நடத்தியும் இலங்கையின் வடபகுதியில் நடந்த கோரத்துக்கு முகவரிதேடிக்கொடுத்த பலர் இன்று இயற்கையின் சீற்றத்தால் இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந்த நிலையில் இலங்கை வாழ் தமிழர்களாகிய தொப்புள் கொடி உறவுஎனபேச்சுக்கு அறிக்கை விட்டவர்களாக அல்லாமல், நாமாக அந்த மக்களுக்கு உதவ வேண்டியது தலையாய கடமையாகக் காணப்படுவதை யாரும் மறுப்பற்கில்லை.

இதனை அடிப்படையாகக் கொண்டு பல உபகாரி கள் பலர் இன்று உதவுவதற்கு முன்வந்துள்ளபோதிலும் அதனைப் பொறுப்புடன் செயற்படுத்த வவுனியா மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கம் முன்வந்துள்ளது.

எனவே அவசரமானதும் அவசியமானதுமான உதவியை வழங்கும் செயற்பாடாக நீண்ட காலத்துக்குப் பழுதடையாத உலர் உணவுகள் மற்றும் புதிய உடைகளைக் கோரி நிற்கின்றோம்.

அரசியல்வாதிகள், அரசியல்கட்சிகள், வவுனியா வர்த்தகர் சங்கம், வவுனியா தனியார் பஸ் சங்கம், ஓட்டோ உரிமையாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியம், பொது அமைப்புகள், வர்த்தகர்கள், பொது மக்கள், சமூக ஆர்வலர்களிடம் இருந்து உதவிகளை எதிர்பார்ப்பதுடன், பொருள்களை வவுனியா குருமண் காட்டுச் சந்தியில் அமைந்துள்ள வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் அலுவலகத்தில் ஒப் படைக்க முடியும்- என்றுள்ளது. (ஐ-10)


## சாவகச்சேரி பிரதேசசபை

### 01.01.2016 முதல் 31.12.2016 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தை, இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், களஞ்சிய அறை என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2016

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 04.12.2015 – 17.12.2015 வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 18.12.2015 மதியம் 12 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 18.12.2015 பி.ப 2.00 மணி

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (Vat,NBT தவிர) | கேள்விப் வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (Vat,NBT தவிர) |
|---|---|---|---|---|
| | **கச்சாய் உப அலுவலகம்** | | | |
| 01 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை (தேங்காய்ச் சந்தை உட்பட) | 6589300.00 | 65900.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் மீன் சந்தை | 1097800.00 | 11000.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1103700.00 | 11000.00 | 750.00 |
| 04 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1283000.00 | 12800.00 | 750.00 |
| 05 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல – 01 | 17900.00 | 500.00 | 750.00 |
| 06 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02 | 17900.00 | 500.00 | 750.00 |
| 07 | களஞ்சிய அறை இல - 02 | 31500.00 | 500.00 | 750.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 08 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 3400.00 | 500.00 | 750.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | | | |
| 09 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 210100.00 | 2100.00 | 750.00 |
| 10 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 139800.00 | 1400.00 | 750.00 |
| 11 | கைதடிப் பொதுச்சந்தை | 13900.00 | 500.00 | 750.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 12 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 52600.00 | 500.00 | 750.00 |
| 13 | மிருசுவில் பொதுச்சந்தை | 3300.00 | 500.00 | 750.00 |
| 14 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 3700.00 | 500.00 | 750.00 |

நிபந்தனைகள்:

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 04.12.2015 தொடக்கம் 17.12.2015 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தேசிய அடையாள அட்டையினையும் அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வித் தொகை. படிவக் கட்டணம். என்பவற்றுடன் Vat 11%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
4. 18.12.2015 ஆம் திகதியன்று பி.ப 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
5. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. சந்தைகளில் சட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாக குத்தகைதாரரினால் வியாபாரிகளிடமிருந்து இடவாடகை அறவிடப்படல் வேண்டும்.
8. விவசாயிகளால் சந்தையில் விற்பனைக்கு கொண்டுவரப்படும் உற்பத்திப் பொருட்களிற்கு 4% வரி அறவிடப்படல் வேண்டும்.
9. விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை சில்லறையாக சந்தையில் வைத்து விற்பதற்கு நிலையான பொதுவான இடமொன்று ஒதுக்கி வழங்கப்படும். குத்தகைதாரர் சில்லறையாக விற்பனை செய்யும் விவசாயிகளிடமிருந்து சட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாக இடவாடகை அறவிடுதல் வேண்டும்.
10. விவசாயிகளால் சந்தைக்கு விற்பனைக்காக கொண்டுவரும் நிலக்கீழ் விவசாய உற்பத்திப் பொருட்கள் சில தவிர்ந்த ஏனைய பொருட்களிற்கு வியாபாரிகளால் கழிவுகள் விதிக்கப்படக்கூடாது. உற்பத்திப் பொருட்களின் தரத்திற்கு ஏற்ப விலைகளை நிர்ணயம் செய்து வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்பட வேண்டும்.
11. சந்தையில் வியாபாரம் செய்வதற்கு அனுமதி பெற்ற வியாபாரியாயின் வேறு சந்தைகளில் விவசாய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்து வழமையாக விற்பனை செய்யும் சந்தையில் விற்பனைக்காக கொண்டுவரும் விவசாய உற்பத்திப் பொருட்களிற்கு வரி அறவிடக்கூடாது.
12. நேரடியாக உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்து கொண்டு வந்து விற்கும் பொருட்களிற்கு வரி அறவிடலாம்.
13. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
14. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
15. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை **"செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்"** என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
16. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
17. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
18. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
04.12.2014

(C/20562)(10.15.17)


## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ். கோப்பாய் மகாவித்தியால கரப்பந்தாட்ட அணியினரைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் த.ஞானப் பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-10)

****

சாவகச்சேரி,டிசெ.4

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் இந்த நிகழ்வு, பாடசாலை அதிபர் திருமதி.சி.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.மனோரஞ்சிதனும், சிறப்பு விருந்தினராக சம்பத் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் இ.இராசகாந்தனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-9)

## லஞ்ச ஊழல் விழிப்புணர்வு இன்று

யாழ்ப்பாணம், டிசெ.4

லஞ்சம் மற்றும் ஊழலுக்கு முற்றுப்புள்ளி எனும் தொனிப்பொருளில் பொதுமக்களுக்கான விழிப்பூட்டும் செயலமர்வு ஒன்று யாழ். பஸ் நிலையத்தின் முன்பாக இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

லஞ்சம் ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் டயஸ் விக்கிரமசிங்க, கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## இந்து உலா நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.4

கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தின் 'இந்து உலா' நூல் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரியில் நூல் ஆசிரியர் செல்வி செ.கிருஷாந்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப்பணிப்பாளர் க.முருகவேல் கலந்து கொள்வார். இந்த நூல் கல்லூரியின் நான்காவது நூல் வெளியீடு என்பதுடன், பல வருட இடைவெளியின் பின்னர் வெளியிடப்படுகின்றது. (ஐ-10)


## Room Boy

யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபல Hotel இற்கு Room Boy ஆகப் பணியாற்றுவதற்கு ஆள்கள் தேவை. தகுதியானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 021 222 2829
077 221 5167

(66702)
(11,15,17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### லயன் பிரான்சிஸ்பிள்ளை அன்ரன் சில்வெஸ்டர்



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு பிரான்சிஸ்பிள்ளை அன்ரன் சில்வெஸ்டர் 01.12.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சந்திரகலாவின் (ஆசிரியர் - யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்) அன்புக் கணவரும், ரெரன்சி தாமரா (பழைய மாணவி- யா / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, SLIIT Metro), பிராயன்பெனட் (பழைய மாணவன்- யா/பரியோவான் கல்லூரி-SLIIT Metro) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற ஜோண் பிரான்சிஸ்பிள்ளை மற்றும் லில்லி மேரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், றெஜினோல்ட் (முகாமையாளர் ஆசிரி ஆய்வுகூடம் - யாழ்ப்பாணம்), பத்மினி (லண்டன்), காலஞ்சென்ற நந்தினி மற்றும் ராகினி (கொய்யாத்தோட்டம்), விநிபிறீடா (ஆசிரியர் - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), வினோதினி ( Jaffna Traders) , காலஞ்சென்ற ரஜனி மற்றும் வொஷிங்டன் ( லண்டன்), வெலானி (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கமலா, குணரட்ணம், காலஞ்சென்ற கிறிஸ்தோபர் மற்றும் அன்ரன் ( Paster A.O.G. Jaffna) காலஞ்சென்ற பாலதாசன் மற்றும் சாவினி, செந்தில் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் தெய்வேந்திரராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கொடிகாமம்), ராணிமலர், செல்வராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கொடிகாமம்), விஜயரட்ணம் (லெபனான்), ஜெயரட்ணம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் துரைச்சாமி, தியாகராஜா, ஜெகநாதன், உதயா, சாரதா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.12.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யா/ புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் யா/ கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

859/18, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 602 7391

(66595)(11,15,17)

## மரண அறிவித்தல்



### திருமதி கமலாவதி குமாரசாமி (நாதஸ்வரம் - ராசு)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாவதி குமாரசாமி (நாதஸ்வரம்-ராசு) 30.11.2015 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-ராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-கமலம் தம்பதியரின் மருமகளும், குமாரசாமியின் (ராசு) அன்பு மனைவியும், விஜயவனிதா, உதயணன் (உதயன் UK), மதுரகுமார் (வெள்ளை), சிவனேஸ்வரி (தேவி), சிவனேஸ்வரநாதன் (குஞ்சுநாதன்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் கனகாம்பரி (ஆசிரியர்-யா/ இ.ம.கல்லூரி) ஆகியோரின் மாமியும், பரமேஸ்வரி, ராசகோபால் (துரைச்சாமி-கனடா) ஆகியோரின் மைத்துனியும், சிறீலதன் (UK), வினோஜா, ராகப்பிரியா, காணவர்ஷினி ஆகியோரின் பேர்த்தியும், ரிஷிகேசவனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **இன்று (04.12.2015) வெள்ளிக்கிழமை** அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக பி.ப 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.03, சங்கிலியன் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 7203

தகவல்:
குடும்பத்தினர்.

(14.15)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வமணி கந்தையா



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமணி கந்தையா நேற்று (03.12.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலன் - சின்னக்குட்டி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், கமலாம்பிகை, பூபதி, அற்புதமலர், தர்மபாலசிங்கம், சூரியகலா, சந்திரபாலா (ஜேர்மனி), ஜெயக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் சின்னம்மா, முருகையா, பாலசிங்கம், புஸ்பவதி, சிவஞானம், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் அஸ்ரிட், ராதா ஆகியோரின் மைத்துனியும், பிறேமானந் (கொலன்ட்), ஆனந்தரூபி (சித்ரா - பிரான்ஸ்), சிவானந்தம் (சுவிஸ்), சுயன், நியூறா, தனுசா, நவநீதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயந்தி, பவளராகினி (பவானி), இதயநிலா, சுபாகரன் ( சுபா - உரிமையாளர் - நவா கேபிள் T.V, நவாலி வடக்கு ), பிரான்சிஸ், தாட்சாயினி ஆகியோரின் மாமியாரும், தர்சிகா, விதுயன், பிரனிதா, யஸ்மிதன், அபித்தா, அஸ்னா, கம்ஸ்ரிக்கா, சலஸ்ரிக்கா, வேனுஸ்ரிக்கா, கியூஸ்ரிக்கா, சாருஜன், தர்மிசா, வினிஸ்ரான், காலஞ்சென்ற தனுஸ்கா மற்றும் லுவினா ஆகியோரின் பாசமிகு பேத்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புலவர் வீதி, நவாலி வடக்கில் உள்ள அவரது மருமகனான சுபாவின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (04.12.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(66593)(11,15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம்

சென்றுகொண்டிருந்த குறித்த வயோதிபர், பஸ் ஒன்றின் பின்னால் சென்றுகொண்டிருந்த நிலையில் சுன்னாகத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் எரிபொருள் நிரப்புவதற்காக வீதியைக் கடந்தபோது மல்லாகத்திலிருந்து யாழ். நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியதனால் விபத்து ஏற்பட்டது. அதில் காயமடைந்த இருவரும் தெல்லிப்பழை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு பின்பு குறித்த வயோதிபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது சுமார் இரண்டரை மணித்தியாலங்களின் பின் அவர் உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணையை மேற்கொண்டார். (த-4)

## பிரமாணக்

சபை, பளை பிரதேசத்தில் காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்யப்படுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. அந்த நிறுவனத்தின் வணிக நிதி நிறுவனங்களிற்கான சமூகக் கடப்பாடுகள் செயற்றிட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு வடக்கு மாகாண சபை 20 மில்லியன் பெறுமதியான 6 நீர்த்தாங்கி வாகனங்க ளைப் பெற்றுக் கொண்டதோடு, இந்த வருடம் அவர்க ளிடமிருந்து பெற்ற 20 மில்லியன் பணத்தை மாகாண சபையின் திறைசேரிக் கணக்கில் இட்டு, சபையின் அனுமதியுடன் அதற்கான செலவினங்களைச் செய் யாதது நிதிப் பிரமாணக் கோவைகளுக்கு முற்றிலும் முரணானது. இது தொடர்பாகச் சபையில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த முதலமைச்சர், அந்த நிதியானது பிரதமசெயலாளரின் பிறிதொரு கணக்கின் மூலம் கையாளப்படுவதாகக் கூறியிருந்தார். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் திறைசேரியில் வைப்பிலிடப்படாமலும், செலவினம் சபையினால் அங்கீகரிக்கப்படாமலும் இந்த நிதி கையாளப்படுவது நிதிப்பிரமாணக் கோவைக்கு முற்றிலும் முரணானது. இவ் வாறான செயற்பாடு ஊழலுக்கு வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சர்மிளா உமாகரன்
அவர்களின் அன்புத் தந்தையார்
**நடராசா இரகுநாதன்**
அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அதிபர், ஆசிரியர் கழகம்
யா/பெரியபுலம் ம.வி.
(66701)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் J/114 பிரிவில் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றும்
ஜெயகுபேஸ் லினேஸ் அவர்களின் அன்புத் தந்தையார்
**அரிச்சந்திரன் ஜெயகுபேஸ்**
இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.
உத்தியோக நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம் - நல்லூர்.
(66710)

## கண்ணீர் அஞ்சலி



**லயன் F.A சில்வெஸ்ரர்**
கோப்பாய் லயன்ஸ் கழக சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் தலைவருமான லயன் F.A சில்வெஸ்ரர் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் இறைஞ்சுகின்றோம்.
(66599)(11,15,17)
கோப்பாய் லயன்ஸ்கழகம்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**க.சிவயோகம்**
(யோகம்மா)



சிவநெறியே சிந்தித்த சிவமறு சிவயோகப் பெருந்தாயார்
செம்மையுடன் வாழ்ந்தே சிவப்பேறெய்தி - இன்று
ஆண்டொன்று ஆகியதே அன்பு முகம் காண்கிலமே
சுந்தரப் பொலிவுடனே பரிவு காட்டி - நாமென்றும்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திட வருந்தியுழைத்திரே
தினகரனின் திவ்வியமாய் தித்திக்கும் மொழிபேசி - தெவிட்டாது
எமைக்காத்த தேனமுதப் பெருந்தாயார் சிவனடியில்
என்றென்றும் நிலைத்திடவே பெருமானை ஏத்துகின்றோம்.

இன்று (04.12.2015) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
ராணி - மகள்
ராகினி - மகள் (வாழ்வின் எழுச்சி முகாமையாளர் - நல்லூர்)
இல.46, பலாலிவீதி,
யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்
## யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை



செல்வி
வை.சாவித்திரி



திருமதி
லோ. பாலகிருஷ்ணன்



திருமதி
வ.கேதீஸ்வரன்

வலிகாமம் கல்வி வலயத்தினால் சாதனையாளர்விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட மேற்படி எமது பாடசாலை ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்
ஆசிரியர் கழகம்
யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை
கந்தரோடை
சுன்னாகம்.


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2016

யாழ்.மாநகர சபையினால், 04.11.2015ஆம் திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கு அமைவாக, இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படிகடைகள் 01.01.2016ஆம் திகதிமுதல் 31.12.2016ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| கேள்விப்படிவக் கட்டணம் | - | ரூபா 500.00 (VAT, NBT நீங்கலாக) |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | - | 04.12.2015–15.12.2015 நண்பகல்12.00 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | - | 16.12.2015 மு.ப 9.30 மணிவரை |
| கேள்விதிறத்தல் | - | 16.12.2015 மு.ப. 10.00 மணிக்கு |

### மாநகர சபை யாழ்ப்பாணம் மீள்கேள்விஅறிவித்தல் அட்டவணை

| தொ. இல | விவரம் | கடை இல | மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (11% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,83,000.00 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 2,20,400.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 75,000.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 82,000.00 |
| 5 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,43,450.00 |
| 6 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 5,14,900.00 |
| 7 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 97,565.00 |
| 8 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 3,32,500.00 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 3,05,000.00 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 2,51,750.00 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 3,80,000.00 |
| 12 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 2,24,200.00 |
| 13 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 2,37,500.00 |
| 14 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 2,00,000.00 |
| 15 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 2,34,650.00 |
| 16 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 63,080.00 |
| 17 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 12,825.00 |
| 18 | பண்ணைமீன் சந்தை | | 10,000.00 | 32,90,000.00 |
| 19 | செங்குந்தாசந்தை | | 10,000.00 | 16,15,000.00 |
| 20 | நாவாந்துறை மீன்சந்தை | | 10,000.00 | 5,76,650.00 |
| 21 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 57,950.00 |
| 22 | பாசையூர் மீன்சந்தை | | 2,000.00 | 3,80,000.00 |
| 23 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 69,350.00 |
| 24 | புங்கன் குளம் சந்தை | | 2,000.00 | 9,025.00 |
| 25 | இந்து விடுதிக்கு தெற்குப் பக்கமாக உள்ள வாகன தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | | 1,000.00 | 49,875.00 |
| 26 | யாழ் கச்சேரிசிறுவர் பூங்காசிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 2,50,000.00 |
| 27 | யாழ். முஸ்லீம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள சந்தை கட்டிடத் தொகுதி - மேல் தளம் 8 கடைகள் (விடுதி, இறைச்சி, மீன் வகை தவிர்ந்த ஏனையவை) | | 10,000.00 | 1,82.400.00 |
| 28 | முனிஸ்வரன் வீதிதுவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் (வீரசிங்கம் மண்டபம் அருகாமை) | | 2,000.00 | 2,00,000.00 |
| 29 | மின்சார நிலைய வீதி மலசலகூடம் | | 2,000.00 | 1,09,250.00 |

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
03.12.2015

பொ. வாகீசன்
ஆணையாளர்
யாழ்.மாநகரசபை.

(C/20563)(10.15.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண


இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்றது. இதன் போது குருநாகல் மா வட்ட நாடாளும ன்ற உறுப்பினரும், முன்னாள் ஜனாதி பதியுமான மகிந்த ராஜபக்ச பங்கெடுக் கவில்லை.

வாக்கெடுப்பின் போது மகிந்த ராஜ பக்சவின் பெயர் அழைக்கப்பட்டபோது, சபையில் பெரும் சிரிப்பொலி எழுந் தது. இவ் வாறான தொரு நிலையில், வாக் கெடுப்பில் பங் கேற்காமைக்கான காரணத்தை, மகிந் தவின் ஊடகப் பேச் சாளர் வெளியிட் டுள்ளார்.

இரண்டு திருமண நிகழ்வுகளுக்காகமகிந்த சாட்சிக் கையொப் ப மிடுவ தற்குச் சென் றமையினாலேயே நாடாளுமன்றத்துக்கு வருகைதரவில்லை. இருப்பினும் முன் னாள் நிதி அமைச் சர் என்ற ரீதியில் வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் உரையாற்றுவதற்கு 5 நிமிட நேரம் கூட அவருக்கு வழங்கப்படாதது ஏன், என்பது தொடர்பிலும் ஆராயப்படவேண்டும் என்றும் மகிந்தவின் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார். (த-5)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை மார்க்கண்டு



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் அல்லாரையை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மார்க்கண்டு நேற்று (03.12.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்வமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் இராஜபூவதியின் அன்புக்கணவரும் கமலாதேவி, கணேசமூர்த்தி, கணேசலிங்கம் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் குணசிங்கம், உத்தரகுமார், வடிவானந்தன், தவச்செல்வன், தவமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தளையசிங்கம், தங்கராணி, குவேந்தினி, சிவசோதி, அன்பரசி, கலைச் செல்வி, பிரேமிளா, றமேஸ் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சயிலா மற்றும் வாசுகி, பிரசாத், பிரசாளினி, பிரசாந், பவன்ராஜ்,கஜந்தன், மதுசன், ஹர்சிகா, சாருகா, காணுசன், நிலானி, லக்சிகா, கஸ்தூரி, தயாபரன், பவித்திரன், அபிலாஸ், அக்சிதா ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2015) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எறியால் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை தெற்கு,
மீசாலை.
(c/20869)

தகவல் :
குடும்பத்தினர்.

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் மன்மத வருடம் கார்த்திகை மாதம் 9ஆம் நாள் (25.11.2015) புதன்கிழமை அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தந்தை

**அமரர் சிவஸ்ரீ முத்தையாக்குருக்கள்**
**கிருஷ்ணசாமிக்குருக்கள்**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

04.12.2015 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு தசாகம் 05.12.2015 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடபம், ஏகோதிட்டம், மாசியம்
06.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சபிண்டீகரணம்
07.12.2015 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கிருஹயக்ஞும்

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி சமாராதனை நிகழ்வுகளில் குடும்ப சமேதராய் கலந்து சிறப்பித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தானம்
ஊரெழு மேற்கு, சுன்னாகம். (66712)

குடும்பத்தினர்.
077 641 8853, 077 873 9422

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு பரஞ்சோதி



சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு பரஞ்சோதி 01.12.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - மீனாட்சி தம்பதிகளின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்தம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சரோஜினி தேவியின் அன்புக்கணவரும் ரோகிணி (லண்டன்), தாரணி (பிரான்ஸ்) காலஞ்சென்ற குமுதினி மற்றும் வாமினி (பிரான்ஸ்), சுபாஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருள்ரூபன் காலஞ்சென்ற மனோகரன் மற்றும் பாஸ்கரன் சிவமாறன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, திருநாவுக்கரசு, அருளானந்தம், பேரம்பலம், சண்முகநாதன், தனலெட்சுமி மற்றும் தவமலர் (வவுனியா) ஆகியோரின் சகோதரனும் தபிசன், மதீசன், தனுசன், மதுஷா, கிஷான், கிரிஷிகா, கிபிஷன், தீட்ஷணா, சகானா, சபரீஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி,
தாவடி தெற்கு கொக்குவில்.
071 3055 892

தகவல்:
அ.குகனேசபிள்ளை - (குகன்)
(பெறாமகன்) (66711)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சக ஆசிரியர் சி.சிந்தனைச்செல்வன் அவர்களின் அன்புத் தாயார் **திருமதி. சிவலிங்கம் கண்மணி**
(திரு.கே.நற்குணசிங்கம், பாடசாலை வீதி, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.)
*03.12.2015 ( வியாழக்கிழமை) காலமானார். அன்னாரின் ஆத்மசாந்தியடைய பிரார்த்திப்பதோடு இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு - 13.

## மரண அறிவித்தல்

திருமதி
# அனுதமா ஜெய்ராம்

**(தலைவி - ரூலின்ஸ் நிறுவனம், இயக்குநர் சபை உறுப்பினர், உருத்திரா கட்டடக் கலை நிறுவனம்)**



யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அனுதமா ஜெய்ராம் நேற்று (03.12.2015) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் உருத்திரலிங்கம் (பொறியியலாளர், முகாமைத்துவப்பணிப்பாளர், ரூலின்ஸ் நிறுவனம், உருத்திரா கட்டடக் கலை நிறுவனம்) காலஞ்சென்ற விமலாம்பாள் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஜெகதீசன் மற்றும் நவநீதம் (றோஸ்அன்றி) தம்பதியினரின் அன்பு மருமகளும் ஜெய்ராமின் அன்பு மனைவியும், செந்தூரன் ( U.K ) அவர்களின் அன்புச் சகோதரியும் இராசமலரின் பெறாமகளும், ஜெய்கிஷன், ஜெய்கரன், திருமதி ஜெகந்தா பிரிதிவிராஜ், வைஸ்ணவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

"விமலம்"
இல- 08, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (66 707)

தகவல்:
குடும்பத்தினர்
021 321 6397

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னை

கோடி வரையில் இழப்பு ஏற்பட்டுள்ளது.
தமிழகத்துக்கு உதவுவதற்குப் பல்வேறு மாநிலங்களும் முன்வந்துள்ள நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது அனுதாபத்தை தெரிவித்துள்ளதுடன் அவர்களுடன் இணைந்து கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.
இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதியின் டுவிட்டருக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது உத்தியோகபூர்வ டுவிட்டரில் நன்றி தெரிவித்துள்ளார்.
இதேவேளை, நேற்று மாலை தமிழகத்தின் வெள்ளப் பேரிடரைப் பார்வையிட்ட இந்தியப் பிரதமர் மோடி, உடனடியாக இந்திய மதிப்பில் ஆயிரம் கோடி ரூபா நிவாரணப் பணிக்காக ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## வெட்டிப் பேச்சால்

செய்விப்போம்என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு மேலும் அவர் தெரிவித்ததாவது:-
கடந்தகாலக் கொடிய போரின் பின்னர் பல குடும்பங்களில் பெண்கள் தமது கணவன்மாரை இழந்து பிள்ளைகளை இழந்து பெற்றோர்களை இழந்து நிர்க்கதியாகி நின்ற நிலையில், பொருள் தேடலில் ஈடுபடக் கூடிய தந்தை, கணவன், ஆண்பிள்ளைகள் அற்றநிலையில், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு வாழக் கூடிய பல குடும்பங்களுக்கு இவ்வாறான அமைப்புக்கள் உதவும் கரங்களாக வாழ்க்கைக்கு ஒளியூட்டக் கூடிய அமைப்புக்களாக விளங்கி வந்துள்ளன.
ஆண்களோ, பெண்களோ கல்வி கற்றல் செயற்பாடுகளை ஓரளவு சிறப்பாக அல்லது அதிலும் குறைவாக நிறைவு செய்த பின்னர் அவர்களுள் பலர் வேலை தேடி எமது காரியாலயத்தை நோக்கி வாரா வாரம் படை எடுக்கின்றார்கள். ஆனால் இவர்களில் ஒரு சிலருக்கே எம்மால் உதவ முடிகின்றது. பலரிடம் நாம் சுய தொழில் பற்றி பேசிப் பார்க்கின்றோம். ஆனால் அவர்கள் அதைச் செவிமடுப்பதாகத் தெரியவில்லை. அப்படியானவர்களுக்கு இது போன்ற கண்காட்சிகள், கைப்பணி வேலைகள் மீதும் குடிசைக் கைத்தொழில்கள் மீதும் ஆர்வத்தை உண்டுபண்ணும் என நம்புகின்றேன்.
அண்மையில் பத்திரிகை ஒன்றில் காணப்பட்ட ஒரு சிறு செய்தி எனது மனதைத் தொட்டது. 27 வயது நிரம்பிய இளைஞர் ஒருவர் மிகச் சிறப்பாகத் தமது கல்விச் செயற்பாட்டை முடித்துக் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட பட்டங்களையும் பெற்ற பின்னர் அரச திணைக்களங்களிலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ சேவையாற்ற விரும்பாது தனது சுயதொழில் மூலமாக அதாவது பனை ஈர்க்கினால் சுழகு பின்னுகின்ற தொழிலை மேற்கொண்டு மாதாந்தம் இலட்சக்கணக்கான ரூபாக்களை வருமானமாகப் பெறுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.
பயன்தரும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதே எமது பலனற்ற பேச்சுக்களுக்கும் சோம்பேறித் தனத்துக்கும் தக்க மருந்து. எமது திணைக்களங்களில் கூட எமது அலுவலர்கள் வெட்டிப் பேச்சுக்களிலேயே ஈடுபட்டுக் கடமைகளைப் புரிவதில் கோட்டை விடுகின்றார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும். எமது மக்கள் கடமை தவறாத சீலர்களாக மாற முன்வரவேண்டும். பயன் தரும் நடவடிக்கைகளில் ஈடுபட யாவரும் முன்வாருங்கள்.
தமிழினத்தின் தற்போதைய நிலை, அதன் வருங்காலம் பற்றிச் சிந்தித்தால் எமக்குப் பொறுப்புணர்ச்சி தானே வந்து விடும். நாட்டுக்கு நன்மை தரும் நடவடிக்கைகளில் ஈடுபட முன்வரவேண்டும் என்று கருதுகின்றேன்
இன்றைய இந்தக் கண்காட்சியானது பல குடும்பங்களுக்கு எதிர்காலத்தில் ஒளி கொடுக்கக்கூடிய வழிகளை எடுத்தியம்பும் ஒரு முன்மாதிரியான நிகழ்வாக அமைந்துள்ளது என்பதில் சந்தேகம் கிடையாது. ஒவ்வொரு அமைப்புக்களினதும் விசேட செயற்பாடுகளையும் ஆக்கங்களையும் குணாதிசயங்களையும் அவர்களினால் இங்கே காட்சிக்கு வைக்கப்பட்ட பொருள்களில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான அமைப்புக்கள் மென்மேலும் சிறப்புடன் செயற்பட்டு நாம் எவர்க்கும் சளைத்தவர்கள் அல்ல என்ற செய்தியைக் கூறக் கூடிய வகையில் செயலாற்ற வேண்டும்-என்றார். (த-ரி6)

## புதிய

சர் மங்கள சமரவீர மேலும் கூறியுள்ளதாவது:-
இலங்கையில் புதிய இரகசிய சித்திரவதை முகாம்கள் எவையும் எங்கும் இயங்கவில்லை. அவ்வாறு இயங்குவது தொடர்பில் யாராவது முறைப்பாடு செய்தால் அவற்றை விசாரணை செய்வதற்கு அரசு தயாராகவுள்ளது.
பலவந்தமாக அல்லது விருப்பத்துக்கு மாறாகக் காணாமற்போதல்கள் தொடர்பிலான ஐ.நா செயற்குழு இலங்கைப் பயணத்தின்போது வெளியிட்ட அறிக்கை குறித்து அரசு மிகத் தீவிரமாகக் கவனத்தில் எடுத்துள்ளது.
திருகோணமலைக் கடற்படை முகாமில் இயங்கிய நிலத்தடி இரகசிய சித்திரவதைக் கூடங்களில் காணமற்போனவர்களைத் தடுத்து வைத்திருந்ததாக, ஐ.நா. செயற்குழுப் பிரதிநிதிகள் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தனர்.
அத்துடன், குறித்த இரகசிய சித்திரவதை முகாமில் ஐ.நா. செயற்குழு மேற்கொண்ட ஆய்வில், ஒரு சிறைக்கூடத்தின் சுவரில் அதில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் எழுதியிருந்த இலக்கங்களின் அடிப்படையில் ஜூலை 2010 ஆம் திகதி என நம்பப்படுவதாக, அதன் பிரதிநிதிகள் குறிப்பிட்டிருந்தனர்.
இந்த இரகசிய சித்திரவதை முகாமின் சிறைக் கூடங்கள் நீதிமன்றின் அனுமதியுடன் சீல் செய்யப்பட்டுக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.
எனினும் இலங்கையில் இவ்வாறான புதிய எந்தவொரு இரகசிய இராணுவ முகாம்களோ அல்லது இரகசிய சித்திரவதைத் தடுப்பு முகாம்களோ கிடையாது.
அத்துடன், பலவந்தமாக அல்லது விருப்பத்துக்கு மாறாக காணாமற்போதல்கள் தொடர்பிலான ஐ.நா. செயற்குழு வெளியிட்ட அறிக்கையில் பொலிஸாரும் சித்திரவதையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலும் உரிய விசாரணைகள் நடத்துவதற்கான தகவல்களை நாம் ஐ.நா செயற்குழுவிடம் பகிர்ந்து கொண்டோம்.
அரசு, கடந்த காலத் தவறுகளைப் புரிந்து கொண்டு அவற்றுக்குத் தீர்வு காண முனைப்புக் காட்டி வருகின்றது.
இராணுவத்தினர் பயன்படுத்தி வரும் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. வடக்கில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
வடக்கின் மிகவும் அத்தியாவசியமான நிலைகளில் தொடர்ந்தும் படையினர் நிலைநிறுத்தப்படுவார்கள் - என்றார்.
இதேவேளை, இரகசிய சித்திரவதைத் தடுப்பு முகாம்கள் தொடர்ந்தும் காணப்படுவதனை அண்மைய தகவல்கள் வெளிப்படுத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். (த-வ)

## மீண்டுமொரு

முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார்.
ஜனாதிபதிக்குரிய முழு அதிகாரங்களையும் நாடாளுமன்றத்துக்கு வழங்கி சட்டவாக்கச் சபையைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு தற்போது எதிரி என்று எந்தவொரு நாடோ, அமைப்போ இல்லை என்றும் ஜனாதிபதி கூறினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதி செலவின தலைப்புகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் கூறியவை வருமாறு:-
ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை குறைத்துள்ளேன். சில அதிகாரங்களை நீக்குவதுபற்றி சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததால் அதிகாரக் குறைப்பின் உச்சத்துக்கே செல்லமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது.
முன்னாள் அரசிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருந்தது. எனினும், மக்களுக்கு சார்பான சட்டங்களை இயற்றுவதற்கு அந்த அதிகாரம் பயன்படுத்தப்படவில்லை. மாறாக, உலகில் எந்தவொரு அரச தலைவரிடமும் இல்லாத வகையில், ஜனாதிபதியின் அதிகாரங்களை பலப்படுத்துவதற்காகவே அது பயன்படுத்தப்பட்டது. ஆனால், அன்று 18 ஐ ஆதரித்தவர்கள் அதற்கு எதிரான வகையில் இன்று 19ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவளித்தமை சந்தோசமளிக்கின்றது.
அத்துடன், சுயாதீன ஆணைக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட்டதன் ஊடாக நாட்டுமக்களின் 40 வருட கால கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. தேர்தல் விடயத்தில் இரு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் கறுப்புப் புள்ளிகள் இருக்கின்றன. எனினும், இனி சுயாதீன வாக்குரிமை பாதுகாக்கப்படும்.
அத்துடன், அரசியல் அழுத்தங்களின்றி நீதித்துறை கம்பீரமாகச் செயற்படுகின்றது. நீதிபதிகள் சுயாதீனமாகத் தீர்ப்புகளை வழங்குகின்றனர். இது நல்லாட்சிக்குக் கிடைத்த வெற்றியாகும். கடந்த காலங்களில் இலங்கையால் உலக நாடுகள் பிளவுபட்டன. ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் பிளவு ஏற்பட்டது. ஆனால், இன்று அந்நிலை மாறியுள்ளது. உலக நாடுகள் நேசக்கரம் நீட்டுகின்றன. கைவிரித்துச் சென்ற நாடுகள் மீண்டும் எம்முடன் கைகோத்துள்ளன. சர்வதேச அரங்கில் இலங்கைக்கு எந்தவொரு எதிரி நாடும் இல்லை; சர்வதேச அமைப்புகளும் எதிரிகளாக இல்லை.
பலம்வாய்ந்த நாடுகளின் தலைவர்கள் முன்னர் இலங்கையின் அரச தலைவரைச் சந்திப்பதற்கு ஆர்வம் காட்டுவதில்லை. சந்தர்ப்பமும் வழங்கப்படாது. ஆனால், பொதுநலவாய மாநாட்டுக்கு சென்றிருந்தவேளை, ஒரு மணித்தியாலயத்துக்குள் பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் பிரதமர்களுடன் பேச்சு நடத்தினேன்.
இதில் குறிப்பாக, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனுடன் நடைபெற்ற சந்திப்பின்போது ஜி.எஸ்.பி. வரிச்சலுகை குறித்தும், மீன் ஏற்றுமதித் தடை பற்றியும் பேசப்பட்டது. இதன்போது, இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள மீன் ஏற்றுமதித் தடையை விரைவில் நீக்குவதற்குரிய விடயத்தில் தான் நேரடியாக தலையிடுவதாக கமரூன் உறுதியளித்தார். அத்துடன், இலங்கையின் அபிவிருத்திக்கு 6 பில்லியன் நிதியும் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.
அதேவேளை, போர் முடிவடைந்த பின்னர் செய்யவேண்டிய நிறைவேற்றப்படவேண்டிய விடயங்கள் நடைபெறவில்லை. மீண்டும் ஒரு போர் ஏற்படுவதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்காக அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும்.
வடக்கையும், தெற்கையும் இணைக்கவேண்டும். புரிந்துணர்வின்மை, சந்தேகம் ஆகியன களையப்படவேண்டும். இதயங்களை இணைக்க வேண்டும். இதற்கு அனைவரதும் ஆசீர்வாதம் அவசியம்–என்றார். (த-சி)

## கைதிகளின்

உள்ளிட்ட 22 விடயதானங்கள் தொடர்பிலான வரவு–செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோது மேற்கண்ட விடயங்களைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஆணைக்குழுக்களுக்குப் பூரண சுயாதீனம் வழங்கப்பட்டுள்ளமை குறித்து நாம் அதீத மகிழ்ச்சியடைகின்றோம். இந்த ஆணைக்குழுக்களுக்கு அச்சமில்லை. அடிபணிந்து செயற்படவும் தேவை இல்லை. 19ஆவது திருத்தச் சட்டத்தினூடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனர். ஆணைக் குழுக்கள் தாமதமின்றி நியமிக்கப்பட்டமை மகிழ்ச்சியளிக்கிறது. வேறு எந்தக் காரணங்களுக்காகவும் அல்ல. நாட்டின் நலனுக்காகவே நாங்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றோம். நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் நாடு மெச்சுவதாக மக்கள் மெச்சுவதாக இருக்கும். நாட்டுக்காகச் சேவையாற்றும் எனவும் நினைக்கின்றேன்.
இந்த நேரத்தில் தடுப்புக்காவலில் உள்ளவர்கள் பற்றி நான் பேச விரும்புகிறேன். இது பாரதூரமான பிரச்சினையாக உள்ளது. மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளது. போதிய விடயங்கள் இது தொடர்பாகக் கையாளப்படவில்லை. இதற்கு முடிவுகண்ட அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.
குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், வழக்கு விசாரணைகள் பூர்த்தியடையாதவர்கள், வழக்குத் தொடரப்படாதவர்கள் என இவர்கள் மூன்று வகையினராக உள்ளனர். இது குறித்து நாம் ஜனாதிபதியுடன் பேசியுள்ளோம். இந்த விடயம் துரிதமாக முடிக்கப்படவேண்டும். நீதி அமைச்சரிடமும் பேசியுள்ளோம்.
தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் மீது வழக்குத் தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தால் அவர்கள் எப்போதோ விடுதலைசெய்யப்பட்டிருப்பார்கள். ஆனால், இவர்கள் 15, 20 வருடங்களாகச் சிறையில் இருக்கின்றனர்.
இவர்களின் விடுதலை தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் என குறிப்பிடுகின்றனர். இது யதார்த்தமற்றது; மிகைப்படுத்தப்பட்டது. சிலர் இவ்வாறு கூறி ஸ்திரத்தன்மையற்ற நிலையை உருவாக்கப் பார்க்கிறார்கள். இந்நிலையில் அரசு அதன் பாதையில் செல்லும் என நினைக்கிறேன்.
மீளிணக்கம், சௌஜன்யத்தை ஏற்படுத்தும் என நினைக்கிறேன்; நாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட வழி வகுக்கும் என நினைக்கிறேன். சிலர் தமது சுயநல காரணங்களுக்காக தடை ஏற்படுத்துகின்றனர். இது அதில் செல்வாக்கு செலுத்தாது. இதுபற்றிய நடவடிக்கைகள் இராஜதந்திர ரீதியில் கையாளப்படவேண்டும். வடக்கு, தெற்கு இரண்டும் இணைந்து செயற்படவேண்டும். ஆனால், அரசியல் ரீதியாக சில சமயங்களில் இந்தச் சபை தவறாக வழிநடத்தப்படுகிறது.
வடக்கு, கிழக்கு மக்கள் அனைவரும் சமாதானமாக வாழவிரும்புகின்றனர். அவர்கள் தைரியமான மக்கள். கவலையில் வாடுபவர்கள் அல்லர். நிமிர்ந்து செல்லக்கூடிய தகுதியுள்ளவர்கள். அவர்களுக்கு கௌரவமான தீர்வு வழங்கவேண்டும். அரசு எதையும் தயங்காது மிகவும் துணிகரமாக செயற்படவேண்டும்.
ஆயுதமேந்திய ஜே.வி.பியினருக்கு பொதுமன்னிப்பு தமிழருக்கு?
1988, 89 ஆண்டுகாலப் பகுதிகளில் ஜே.வி.பியினர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அவர்கள் ஆயுதமேந்திப் போராடினர். அவர்கள் பொலிஸ் நிலையங்களைத் தாக்கினர். வன்முறையில் ஈடுபட்டனர். இருப்பினும், அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கி அவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர்.
ஆனால் தடுப்பிலுள்ள கைதிகள் விடயத்தில் அரசு ஏன் தாமதம் காட்டுகின்றது, காலம் தாழ்த்துகின்றது என்று எனக்குத் தெரியவில்லை.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காலத்தில் ஆயுதமேந்தி போராடிய புலிகள் விடுதலை செய்யப்பட்டனர். எனவே, இவர்களை விடுவிக்க காலம் தாழ்த்தக்கூடாது. விடுவிக்கவேண்டும்.
தடுப்பிலுள்ள கைதிகளின் விடுதலை, பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்குவது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அரசு நீக்கவேண்டும். இந்தச் சட்டம் மிகவும் கொடூரமானது; சர்வதேச சட்டத்துக்கு எதிரானது; இதை ஏற்கமுடியாது, நீக்கவேண்டும் என ஐ.நா வினாலேயே கூறப்பட்டுள்ளது. இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாக நீங்கள் தாமாகவே முன்வந்து ஐ.நாவில் கூறினீர்கள். ஏன் இப்படி தாமதப்படுத்துகின்றீர்கள்?
தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் நீண்டகாலமாக இருக்கின்றனர். இது சட்டப்பிரச்சினை அல்ல; அரசியல் ரீதியிலான பிரச்சினை. எனவே, இந்த விடயத்தை நீடித்துக் கொண்டுசெல்ல நாம் அனுமதிக்கமாட்டோம்.
தடுப்பிலுள்ள கைதிகள் ஏன் விடுதலைசெய்யப்படக்கூடாது என நாம் ஜே.வி.பியிடம் கேட்டுள்ளோம். அவர்கள் இந்த விடயத்தில் இணங்குகின்றனர். யுத்தத்தை முன்னின்று நடத்திய பீல்மார்ஷல் சரத் பொன்சேகா கூட இந்தக் கைதிகள் விடுதலைசெய்யப்படவேண்டும் என்று கூறுகின்றார். ஜே.வி.பியினரும், பொன்சேகாவும் இந்தக் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் என்றே கூறுகின்றனர். உண்மையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. புலிப் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது. இங்கு புலிகள் இல்லை. எமது மக்கள் சௌஜன்யத்துடனேயே வாழ விரும்புகின்றனர்.
தடுப்பிலுள்ளோர்களுள் 39 பேர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். 20 பேர் புனர்வாழ்வுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். சில வழக்குகள் இன்னும் தீர்க்கப்படாதுள்ளது. பல்வேறு வழக்குகள் காலதாமதப்படுத்தப்படுகிறது.
இவ்வாறான சூழ்நிலையில், தடுப்பிலுள்ள கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கவேண்டும் என்று ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் நான் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.
அத்துடன், ஐ.நா. தீர்மானத்துக்கமைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும்.
இந்தச் சட்டம் கொடூரமானது என நீங்களே ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், எவ்வாறு அந்தச் சட்டத்தின்கீழ் இவர்களைத் தடுத்து வைப்பீர்கள்? எனவே, இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி, தடுப்பிலுள்ள கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யவேண்டும். இந்த விடயத்தைத் தாமதப்படுத்தக்கூடாது என விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (த-சி)

## காய்ச்சலால்

வரவில்லை. எனினும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள தொற்று நோய்த் தாக்கமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. கிளிநொச்சி முழங்காவிலைச் சேர்ந்த சபாநாதன் கிசாந்தன் (வயது 27) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தார். அவருக்கு ஒன்று மற்றும் நான்கு வயதுகளில் இரண்டு குழந்தைகள் உள்ளனர்.
கடந்த ஒரு மாத காலமாகக் காய்ச்சல் மற்றும் தலையிடியால் பீடிக்கப்பட்டிருந்த அவர் முழங்காவில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். எனினும் நோய் குணமடையாததால் கடந்த 21 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தபோதும் சிகிச்சை பயனளிக்காது நேற்று அவர் உயிரிழந்தார்.
விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணை மேற்கொண்டார். (த-4)

## 13 தமிழ்

தோற்றவுள்ளனர். அவர்களில் 13 பேர் தமிழ் அரசியல் கைதிகள் என்று சிறைச்சாலைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.
மகசீன்சிறைச்சாலைக்குள் அமைக்கப்படவுள்ள விசேட பரீட்சை நிலையத்தில் அவர்களுக்கான பரீட்சைகள் நடைபெறவுள்ளதாகவும் சிறைச்சாலைத்தலைமையகம்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், டிசெ. 4
வட மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தி வந்த 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.
உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 4.30 மணிக்கு இடம் பெறவுள்ள இந்த ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் அணி மோதவுள்ளது. அரையிறுதியாட்டங்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ளன. (ம-23)

## கௌரவிப்பு நிகழ்வு

சாவகச்சேரி, டிசெ. 4
முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடரில் வெற்றியீட்டிய தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு நாளை பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண் டபத்தில் இடம்பெறவுள்ளது.
வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு கிண்ணங்களும் நான்கு தொடக்கம் பத்து வரையான இடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.
தென்மராட்சி கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார்.
அத்துடன் இந் நிகழ்வில் வலய மட்ட பெருவிளையாட்டுக்களில் சாதித்த மாணவர்களுக்கான கௌரவிப் புக்களும் இடம்பெற வுள்ளன. (ம-9)

# அடுத்த வருட தேசியமட்ட போட்டிகளில் வடமாகாணம் அதிகம் சாதிக்க வேண்டும்

## பிரதம செயலாளர் பத்திநாதன் தெரிவிப்பு

மாங்குளம், டிசெ. 4
சாதனை புரிவதற்கு எந்தக் குடும்பத்தில் பிறந்திருக்கின்றோம் என்பதோ எந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்றோம் என்பதோ அல்லது பெரிய பின்புலங்களோ தேவையில்லை. பொறுமை, விடாமுயற்சி, அர்ப்பணிப்பு என்பன இருக்கின்ற போது சவால்களை இலகுவில் வெற்றிகொள்ள முடியும் இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண பிரதம செயலாளர் பத்திநாதன்.
வடமராட்சி கல்வி வலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வான வர்ண இரவு நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
மேலும் தெரிவிக்கையில் - சாதாரண பாடசாலைகளிலிருந்தும் பின்தங்கிய பாடசாலைகளிலிருந்தும் பல மாணவர்கள் சாதனைகளைப் புரிந்துள்ளார்கள். இலங்கையில் சாதனை படைத்த வீரர்கள் பலர் சாதாரண குடும்பத்திலிருந்துதான் பிறந்திருக்கின்றார்கள். தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமல் முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் வெற்றி பெறமுடியும்.

**" வடக்கு மாகாணத்தில் 12 வலயங்களுடன் போட்டியிட்டு எமது திறனை வரையறைக்குள் அடக்கிவிடக்கூடாது. தேசிய மட்டத்திலே சவாலாகத் திகழ வேண்டும். தென்னிலங்கை வீரர்களுக்கு நாம் அச்சுறுத்தலாக அமைய வேண்டும். "**

வடக்கு மாகாணத்தில் 12வலயங்களுடன் போட்டியிட்டு எமது திறனை வரையறைக்குள் அடக்கிவிடக்கூடாது. தேசிய மட்டத்திலே சவாலாகத்திகழ வேண்டும். தென்னிலங்கை வீரர்களுக்கு நாம் அச்சுறுத்தலாக அமைய வேண்டும். இம்முறை நடைபெற்ற தேசிய மட்டப் போட்டியிலே எமது மாகாணம் 6ஆம் இடத்தைப் பெற்றிருந்தது. அடுத்த வருடம் தேசிய மட்டப் போட்டி வடமாகாணத்திலே நடைபெறவுள்ளது. எமக்கு அதிகம் பழக்கப்பட்ட மண். எனவே நாம் அதிகம் சாதிக்க வேண்டும். என்றார். (ம)



# 41 ஆவது தேசிய மட்ட கராத்தே, உதைபந்தாட்டத் தொடர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 4
41ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபாலருக்குமான காரத்தே, உதைபந்தாட்டத் தொடர்கள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.
அனுராதபுரத்தில் நடைபெறவுள்ள காரத்தே தொடர் 6ஆம் திகதி வரையும், பதுளையில் நடைபெறவுள்ள உதைபந்தாட்டத் தொடர் 7ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளன. காரத்தேயில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த வீரவீராங்கனைகளும் உதைபந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த வீர வீராங்கனைகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-23)



## உதைபந்தாட்ட பயிற்சிமுகாம்

யாழ்ப்பாணம், டிசெ. 4
யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏயின் 125 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை வரை சில நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
இதன்படி நாளை காலை 6 மணிக்கு வீதியோட்ட நிகழ்வும் எதிர்வரும் திங்கட்கிழமை உதைபந்தாட்ட பயிற்சி முகாமும் இடம்பெறவுள்ளன. (ம-23)

# தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடர் கொக்குவில் இந்து வெற்றிநடை



யாழ்ப்பாணம், டிசெ. 4
தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் ஏசியன் சர்வதேச பாடசாலை அணியை வீழ்த்தியுள்ளது கொக்குவில் இந்துக்கல்லூரி.
பாடசாலைகளின் கூடைப்பந்தாட்டச் சங்கம் தேசிய ரீதியாக நடத்தும் 15வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொழும்பு சென்.ஜோசப் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து வத்தளை ஏசியன் சர்வதேச பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 49:45 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது. (ம-23)

## கராத்தே தொடர்

யாழ்ப்பாணம், டிசெ. 4
இலங்கை காரத்தே சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வடமாகாண காரத்தே சங்கம் நடப்பு வருடத்தின் இரு பாலருக்குமான காரத்தே தொடர் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளது.
யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தின் மண்டபத்தில் இடம்பெறும் இந்தத் தொடரில் முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்கள் தேசியமட்ட போட்டியில் கலந்து கொள்ளுவார்கள் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)

## தடகளத் தொடர் பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், டிசெ. 4
வவுனியா மெய்வன்மைச் சங்கத்தினால் நாளை சனிக்கிழமை நடத்தப் படவிருந்த தடகளத் தொடர்மழை காரணமாக திகதி குறிப்பிடப்படாமல் பிற்போடப்பட்டுள்ளது. காலநிலை சீரானதும் தொடருக்கான திகதி அறிவிக்கப்படும் என்று வவுனியா மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர் க.விஜிதரன் தெரிவித்துள்ளார். (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"கல்வியுலகின் கலங்கரை விளக்கு"
புதிய நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
தமிழ் & ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்
தரம் 6 முதல் தரம் 11 வரை
"வெற்றிக்கு வித்து" ஆரம்ப பிரிவு
தரம் 1 முதல் தரம் 5 வரை
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்: 06.12.2015
ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
புதிய அனுமதிகள் இன்று முதல்!

# மரண அறிவித்தல்

## மரியாம்பிள்ளை பிரான்சிஸ் சேவியர்

குளமன்கால் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் 987, கடற்கரை வீதி, வளன்புரம் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை பிரான்சிஸ் சேவியர் நேற்று (03.12.2015) வியாழக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் ஸ்ரீதேவியின் அன்புக் கணவரும் அனிஸ்ரனின் அன்புத் தந்தையும், சுபாஷினி (ஆசிரியை-யா/இந்து ஆரம்ப பாடசாலை) சுதர்ஷினி, சுதர்ஷன் ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் நல்லட்க திருப்பலி நாளை (05.12.2015) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக குளமன்கால் புனித சவேரியார் சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

987, கடற்கரை வீதி,
வளன்புரம், கொழும்புத்துறை. (66716) (10.17)

தகவல்:
பி.சே.அனிஸ்ரன்
(மகன்)

# மரண அறிவித்தல்

## கந்தையா சுப்பிரமணியம்

விமான நிலைய வீதி, பத்தமேனி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று (03.12.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் கந்தையா கந்தையா - வேலாசி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற அசுபதியின் அன்புக் கணவரும் உலகநாதன் (இத்தாலி), காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் ஜே. இராசமலர், சச்சிதானந்தம் (இத்தாலி), சர்வகுலநாதன் (சிவம்), குலசிங்கம் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நித்தியானந்த தேவி காலஞ்சென்ற ஜெகசீலன் மற்றும் சிவகுமாரி, சரோஜினி தேவி தாரணி (இத்தாலி)ஆகியோரின் அன்பு மாமனாரும் பானுஜா, தரணிகா, பிரசாந்தன், தமிழ்க்கவி, தயாளசோபன், நிறோசனா, சாரங்கா, சிந்துஜன், சூரியன், விஜிதர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஜதுன், திவர்சி ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2015) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக வுல்லிகிராய் பத்தமேனி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விமான நிலைய வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

தகவல் :
குடும்பத்தினர்.
077 6176 193
(c/20570)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
ஆசிரியர் தெரிவுக்கு
சனி,ஞாயிறு மு.ப. 10.00 முதல் 2.00 மணிவரை
அலுவலக பணியாளர் தெரிவுக்கு
பிரதி ஞாயிறு பி.ப. 1.00 முதல் 5.00 மணிவரை
விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவுக்கு
பிரதி ஞாயிறு பி.ப. 2.00 முதல் 5.00 மணிவரை
திறந்த பல்கலைக்கழக சட்டமாணி தெரிவுக்கு
பிரதி சனி பி.ப. 1.00 முதல் 5.00 மணிவரை
T.P: 0766 883394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

விசேட கருத்தரங்கு
Feb-07ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை பல்கலைக் கழக சட்டமாணி கற்கைநெறி (LLB) போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கு
ஆரம்பம்: 05.12.2015 (Sat.)
(Sat.1.00-5.00p.m)
பிரதி சனிக்கிழமைகளில் 1-4 மணிவரை நடைபெறும்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ். நகர்
T.P: 0774696695

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.
A/L 2016, A/L 2017
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
புதிய பிரிவு ஆரம்பம்
06.12.2015
Sun - 8.00மணி




# மரண அறிவித்தல்கள்

## அரிச்சந்திரன் ஜெயகுபேஸ்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் 58/41, செட்டியார் தோட்டம் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட அரிச்சந்திரன் ஜெயகுபேஸ் நேற்று (03.12.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அரிச்சந்திரன் - பார்வதி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா அன்னலட்சுமி தம்பதியினரின் மருமகனும் நாகபூசணியின் அன்புக் கணவரும் லினேஸ் (கிராம சேவையாளர் - J/114 திருநெல்வேலி), நிறோசன் (யதுசன் நகையகம்), நீரயா (ஆசிரியர் - விசுவமடு பார்வதி வித்தியாலயம்), வினோயா, சுகன்யா, சுகன்ஜன், தனுஜன், யதுசன் ஆகியோ ரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2015) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 658 8980,
0777 464 205. (66715)

தகவல்:
குடும்பத்தினர்.

## நடராஜா இரகுநாதன் (கண்ணன்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நடராஜா இரகுநாதன் நேற்று (03.12.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவராசா-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் (ஓய்வுநிலை பிரதி அதிபர்- யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) அன்புக் கணவரும், சர்மிலாவின் (ஆசிரியை-யா/பெரியபுலம் ம.வி) அன்பு தந்தையும், உமாகரனின் (கஜன்) அன்பு மாமனும், தீப்சிஹாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும், கமலாதேவி ஆகியோரின் அன்பு அண்ணனும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் பரஞ்சோதியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினம், சிவஞானசுந்தரம், விக்கினேஸ்வரன் (Engineer-Seva Builders) பிரணவஈஸ்வரன் (ஞானா-லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயவர்த்தனா-கலாமதி, பகீரதன்-ஞானதர்சினி, அசோக்குமார்-கலாநிதி, கோகுலதாஸ்-கலா ஜோதி (பிரான்ஸ்) றஜீபன்-கலாராணி (யா/இளையதம்பி இந்.வித்) சசிகலா, சூரியகலா, மனோகரன், ஞானேஸ்வரி, சித்திரா, சிவரூபன்-ஜலஜா, கரிகரரூபன்-சுதர்ணமேனி, கஜரூபன்-அபிராமி, சிவரூபன்-சோபனா, பிரிஜங்கா, சாயகி ஆகியோரின் அன்பு மாமனும், விஜயகுமார், ஜெயக்குமார், செல்வகுமார், சுகுமார் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், இரகுநாதன்-யோகமலரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (66714) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.